www.padippakam.com

பிப் - மே '94 மக்கள் கலை இலக்கியக் கழக இதழ் விலை ரூ. 3.00

# புதிய கலாச்சாரம்



## போலி மார்க்சிஸ்டின் வேத உபதேசம்

படிப்பகம்

www.padippakam.com

# பாண்டியிலும் தலைநீட்டும் பார்ப்பன மதவெறி

வடக்கே பாபர் மசூதியை இடித்துத் தரைமட்டமாக்கி அந்த இடத்தில் ராமன் குடும்பத்தினரை நட்டு வைத்தனர். டெல்லி நாற்காலியைக் குறிவைத்து ஆடிய ஆட்டத்தில் உள்ள நாற்காலியையும் பறி கொடுத்தது பார்ப்பனக் கும்பல். ராமஜென்ம பூமி இப்போது மரணபூமியாகி விட்டது. காவலுக்கு நிற்கும் போலீஸ்காரர்கள் அவ்வப்போது ராமனை 'தரிசிக்க' வரும் நாய்களை விரட்டிக் கொண்டிருக்கிறார்கள். ராமனை நாய் கவ்விக் கொண்டு போய்விட்டால் இன்னொரு 'தேசியப் பிரச்சினை ' ஆரம்பமாகி விடுமே!

தேசிய அவமானங்களைத் தேடி நாடு முழுவதும் குறுக்கு நெடுக்காக அலைந்து கொண்டிருக்கும் பாரதிய ஜனதா கும்பலுக்கு தெற்கே பாண்டிச்சேரியில் ஒன்று அகப்பட்டிருக்கிறது. அதுவும் பாண்டிச்சேரி முதல்வர் வீட்டுக்கு (நாற்காலிக்கு அல்ல) அருகிலேயே.

பாண்டிச்சேரி புனித ஜென்மாக்கினி மாதா கோயில் வேதபுரீசுவரர் ஆலயத்தை இடித்து விட்டு அதன்மீது கட்டப்பட்டது என்றும், 1748 இல் பிரெஞ்சு கவர்னராக பாண்டிச்சேரியிலிருந்த டியூப்ளே தான் இவ்வாறு கட்டினான் என்றும் கூறுகிறது இந்து முன்னணி. தனது 'கண்டுபிடிப்புக்கு' ஆதாராரமாக பிரெஞ்சு கவர்னரிடம் துபாஷியாக (மொழிபெயர்ப்பாளராக) இருந்த ஆனந்தரங்கம் பிள்ளையின் டயரிக் குறிப்புகளிலிருந்து ஒரு பகுதியைக் காட்டுகிறது.

1748 இல் பிரெஞ்சுக் காரர்களுக்கும், பிரிட்டிஷ்காரர்களுக்குமிடையே போர் நடந்தபோது பிரெஞ்சுக் கோட்டையைத் தொலைவிலிருந்தே அடையாளம் கண்டுபிடிக்க இந்தக் கோயிலின் கோபுரம் ஆங்கிலேய பீரங்கிப் படைக்கு வசதியாக இருந்தது என்பதால் டியூப்ளே இதை இடிக்க உத்தரவிட்டதாக டைரிக் குறிப்பு கூறுகிறது.

கோயில் . இடிக்கப்பட்டது உண்மை என்பதும், ஆனால் அது மதக் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக இடிக்கப்படவில்லை என்றும் டைரிக் குறிப்புகளிலிருந்து தெரிகிறது. ஒரு வேளை மதக் காழ்ப்புணர்ச்சியின் அடிப்படையில் இடிக்கப்பட்டிருந்தாலும் அதில் அதிசயப்படுவதற்கு ஒன்றும் இல்லை.

ஆனால் இடிக்கப்பட்ட இடத்தில் மாதா கோயில் கட்டப்படவில்லை. கோயிலுக்கு அருகில் மாதாகோயிலும் இருந்தது என்பதையே டைரிக்குறிப்பு கூறுகிறது.

தற்போது இருக்கின்ற மாதகோயிலின் வரலாறு என்ன? பிரெஞ்சு மன்னனின் உதவியுடன் 1692 இல் அங்கே ஒரு சர்ச் கட்டப்பட்டது. சரியாக ஒரே ஆண்டில் பாண்டிச்சேரியின் மீது படையெடுத்த டச்சுக்காரர்கள் அதை இடித்துத் தரை மட்டமாக்கி அதே இடத்தில் தாங்கள் புதிதாக ஒரு தேவலாயம் கட்டினார்கள். 1761 இல் ஆங்கிலேயர்கள் அதை இடித்துத் தள்ளினார்கள். அதன் பிறகு 1791 இல் கட்டப்பட்டதுதான் தற்போது அங்கே இருக்கும் மாதா கோயில்.

ஜென்மராக்கினி மாதா கோயில் என்பது இதன் பெயராக இருந்தாலும் உள்ளூர் மக்களால் சம்பா கோயில் என்றே அழைக்கப்படுகிறது. போர்த்துகீசிய பாதிரிகளை 'சாம்பவுலோ' என்று அழைப்பர்; அதுவே மருவி சம்பா கோயில் என்றாகியிருக்கிறது. ஆனால் சம்பாலீசுவரர் என்பதுதான் மருவி சம்பா கோயிலாகியிருக்கிறது என்று புதுக் கடவுளை உருவாக்குகிறது இந்து முன்னணி.

ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுக்காரர்கள், டச்சுக்காரர்கள் ஆகிய மூவருமே கிறித்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள் தானெனினும் ஒருவர் கட்டிய மாதா கோயிலை இன்னொருவர் இடிக்கக் காரணம் என்ன? அரசியல் பகைமை. இதேபோல இந்து மன்னர்கள் இடித்த இந்துக் கோயில்களுக்கு கணக்கு வழக்கே கிடையாது.

வேதபுரீசுவரர் கோயிலை இடிக்க உத்தரவிட்ட டியூப்ளே அருகிலிருந்த மசூதியையும் இடிக்கச் சொன்னதாகவும், ஆனால் முகமதிய சிப்பாய்களின் எதிர்ப்பால் அது இடிக்கப்படவில்லை என்றும் டைரிக் குறிப்பு கூறுகிறது.


டைரிக் குறிப்பின் இந்தப் பகுதியை எடுத்து வெளியிட்டு, ''முஸ்லீமுக்கு இருக்கும் ரோசம் இந்துவுக்கு இல்லை'' என்று சூடேற்றப் பார்க்கிறது இந்து முன்னணி.

ஆனந்தரங்கம் பிள்ளை டைரிக் குறிப்புகளை 1970 இல் தினமணிக்கதிர் வெளியிட்டிருக்கிறது. ஏதோவொரு பட்டாணி சுண்டல் வியாபாரியின் மூலமாக இந்த மாபெரும் ரகசிய ஆவணம் இந்து முன்னணி பைத்தியமொன்றின் கையில் சிக்கியிருக்கும் போலிருக்கிறது.

கடந்த பிப்ரவரி - 17ம் தேதி பாபுசிங், சிவலிங்கம் என்று இரண்டு பைத்தியங்கள் மாதா கோயிலுக்குச் சென்று அங்கே கற்பூரம் கொளுத்தியிருக்கின்றனர். கற்பூரம் கொளுத்துவதென்ன, வாசலில் உட்கார்ந்து மொட்டையே போட்டிருந்தாலும் அதைக் கண்டு பாதிரியார் பதறியிருக்கப் போவதில்லை. ஏனென்றால், இந்துக்கள் பலர் அந்த மாதாகோயிலுக்கு வருவதும், அவர்கள் தங்கள் விருப்பப்படி கற்பூரம் கொளுத்தி வழிபடுவதும் வழக்கமாக அங்கே நடப்பவை தானாம். கற்பூரத்தைக் கொளுத்திய பின்னரும் பாதிரியாரிடமிருந்து எதிர்ப்பு ஏதும் வராததால், நேரே அவரிடமே சென்று ஒளித்து வைத்திருக்கும் சிவலிங்கத்தை உடனே ஒப்படைக்குமாறு தகராறு செய்துள்ளனர்.

உடனே மாதாகோயில் வாசலில் போலிஸ் காவல் போடப்பட்டிருக்கிறது. மார்ச் - 10ம் தேதி சிவராத்திரியன்று மாதா கோயிலின் வாசலில் கற்பூரம் கொளுத்தி அகிம்சை வழியில் போராட்டத்தைத் துவக்கப் போவதாக அறிவித்தது இந்து முன்னணி. ''சுவாமி அரவிந்தரும், மகாகவி பாரதியும் வாழ்ந்த புதுவை மாநிலத்திலா அடிமைச் சின்னம்?'' என்று பிரசுரம் அடித்து விநியோகித்தது. எல்லாத் தரப்பு மக்களிடமிருந்தும் எதிர்ப்பு வலுக்கவே போராட்டத்தைக் கைவிட்டு பின் வாங்கிக் கொண்டது.

இந்துமத பாசிச வெறியர்கள் உரிமை கொண்டாடும் மாதா கோயில்





தொடர்ச்சி - 23 ஆம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• போர்: 11
• குரல்: 9-12
• பிப்-மே '94

உள்நாடு:
தனி இதழ்: ரூ.3
ஆண்டுச் சந்தா: ரூ.36

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 8.5

படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்

ஆர். சீனிவாசன்,
45, செங்குன்றம் சாலை,
வில்லிவாக்கம்,
சென்னை-600 049.

# ''இந்து'' — ஒரு கழிசடைப் பண்பாட்டுப் படையெடுப்பு

''கழிசடைப் பேர்வழிகளின் கடைசிப் புகலிடம் அரசியல்'' என்பது இப்போது ஒரு பகுதி அளவுக்குதான் சரியானது. உடல் உழைப்பாலோ, மூளை உழைப்பாலோ சமூகத்தின் ஆக்கபூர்வமான முன்னேற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் பாடுபடத் தகுதியற்ற கழிசடைப் பேர்வழிகளை இன்றைய ஏகாதிபத்திய முதலாளிய சமூக அமைப்பு பெருமளவு உருவாக்கியுள்ளது. ஆகவே அந்தக் கழிசடைப் பேர்வழிகள் புகலிடம் தேடிக் கொள்வதற்கான வாய்ப்புகளையும் அதே அளவுக்குப் பெருக்கியுள்ளது. ஆபாசம் - களிவெறியாட்டம் - விபச்சாரம் - சூதாட்டம் இப்படிப்பட்ட கேளிக்கைகளுக்கு என்றே அமெரிக்காவின் 'லாஸ் வெகாஸ்'' நகரம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதேபோல பன்னாட்டு தேசங்கடந்த தொழில் - வங்கிக் கழகங்கள் ''பாலுறவு சுற்றுப் பயணங்கள்'' ஏற்பாடு செய்வதற்கு என்றே ஸ்பெயின், சுவிஸ், பிரான்சு, இத்தாலி ஆகிய மேலை நாடுகள் முதல் பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, ஹாங்காங், தென் கொரியா ஆகிய கீழைநாடுகள் வரை உலகின் பல இடங்களிலும் ''விடுதி நகரங்கள்'' உருவாக்கப்பட்டிருக்கின்றன.

இது ஒருவகையான கழிசடைகளின் தொழில் என்றால், உலகம் முழுவதும் அரிய உலோகங்கள், கலைப்பொருட்கள், மின்னணு சாதனங்கள், விலங்கினப் பொருட்கள் முதல் சர்வதேச நாணயங்கள், போதைப் பொருட்கள், விபச்சாரத்துக்குப் பெண்கள், நச்சுப் பொருட்கள் போன்றவற்றைக் கடத்தவும் கொலை - கொள்ளை - பணயக் கைதிகளைப் பிடிப்பது வரை கிரிமினல் குற்றங்களைத் தொழிலாகக் கொண்ட மஃபியாக்களை நடத்துவது கழிசடைப் பேர்வழிகளின் இன்னொரு வகைத் தொழில். இவை போன்றே மக்களிடையே கீழ்த்தரமான - வக்கிரமான உணர்வைத் தூண்டி, அதற்குத் தீனி போடுவதையே வியாபாரமாகக் கொண்ட சினிமா, வானொலி, வானொளி, பத்திரிக்கைகள் ஆகிய மக்கள் தொடர்பு சாதனங்களை ஆக்கிரமித்துக் கொண்டு கழிசடைப் பேர்வழிகள் நடத்துவது மேலும் ஒருவகைத் தொழில்.


இராஜீவ் காந்தியினால் தொடங்கப்பட்டு, நரசிம்மராவ் தொடர்ந்து செய்து வரும் தாராளமயமாக்கும் தனியார் மயமாக்கும் கொள்கை நமது நாட்டின் விவசாயம், தொழில், வணிகத் துறைகளை அந்நிய ஏகாதிபத்திய - ஏகபோக முதலாளிகளிடமும் அவர்களின் இந்தியத் தரகர்களிடமும் முற்றாகத் தாரை வார்த்து விட்டன. அதோடு அக்கொள்கை உலகம் முழுவதும் பரவிவரும் மேற்படித் தொழில்களை நமது நாட்டுக் கழிசடைப் பேர்வழிகளின் புதிய புகலிடமாகத் திறந்துவிட்டிருக்கிறது. சமந்தா பாக்ஸ், மைக்கேல் ஜான்சன் போன்றவர்களது ''கலை'' நிகழ்ச்சிகள் நடத்துவது, விண்கோள்கள் மூலம் வானொளி நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவது போன்றவை முதல் தொலைபேசி மூலம் பெண்களின் ஆபாச-வக்கிர ''உரையாடல்'' சேவைகள் நடத்துவது வரை இப்படிப்பட்ட தொழில்கள் விரிவடைந்து கொண்டே போகின்றன. இந்த வகையில், அரசியலில் ஜெயலலிதாவின் நுழைவு எப்படி ஒரு புதிய, பொறுக்கி அரசியலின் திருப்பு முனையாக அமைந்ததோ, அதே போன்று தமிழ்நாட்டில் ஒரு கழிசடைக் கலாச்சாரத்தின் திருப்புமுனையாக அமைந்துள்ளதுதான் ''இந்து'' சினிமாவின் வரவு.

இந்திய, தமிழ் நாட்டுச் சினிமாக்களில் இதற்கு முன்பு ஆபாசங்கள் இல்லாமல் இல்லை. சட்ட விரோதமான முறையில் ''துண்டுப் பகுதிகள்'' இணைக்கப்பட்ட சினிமாக்கள், இரகசிய உலகின் ''நீல'' சினிமாக்கள், காமாந்திரப் புத்தகங்கள் கூட இல்லாமல் இல்லை. ஆனால் இவற்றையெல்லாம் இந்த நாட்டின் சமூக அமைப்பு ஏற்று அங்கீகரித்துவிடும் பண்பாட்டின் ஒரு பகுதியாக மாற்றி விடும் கழிசடைக் கலாச்சாரத்தின் தொடக்கமாக ''இந்து'' சினிமா வந்திருக்கிறது.

பாலுறவு வக்கிரங்களைச் செய்து காட்டுவதையும் கண்டுகளிப்பதையும் ஆங்கிலத்தில் ''வாயரிசம் - VOYERISM'' என்று சொல்வார்கள். (விபச்சாரத்தை விடக் கேடு கெட்டது அத்தொழில்) அது தமிழர் பண்பாட்டில் இல்லாததால் அத்தகைய சொல் கூட தமிழில் கிடையாது. இப்போது தமிழர் பண்பாட்டிற்கும், தமிழினத்திற்கும் அந்நியமான ஒரு கும்பல் அந்தக் கழிசடைக் கலாச்சாரத்தைத் தமிழகத்திற்கு இறக்குமதி செய்கிறது. இனிவரும் சினிமா, வானொளி நிகழ்ச்சிகள் குறைந்தது இந்த அளவு ஆபாசம் - வக்கிரம் - வன்முறை இன்றி எடுபடாது என்கிற ஒரு ''தரத்தை'' ''இந்து'' சினிமா ஏற்படுத்தியிருக்கிறது. பொறுக்கி அரசியலின் விளைவுகளைக் காட்டிலும் மிகவும் கேடானது, அபாயகரமானது இந்தக் கழிசடைக் கலாச்சாரம். உண்மையில் இது ஒரு பண்பாட்டு படையெடுப்பு. எதிர்த்து முறியடிக்காவிடில் நாம் நமது பண்பாட்டு வேர்களை இழந்து, பண்பாட்டுத் துறையிலும் அடிமைகளாவோம்.

படிப்பகம்

www.padippakam.com



# மகாநதி அல்ல கானல்நீர்

**ம**காநதிக்கு விமரிசனம் எழுதுவதா, மகாநதியைப் பற்றி பல பத்திரிகைகளும் எழுதியுள்ள 'விமரிசனங்களு'க்கு விமரிசனம் எழுதுவதா என்று புரியவில்லை. ''மகாநதியில் ஒரு குளியல் - தினமணிக்கதிர்'', ''மகாநதியும் கமலும் - ஒரு உணர்ச்சிகரமான சந்திப்பு - ஜீ.வி.'', ''இந்திய அறவியலைக் கேள்விக்குள்ளாக்கும் மகாநதி - கணையாழி'', ''21-ம் நூற்றாண்டின் மத்தியில் தோன்றும் ஒரு ரசிகன்கூட மகாநதியைப் பார்த்து விமரிசனம் எழுதலாம் - சுபமங்களா'', ''புதிய தமிழ் சினிமாவின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட முதல் மூன்று படங்களை பிற்காலத்தில் பட்டியலிட்டால் அதில் மகாநதிக்கு ஒரு இடத்தைக் கொடுத்தே தீர வேண்டும் - புதிய பார்வை''

இப்படியெல்லாம் குளிப்பாட்டப்படும் அந்த நதியின் கதை என்ன? தானுண்டு தன் பிள்ளைகளுண்டு என்று உள்ளதைக் கொண்டு உவந்து வாழும் தஞ்சாவூர் கிராமத்து பெரிய மனிதன் கிருஷ்ணசாமி - மனைவியை இழந்தவன். பணம் சம்பாதிக்க ஆசைகாட்டி, பட்டணத்துக்கு இழுத்துக் கொண்டு வந்து, சீட்டுக் கம்பெனி தொடங்க வைத்து, மோசடி செய்து கிருஷ்ணசாமியை (கமல்ஹாசனை) சிறைக்கனுப்புகிறான் தனுஷ் என்ற விபச்சாரத் தரகன். பாதுகாப்புக்கு இருந்த மாமியாரும் இறந்து கிருஷ்ணசாமியின் மகள் விபச்சார விடுதிக்கு விற்கப்படுகிறாள்; மகன் கழைக்கூத்தாடியாகிறான்.

செய்யாத மோசடிக்குச் சிறை சென்ற கிருஷ்ணசாமி, விடுதலையாகி வந்து தன் வாழ்க்கையைக் கெடுத்த தனுஷையும், தன் மகளைக் கெடுத்த தொழிலதிபரையும் கொலை செய்து மீண்டும் சிறை செல்கிறான். எட்டாண்டுகளுக்குப் பின் சிறை மீண்டு தன் காதலியுடனும் பேரப் பிள்ளைகளுடனும் ஒன்று சேர்கிறான்.

''இதுதானா கதை? இதற்கா இவ்வளவு புகழாரங்கள்?'' என்று படம் பார்க்காதவர்கள் வியக்கக்கூடும்.

''கதை இதுதான்; ஆனால் இதுமட்டும் இல்லையே...'' என்று இழுப்பார்கள் படம் பார்த்தவர்களில் சிலர். அந்த இழுப்புதான் மகாநதியின் இழுப்பு.

**அ**ளவான நடிப்பு, அளவான மசாலா, தூக்கலான சென்டிமெண்ட், திகட்டிவிடாமலிருக்க ஊறுகாயாகப் பயன்படும் யதார்த்த சித்தரிப்புகள், அவற்றின் காட்சிப் படிமங்கள் மற்றும் சமூக விமரிசனங்கள் - இவையனைத்தும் கலந்து வருவதுதான் மகாநதி.

கதையின் மையக்கருவையும், நோக்கத்தையும் கோட்டை விட்டுவிட்டு 'தோள் கண்டேன் தோளே கண்டேன்' என்று இறங்கிப் போனவர்கள்தான் மகாநதியில் இழுபட்டவர்கள்.

இப்படி இழுக்கின்ற காட்சிகளில் முக்கியமானது சிறையைச் சித்தரிக்கும் காட்சிகள். மகாநதியில் மூழ்கியவர்கள் முதலில் சிக்கிய சுழல் இதுதான்.

சிறையின் குரூரமான வன்முறைத் தன்மையைச் சித்தரித்துக் காட்டியதன் மூலம் பார்வையாளர்களின் மனநிலையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திவிட்டதாகப் புகழ்கிறது கணையாழி விமரிசனம்.

கதாநாயகர்களை உள்ளே தள்ள ஏ.வி.எம். தனது ஸ்டுடியோவில் நிரந்தரமாகக் கட்டி வைத்துள்ள சென்னை - மத்திய சிறைச்சாலையின் நுழைவு வாயிலையும் திட்டிக் கதவையும் தாண்டி தமிழ் சினிமாவின் காமெரா உள்ளே போனதில்லை என்பது உண்மைதான். ஆனால் இப்போது கமலின் காமெரா சிறைக்குள்ளே போன தன் நோக்கம் என்ன? சிறை என்னும் அடக்குமுறைக் கருவியின் உண்மை முகத்தை உலகுக்குக் காட்டுவதற்கா? இல்லை.

''கிருஷ்ணசாமி ஹீரோ ஆகி அடுத்த ஆளை அடிக்கிறதுக்கு முந்தி சிறைக் கொடுமைகள் அது.. இதுன்னு கொஞ்ச நேரத்தை இழுக்க வேண்டியிருந்தது'' என்கிறார் கமல்ஹாசன்.

பொங்கல் மாடுபிடியும், காவிரிக் குளியலும், கபடி ஆட்டமும் வெறும் அழகியல் ரசனையின் பாற்பட்ட காட்சிகள் அல்ல; தானுண்டு தன் குடும்பமுண்டு என்று யாருக்கும் தீங்கு நினைக்காமல் வாழ்ந்த கிருஷ்ணசாமியின் மீது அனுதாபத்தைத் தோற்றுவிக்க நகர்த்தப்பட்ட காய்கள்.

தனுஷால் ஏமாற்றப்பட்டு நாலு வருசம் ஜெயிலுக்குப் போய் விட்டு வந்தான் கிருஷ்ணசாமி என்று திட்டிக் கதவைத் திறந்து மூடியிருந்தால் அவன் செய்யவிருக்கும் கொலைகளுக்கான நியாயம் கிடைக்காது.

கிருஷ்ணசாமியின் கண்முன்னே அவன் மகளைக் கற்பழித்து, மாமியாரை ஏதாவது ஒரு கலர் பல்பு போட்ட சக்கரத்தில் கட்டி சுற்றவிட்டு, மகனை ஜீப்பில் கயிறு கட்டி இழுத்து ரத்த விளாறாக்கி அப்புறம் கிருஷ்ணசாமியை ஜெயிலில் தள்ளி இந்த 'நியாயத்தை' உருவாக்கியிருக்கலாம். இதையெல்லாம் செய்ய முடியாமல் போனதால் இத்தேவையை ஈடுகட்ட சிறை.

தனுஷ் தானே முன்னின்று நடத்தியிருக்க வேண்டிய கொடுமைகளுக்குப் பதிலாக, அதாவது வில்லன் கதாநாயகனுக்கு இழைக்கும் கொடுமைகளின் நீட்சியாகவே சிறை வருகிறது. குப்பனுக்கும், சுப்பனுக்கும் உழைக்கும் வர்க்கத்திற்கும் எதிரான நிறுவ



படிப்பகம்

www.padippakam.com

னமாக அல்ல. சிறை மாறுபட்ட கோணத்தில் சித்தரிக்கப் பட்டிருப்பது போலத் தோன்றுகிறதுஎன்றால் அது புல்லுக்கும் பொசிந்த நீர் மட்டுமே.

''சமூகத்தை விமரிசிக்கும் குரல்களை ஏ[illegible] நடுத்தர வர்க்கத்தின் நடுவில் இவ்விமரிசனம [illegible] பொறுப்பானது.

அவலங்களை ஏற்கும் மன நிலையை அதிர்ச்சிக்குள்ளாக்கும் படம் மகாநதி''

இந்தப் புகழாரங்கள் தகுதியானவை தானா?

பாதிக்கப்பட்ட கதாநாயகன் உயர் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவன் என்பதால் நடுத்தர வர்க்கப் பார்வையாளர்கள் அவனில் தன்னைக் காண்கிறார்கள். தனது துன்பத்திலிருந்து மீள்வதற்கு நாயிடம் மண்டியிடவும் தயாராக இருக்கும் நடுத்தர வர்க்கம், அதனாலும் பயனில்லையெனும் போது புரட்சி பேசுகிறது. சமூக அவலங்களைச் சாடுகிறது. இத்தகைய மனநிலையில்தான் கிருஷ்ணசாமியிடம் தன்னைக் காண்கிறான் நடுத்தர வர்க்க ரசிகன். தனது பிரச்சினைக்கு ஒரு தீர்வு கிடைத்த அந்தக் கணத்திலேயே — கிருஷ்ணசாமி கடைசியாக சிறையிலிருந்து வெளி வந்தவுடனே — நடுத்தர வர்க்கத்தின் புரட்சி முடிவடைகிறது.

வேறு விதமாகப் பார்ப்போம். கதாநாயகன் ஏன் வாழ்ந்து கெட்டவனாக இருக்க வேண்டும்? ஏனென்றால் கதாநாயகன் இழப்பதற்கு ஒரு வாழ்க்கை ஏற்கெனவே இருந்திருக்க வேண்டும். கதாநாயகன் ஒரு துணை நடிகராகவும், அவனது பாத்திரம் ஒரு கூலிக்காரனாகவும் இருந்து, கண்ணீரை வரவழைக்கும் சென்டிமெண்ட் காட்சிகளின் பின்பலமும் இல்லாமலிருந்திருந்தால் மகாநதியின் கதி என்னவாக இருந்திருக்கும்?

நடைபாதைவாசியை போலீசு அடித்து இழுத்துச் சென்று பொய் வழக்கு போடுவதை அன்றாடம் சன்னல் வழியே பார்க்கும் நடுத்தர வர்க்கம் மன அதிர்ச்சி கொள்வதில்லை; சக நடைபாதைவாசியும் அலட்டிக் கொள்வதில்லை. அடித்து இழுத்துச் செல்லப்படுபவன் நடுத்தர வர்க்கப் பேர்வழியாக இருந்தால் அங்கே 'கதை' இருக்கிறது.



சிறைக்குள் அடிதடி: கிருஷ்ணசாமியை ஹீரோவாக்கும் உத்தி

மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகளில் 100-க்கு 99 பேர் ஏழைகளாக இருப்பினும், பேபி ஷாம்லி மட்டுமே அஞ்சலியாக முடிந்ததற்குக் காரணம் என்னவோ அதுவேதான் கிருஷ்ணசாமி மிராசுதாராக இருக்கக் காரணம். ஜெயலலிதாவின் 'கற்புக்கு' முதல்வர் பதவி; பத்மினிக்கு மருத்துவமனை ஆயா வேலை.

இரக்கமற்ற ஓநாய்களாக மேட்டுக் குடி வர்க்கமும் கருணையின் இயல்பான இருப்பிடங்களாக சாமானியர்களும் சித்தரிக்கப்படுவது கண்டு கணையாழியும் சுபமங்களாவும் புல்லரித்துப் போகின்றன. இது புளித்துப் போன எம்ஜியார் கதை என்பது ஒருபுறமிருக்க, தான் ஏழைகள் இதயத்தில்தான் குடியிருப்பதாக பல புராணங்கள் மூலம் 'கடவுளே' பல்வேறு சந்தர்ப்பங்களில் வாக்குமூலம் தந்திருக்கிறார். அப்புறமென்ன புதுமையோ!

மகாநதி தோற்றுவிக்கும் மாயையையும், அதற்கு அறிவார்ந்த விமிசகர்கள் போடும் சாம்பிராணி புகை மூட்டத்தையும் கலைக்க, ஒன்று படம் பார்த்துட்டு வரும் ரசிகனிடம் படத்தின் செய்தியைக் கேட்க வேண்டும்; அல்லது சரிகை வேலைப்பாடுகளில் கிறங்கிப் போகாமல் கதையின் மைய இழையை நோக்க வேண்டும்.

சொந்த வாழ்க்கையில் பாதிக்கப்படும் நல்லவன் குமுறி எழுந்து பழி தீர்ப்பதும் (சாது மிரண்டால்), தன் அனுபவத்திலிருந்து சமூகத்தைச் சாடுவதும் ஐதர் காலத்துக் - இல்லை வியாசர் காலத்து - கதை. மகாநதியில் சமூக விமிசனங்கள் முன் வைக்கப்ப[illegible] என்ன? அவை பூர்ணம் விசுவநாதனுடனும் ராஜேஷுடனும் கமலஹாசன் நடத்தும் விவாதங்களாகவே உள்ளன. கலைத்தன்மை பொருந்திய காட்சிகளெல்லாம் கிருஷ்ணசாமியின் தனிப்பட்ட சோகத்துக்கும், கோபத்துக்கும் கனம் கூட்டுவதற்கே பயன்படுகின்றன.

''நீ அங்கே வரல, அங்கே காவேரியப்போல் எத்தனை பொண்ணுங்க தெரியுமா?'' என்று கமல்ஹாசன் சுகன்யாவிடம் சொல்வதும் 'சாக்கடையா வச்சிருக்கிறதாலதான் எல்லாரும் ஒன்னுக்கடிக்கிறான்'' என்று பூர்ணம் விசுவநாதனை மடக்குவதும், கதாநாயகன் தனது சோகத்தை சமூகத்தின் சோகத்தில் காண முயல்வது போன்ற பிரமையை ஏற்படுத்தலாம். தனுஷையும், தன் மகளைக் கெடுத்த ஆலை அதிபரையும் தீர்த்துக் கட்ட வேண்டும் என்ற முடிவுக்கு சமூக விமரிசனம் எதற்கு? இதுதான் ஒட்டு வேலை. கிருஷ்ணசாமி உடனே புரட்சிக்காரனாக மாறியிருந்தால் அது அபத்தம்; புரட்சிக்காரன் போல் நடித்திருப்பதோ மோசடி.

சில வேடிக்கை மனிதரைப் போல் வீழ்வேனென்று நினைத்தாயோ என்ற பாரதியின் கவிதை வரிகள் கிருஷ்ணசாமியின் கோபத்திற்கு ஒரு சமூகப் பரிமாணம் கொடுப்பதற்கென்றே செருகப்பட்டிருக்கின்றன. பாலு மகேந்திராவின் 'வீடு' படத்தை இங்கே ஒப்பிட்டுப் பார்ப்போம். சிறிய அழகான சொந்த வீடு என்பது நடுத்தர வர்க்கம் முழுவதின் கனவுதான். எனவே அந்தப் படத்தில் கனவு நொறுங்கும் கடைசிக் காட்சியில் 'காணி நிலம் வேண்டும்' என்ற பாடலை அதற்கேயுரிய அற்ப உணர்வை நீக்கும் விதத்தில் கம்பீரமாக மெட்டுப் போட்டு பின்னணியில் ஒலிக்கச் செய்திருந்தால் எவ்வளவு அருவெறுப்பாக இருந்திருக்கும்?

தன் எதிரியைக் கொன்றுவிட்டு, ஒரு கையை இழந்த பின்னும் 'வீழ்வேனென நினைத்தாயோ' என்று நிமிர்ந்தெழ முயலும் கிருஷ்ணசாமியை வீழ்த்துவது எதிரில் நிற்கும் போலீசு அதிகாரி அல்ல — கதை.

இந்தச் சமூக அமைப்பினால் தனிப்பட்ட முறையில் கடுமையான பாதிப்புக்கு, ரசிகர்கள் கண்கலங்குமளவு கடுமையான பாதிப்புக்கு உள்ளானால் மட்டுமே ஒருவன் சமூக உணர்வு பெற முடியும் என்ற மசாலா தத்துவத்தையே, அவ்வளவு மசாலாத்தனம் இல்லாமல் சொல்கிறது மகாநதி.

கதையில் சமூக நோக்கம் பற்றி பரிமேலழகர்களும், கோனார்களும் உரை எழுதிக் கொண்டிருக்கையில் 'ஒரு சின்ன தவறான ஸ்டெப்பால நல்ல மனுஷனோட வாழ்க்கையும் கூட எப்படி தலை கீழா மாறிடும்கிற பாடத்தைக் கத்துத் தர்ற படம்'' என்று கதையின் நோக்கத்தை, கமல்ஹாசன் தெளிவாக்கிவிட்டார். இதற்குப் பின்னரும் மகாநதிக்கு ''சமூக உள் நோக்கம்'' கற்பித்து எழுதுவது கமல்ஹாசனுக்கே வெட்கத்தைக் கொடுத்துவிடும்.

கல்கத்தாவிலிருந்து பெண்ணை மீட்டு வரும் காட்சிக்கு ''சமூக உணர்வு'' சேர்க்கும் பாடலில் ''பயங்கர வாதம் ஒழிக, ஒருமைப்பாடு ஜிந்தாபாத், ஜனநாயகம் வெல்க'' - எல்லாம் வருகிறது. ஒலிப்பேழையில் உள்ள வரிகள் படத்தில் காணோம். மகள் கிடைப்பதற்குமுன் ஜனநாயகத்தைச் சாக்கடை என்று பேசிய கதாநாயகன் மகளுடன் திரும்பும்போது கங்கையின் புனிதத்தை பாவிகள் கெடுப்பதாகப் பாடுகிறார். சுவாரசியமான சமூக உணர்வுதான்.

படிப்பகம்

www.padippakam.com

அதுசரி, கிருஷ்ணசாமியின் வன்முறை நியாயமென்றால் 'பயங்கரவாதிகளின்' வன்முறை மட்டும் ஏன் தவறு? விபச்சார விடுதியிலிருந்து பெண்ணை மீட்பது நியாயம் என்றால் இந்தியாவையே விபச்சார விடுதியாக்கித் தன் தாய் மண்ணை அந்நியனுக்குக் காட்டிக் கொடுக்கும் டெல்லி தனுஷ்களிடமிருந்து அஸ்ஸாமும் காஷ்மீரும் விடுதலை பெற நினைப்பது எப்படிக் குற்றம்?

''எல்லோரையும் போல கொஞ்சம் வசதியா இருக்க ஆசைப்பட்டேன்'' என்று தன் துன்பத்திற்குக் காரணத்தை பரிதாபமாகச் சொல்கிறான் கதாநாயகன். சீட்டுக்கம்பெனி நடத்த எல்லோராலும் ஆசைப்பட முடியாது; அதற்கே ஒரு வசதி வேண்டும். தனக்கு மேல் உள்ளவர்களைப் பார்த்துப் பெருமூச்செறிவதும், அத்தகைய சந்தர்ப்பங்களில் தவறியும் குனிந்து, தம்மின் மெலியாரைக் கண்டு விடாமல் இருக்க, தன்னிரக்கத்தை வளர்த்துக் கொள்வதும் நடுத்தர வர்க்கத்தின் குணம். ஆனால் இதுதான் திரைக்கதையின் அடித்தளம்.

பங்குச் சந்தையில் (சூதாடி) ஏமாந்து போன நடுத்தர வர்க்க நாயகனை மையமாக வைத்துக் கதையெழுத எண்ணியதாகவும், அது பலருக்குப் புரியாது என்பதால் சீட்டுக்கம்பெனி கதையை எடுத்துக் கொண்டதாகவும் சொல்கிறார் கமல்ஹாஸன்.

பங்குச் சந்தைச் சூதாடிகளால் பாதிக்கப்பட்ட சாதாரண மக்களின் அவலத்தைக் காட்டிலும், 'சூது வாது தெரியாமல் சூதாடித் தோற்ற தருமர்களி'ன், அவலம் தான் இன்றைய சமூகத்தின் முக்கியப் பிரச்சினை போலும்!. 'கமல் வெறும் கலைஞனல்ல சமூக மனிதன்' என்று கோமல் கொடுத்திருக்கும் சான்றிதழ் இந்த இடத்தில் நினைவு கூறத் தக்கது.

தனுஷ் - அற்புதமான நடிப்பு, தில்லானா மோகனாம்பாள் வைத்திக்குப் பிறகு தமிழ்த்திரையில் தோன்றியிருக்கும் உண்மையான 'மாமா'. 'ஜுனியர் விகடன்' மனித உருக்கொண்டு வந்ததோ என்ற பிரமிப்பு ஏற்பட்டது. ''மகாநதி'' — கமலுடன் ஒரு உணர்ச்சிமயமான சந்திப்பு'' என்ற பேட்டிக் கட்டுரையைப் படித்த பின் ஒருவேளை ஆசிரியர் மதன் அந்தப் பாத்திரத்தை ஏற்று நடித்திருந்தால் புதிய எல்லைகளைத் தொட்டிருப்பார் என்று தோன்றியது.

(ஜீ.வி. பேட்டி படிக்காதவர்களுக்கு மாதிரிக்கு ஒரு கேள்வி — மதனின் பேட்டியிலிருந்து: ''முன்னே பின்னே கொஞ்சம் இடறியிருந்தாலும் தோல்விக்கு இரையாகியிருப்பீங்க. வெயிட்டான சப்ஜெக்டையும் கையில் வெச்சுகிட்டு, அதே சமயம் ஜாக்கிரதையாவும் அடி எடுத்து வச்சு நீங்க முன்னேறியிருக்கீங்க. கங்கிராட்ஸ்).

நீ நாஸ்திகனா? என்று சிறையில் பூர்ணம் விசுவநாதன் கேட்டவுடன் கோயில் மணியோசை ஒலிக்கிறது. 'சிறீரங்க ரங்கநாதனின்' ரத்த வாடை வீசும் கோயிலை டெட்டால் போட்டுக் கழுவி, ஊதுபத்தியும் கொளுத்துகிறார் இளையராஜா. கோபுரத்துக்கு 8 லட்சம் கொடுத்ததைக் கூட - இதனுடன் ஒப்பிட்டால் — மன்னித்துவிடலாம். பாரதிதாசன் சொற்படி பீரங்கி வைத்துப் பிளப்பதொன்றுதான் தீர்வு.

''போற்றி' வகைப் படம் ஒன்றிற்குப் பின் இது என்ன தாவல்? இதை உருவாக்க எந்தெந்த முறையில் சிந்தித்தீர்கள்? என்ன உறுத்தல் இதற்குப் பின்னே இருக்கிறது?'' என்று கமல்ஹாசனிடம் கேள்வி எழுப்புகிறார் கணையாழி விமரிசகர் சாரு நிவேதிதா.

பாம்பறியும் பாம்பின் கால். போலீஸ்காரன் வீட்டுக்கதவைத் தட்டாமல் புரட்சி செய்வது எப்படி? உத்தியோகத்தைக் காப்பாற்றிக் கொண்டே அதிகாரத்துவத்துக்கு எதிராகக் கலகம் செய்வது எப்படி போன்ற நடைமுறைப் பிரச்சினைகள் குறித்தும், கலையாக்க எழுச்சியைப் பெறுவதற்கான உறுத்தலை (அல்லது அரிப்பை) எப்படி உருவாக்கிக் கொள்வது என்பது குறித்தும் மேற்படி அறிவு ஜீவிகள் கலந்துரையாடல் நடத்தலாம். பத்மஸ்ரீ கமல்ஹாசன் இவர்களுக்கு நிச்சயம் உதவமுடியும்.

● மருதையன்



# மகளிர் மட்டும்

## நகைச்சுவையின் பின்னே...

மகாநதியில் அழவைத்த கமல், மகளிர் மட்டும் படத்தில் குலுங்கக் குலுங்க சிரிக்க வைத்துவிட்டார் என்று இரண்டு படங்களையும் ஒப்பிட்டுப் பாராட்டியிருக்கின்றன பல பத்திரிகைகள். கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் இரண்டு படங்களும் வெளி வந்ததன் மூலம் 'கமல் என்கிற சமூக மனிதனின்' முக்கால் பரிமாணத்தையும், விமரிசகர்களின் முழுப் பரிமாணத்தையும் புரிந்து கொள்ள முடிந்தது.

ஒரு 'தவறான' அடி எடுத்து வைத்ததன் காரணமாக அதீதமான அடுக்கடுக்கான துன்பங்களுக்கு உள்ளாகும் ஒரு தனி மனிதனின் உணர்ச்சிக் குமுறல்களையே கொந்தளிக்கும் சமூக உணர்வு போல சித்தரிக்கிறது மகாநதி.

எந்தவொரு 'தவறான அடியும்' எடுத்து வைக்காமல், மிகவும் இயல்பான தமது வாழ்க்கையின் போக்கில் பெண் சமூகம் சந்திக்கும் கொடுமைகளை, தனிநபர் கோமாளித் தனமாக்குகிறது 'மகளிர் மட்டும்'

தனது வாழ்க்கைக்குள் அத்துமீறி நுழைந்து அதைச் சீர்குலைக்கும் எதிரிகளை ரத்தம் சொட்டச் சொட்டப் பழிவாங்கும் கிருஷ்ணசாமி (கமல்), அன்றாட வாழ்க்கையில் அருவெறுக்கத்தக்க, விகாரமான, அற்பத்தனமான பல அத்துமீறல்களுக்கு ஆளாகும் உழைக்கும் பெண்களின் பிரச்சினையைக் கண்டு குலுங்கக் குலுங்கச் சிரிக்கிறார். தனிநபர் பிரச்சினையை சமூக உணர்வாக எண்ணிக் கொண்டு சாமியாடுபவர், உண்மையான சமூகப் பிரச்சனையைக் கையிலெடுத்துக் கொண்டவுடனே கோமாளியாகி விடுகிறார்.

மற்றெல்லாவற்றையும் காட்டிலும் ஒரு மனிதனின் நகைச்சுவை ரசனை, அவனது சமூகக் கண்ணோட்டத்தை விரைவில் காட்டிக் கொடுத்துவிடுகிறது ஆணாதிக்கத்தின் கீழ் பெண்கள் அனுபவிக்கும் 'சில்லறை'த் தொல்லைகளை கதைக் கருவாகக் கொண்டே ஒரு நகைச்சுவைப்படம் எடுத்திருக்க முடியும். திரையரங்கில் உட்கார்ந்திருக்கும் ஒவ்வொரு ரசிகனுக்கும் (ஆண்) உள்ளே ஒளிந்திருக்கும் நாசரை (பொறுக்கியை) வெளியே இழுத்துப் போட்டு அவனுடைய அந்தரங்க அற்பத் தனங்களையும், இரட்டை வேடங்களையும் வெளிச்சம் போட்டுக் காட்டி கைகொட்டி சிரித்திருக்க முடியும். ஆனால் பொறுக்கித்தனத்துக்கு எதிராகப் போராடுகின்ற பெண்களையே கேலிக்குரிய முட்டாள்தனங்களில் இறக்கி விட்டு பெண்ணினத்தை நக்கல் செய்கிறது படம்.

''கறவை மாடு மூணு காளை மாடு ஒண்ணு'' என்ற பாடல் காட்சி, இதுவரை தமிழ் திரையுலகம் கண்டுள்ள ஆபாச, வக்கிரப் பாடல்களின் வரிசையில் முதல் மூன்று இடங்களுக்குள் ஒன்றைப் பிடிக்கும் தகுதி கொண்டது. 'அறிவு ஜீவிகளாக' இல்லாத பாமரப் பெண்களை அருவெறுத்து முகம் சுளிக்கும் இந்தக் காட்சிக்கு ஊர்வசியும், ரேவதியும் எதிர்ப்பு தெரிவித்ததில் வியப்பில்லை.

தீவிரவாதியின் பின்னும் ஒரு நகைச்சுவைப் பொருளாக்கப்பட்டிருப்பது கமல்ஹாசனின் சமூக உணர்வுக்கு இன்னொரு சாட்சி. ''மகளிர் மட்டும் ஒடுக்கப்பட்டு இனமா?'' என்ற துவக்கப்பாட்டுடன் ஒலிக்கும் சிம்பனி இசை - விளக்கமாற்றுக் கட்டைக்குப் பட்டுக்குஞ்சம்.

பெண்ணுரிமையை அற்பத்தனமான முறையில் அசிங்கப்படுத்தும் இப்படத்தைத் தடை செய்யக்கோரி பெண்கள் அமைப்புகள் போராட வேண்டும். 'மகளிர் மட்டும்' படத்தை உருவாக்கிய மூளைதான் மகாநதியின் நதிமூலம் என்பது 'மகாநதி ரசிகர்களுக்கு'ப் புரிந்தால் சரி.



படிப்பகம்

www.padippakam.com

# பெண்கள் மீதான வன்முறைகள்: விடிவு எப்போது?

"இந்து சமுதாயத்தில் பெண் மிக உயர்ந்தவள்; தெய்வம்; தேவி; ஈசனின் உடலிலேயே பாதி அவளுக்குக் கொடுக்கப்பட்டுவிட்டது - அவள் ஆணோடு சரிசமம்" - பெண்ணுரிமை கோரிப் போராடும் போதெல்லாம் இப்படி ஒரு பதில் வருவது வழக்கம். யதார்த்தத்தில் பெண் இங்கே பலவிதங்களில் சோதனைப்பொருள்; அற்பப்புழு; உரிமைகள் மறுக்கப்பட்டுச் சபிக்கப்பட்டவள்; பெண் சம்பந்தப்பட்ட எந்த ஒரு பிரச்சனை எழுந்தாலும், 'பெண்ணே ஒரு பிரச்சனை' என்று முடிவு கட்டிக் கொண்டுதான் பிரச்சனை அணுகப்படும்.

டெல்லியில் ஒரு பேருந்து நிலையத்தில் ஓட்டுநர், நடத்துனர் இருவரால் கற்பழிக்கப்பட்ட சுசீலா காவல் நிலையம் சென்று புகார் செய்த போது, "ஒன்னோட மானம் மரியாதை எல்லாம் கப்பல்ல ஏறணும்னு பாக்கிறியா, போ ஒன் வேலையைப் பாத்துக்கிட்டு" என்று காவல் தெய்வம் மிரட்டி அனுப்பியது. காவல் மட்டுமா? கோழையாகவும், வக்கிரம் பிடித்தவர்களாகவும் வளர்க்கப்படும் பல மருத்துவரில் ஒருவன் சுசீலாவைப் பரிசோதித்துவிட்டு "சோதனை - செய்யப்பட்டது; பெண் பிறப்பு உறுப்பில் இரண்டு விரல்கள் நுழைக்கப்பட்ட தடயம் தெரிகிறது" என்று எழுதி போலீஸ் பார்வையிலிருந்து தப்பித்துக் கொண்டான்.

போலீஸ், டாக்டர், கோர்ட்டு, எல்லா இடத்திலும் சுசீலா பிரச்சனையாகவே பார்க்கப்பட்டார். சுசீலா கேட்ட ஒரே ஒரு கேள்வி: "எங்களைப் போன்றவர்களுக்கு என்றைக்காவது நீதி கிடைக்குமா?"

சுசீலா மட்டுமல்ல, ஆயிரக்கணக்கான பெண்கள் நீதி கேட்கிறார்கள். குற்றவாளிகளான நிலப்பிரபுக்களுக்கு, முதலாளிகளுக்கு, வியாபாரத் தரகர்களுக்கு, காமுகர்களுக்கு, போலீஸ் நாய்களுக்கு, ராணுவ அதிகாரிகளுக்கு, அரசு அதிகாரிகளுக்கு, மேல் சாதி வெறியர்களுக்குத் தண்டனை கொடுங்கள் என்று கேட்கிறார்கள்.

பெண்கள் மீது எத்தனை வன்முறை? கற்பழிப்பு: கடந்த நான்கைந்து ஆண்டுகளில், ஓராண்டில் 20,000 வழக்குகள்; கற்பழிப்பு மட்டுமா! கொலைகள் எத்தனை? நிர்வாண ஊர்வலங்கள் எத்தனை? மலம் அள்ளித் தின்ன வைக்கும் கொடூர சித்திரவதைகள் எத்தனை? பெண் என்ன எல்லாவற்றையும் மவுனமாகத் தாங்கிக் கொள்ளும் அடிமையா?

தண்டிக்க சட்டங்கள் ஏராளம் உள்ளன; வேண்டுமானால் ஆலோசனைகள் சொல்லுங்கள், கமிஷன்கள் போடுகிறோம் என்கிறது அரசு. என்ன பலன்? எத்தனைப் பேர் தண்டிக்கப்பட்டார்கள்? எத்தனை வழக்குகள் தீர்க்கப்பட்டன?

தளி கல்பனா சுமதி, அண்ணாமலை நகர் பத்மினி, முத்தாண்டிக்குப்பம் வசந்தா, வாச்சாத்தி பெண்கள் ஆகியோர் போலீசின் காம வெறிக்கு இலக்கான கொடுமையை தமிழகம் மறந்துவிடாது. இந்த வழக்குகளில் உண்மையான குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை. 1990-ல் உத்திரபிரதேசத்தில் கஜுரவ்லா பள்ளியில் இரு கன்னிகா ஸ்திரீகள் கற்பழிக்கப்பட்டார்கள்; மற்றும் ஏழு பேர் அதே நோக்கத்தோடு பலவந்தப்படுத்தப்பட்டார்கள்; அதே பள்ளியின் மீது 1991-ல் மீண்டும் ஒரு தாக்குதல் நடத்தப்பட்டது; இந்த வழக்குகளிலும் தீர்ப்புக்கள் வெறும் கண் துடைப்புகளே.

இவைமட்டுமல்லாமல், எங்கெல்லாம் மேல்சாதி ஆதிக்கமும் வெறியும் தூண்டப்படுகிறதோ அங்கெல்லாம் தாழ்த்தப்பட்டவர் மீதான வன்முறை முதலில் பெண்கள் மீது தான் பாய்கிறது; 1990 பீகார் கயா கற்பழிப்புச் சம்பவம் நினைவில் வருகிறதா? பூமிஹார்கள் வயது வித்தியாசம் பாராமல் எல்லாப் பெண்களையும் கற்பழித்தார்கள்; "இது வெறும் வன்முறையல்ல; அரிசனங்களின் சுயமரியாதையை அடித்து நொறுக்கும் ஒரு வடிவம்" என்று சாதி வெறியர்கள் மார்தட்டினார்கள்.

பெண்கள் ஆண்களின் மானத்தின் சின்னமாக, அடையாளமாக இன்னமும் கருதப்படுகிறார்கள். அவளது கற்பு பறிக்கப்படும்போது, அவள் அவமானப்படுத்தப் படும்போது எதிரி ஆண்களின் மானம் நொறுக்கப்படுவதாகக் கருதுகிறார்கள். உ.பி., ம.பி. மாநிலங்களிலிருந்து வரும் செய்திகள் இதையே உறுதி செய்கின்றன.

சாதி வெறியர்கள் இப்படி ஒரு வக்கிரமான வடிவத்தை எடுத்துக் கொள்ளும் போது, அரசின் போலீஸ் நாய்கள் வெறியின் எல்லைக்கே செல்கின்றன. 1986 கேரளா தங்கமணியில் பஸ் வசதி கேட்டுப் போராடியதற்காக அந்தக் கிராமத்தின் பெண்கள் அத்தனைப் பேரின் கற்பையும் சூறையாடியது போலீஸ். 1978-ல் பீகார் பைலதில்லா இரும்புச் சுரங்கத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை உடைப்பதற்காக முதலாளியிடம் லஞ்சம் வாங்கிக் கொண்டு, அவன் உதவியோடு தொழிலாளரின் மனைவிகளைக் கும்பல் கும்பலாகக் கற்பழித்தது போலீஸ். தொழிலாளரைப் பயமுறுத்தி போராட்டத்தைத் திரும்பப் பெறவைக்க அந்த வக்கிரம் பிடித்த நாய்கள் இப்படிச் செய்தன.

மேலே சொன்ன எல்லா வழக்கிலும் பெண்களில் மானம் தாக்கப்பட்டது. உடல் ரீதியாகவும் பெண்கள் தாக்கப்பட்டார்கள். இதுமட்டுமா? வயிற்றில் வளரும் கரு பெண்ணாக இருப்பதை 'அம்னியோசென்டசிஸ்' என்ற சோதனை மூலம் கண்டுபிடித்து கருவிலேயே அழித்துவிடும் ஏராளமான சம்பவங்கள் பெண்ணுரிமை அமைப்புகளால் அம்பலப்படுத்தப்பட்டன. இது ஆணாதிக்க வெறியின் உச்சகட்டம். எனவே இச்சோதனை சட்டரீதியாகத் தடை செய்யப்பட வேண்டும் என்று ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

இதோ சமீபத்தில் இன்னொரு அத்துமீறல் நடந்திருக்கிறது. அரசின் பொறுப்பில் உள்ள மனநோயாளிகள் இல்லம். பூனா அருகே சிரூரில் உள்ளது. அங்குள்ள 19 கன்னிப் பெண்களுக்கு கர்ப்பத்தடை அறுவைச் சிகிச்சை செய்துவிட்டார்கள். இதுசரியா, தவறா என்று விவாதம் நடக்கிறது. அப்பெண்கள் மாதவிடாய்க் காலத்தில் சிறுபிள்ளைபோல் நடந்து கொள்கிறார்கள்; ஒருவேளை அவர்கள் மீது பாலுறவு அத்துமீறல் நடந்துவிட்டால் நிலைமை சிக்கலாகிவிடலாம் என்பது போன்ற வாதங்களை வைத்து (பெண்களின் பெற்றோர் சம்மதிப்பதாகக் கூறி) சிகிச்சை முடித்துவிட்டார்கள். மற்ற நேரங்களில் கவனித்துக் கொள்வதைப் போல் அவர்களுக்குக் கூடுதல் கவனம் கொடுத்துக் கவனிக்க வேண்டியது தானே, மேலும் ஊழியர்கள் வைக்கலாம் அல்லவா, அப்பெண்களின் உடல்-மனம் இவற்றின்மீதும் அத்துமீறல் செய்து கை வைக்க அரசுக்கு ஏது உரிமை என்று பெண் உரிமை அமைப்புக்கள் கேட்கின்றன.

நியாயம்தான். மனநோயாளிகளுக்கு அரசே பொறுப்பு. பொறுப்பைத் தட்டிக் கழிப்பதற்கான சாக்குப்போக்கு, வழிமுறைகளையெல்லாம் அரசு அடுக்குகிறது. முதலில் - ஊழியர் பற்றாக் குறை ; அடுத்து - பாலியல் அத்துமீறல் அபாயம்; அடுத்து - சுத்தம், சுகாதாரம்; அடுத்து - எதிர்கால சிக்கல்கள். இது எல்லாவற்றுக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு அவர்கள் மனநோயைக் குணப்படுத்துவதுதான் அரசின் கடமை.

இப்படிப்பட்ட அரசு - போலீஸ், சட்டத்துறை மீறல்களைவிட தந்திரமான, நுணுக்கமான, வன்முறை கலாச்சார, சமூக வன்முறை. பெண்ணை அடங்கிக் கிடக்கும் புழுவாக, பழக்கப்பட்ட வீட்டு மிருகமாக, தேவைப்படும் போதெல்லாம் பயன்படுத்தும் ஒரு சடக்கருவியாகக் கருதுவதே சமூக தர்மம் என்ற கருத்து வாழ்வின் பல கூறுகளில் பல இடங்களில் ஓயாது பரப்பப்படுகிறது. இல்லை என்றால், எத்தனையோ சதி எதிர்ப்பு சீர்திருத்த இயக்கங்களுக்குப் பிறகும் ராஜஸ்தான் தியோரார்லாவில் ரூப் கன்வார் இறந்த கணவனோடு உடன்கட்டை ஏறியிருப்பாளா? சாகும் முன்பு அவளுக்குப் போதை கொடுக்கப்பட்டது. இறந்த பிறகு அவள் கடவுளாகி விடுவாள் என்ற "மந்திரமும்' உருவேற்றப்பட்டது - அந்த

படிப்பகம்

www.padippakam.com

மயக்கநிலையில் ஒரு பலியாடு போல் ரூப் கன்வார் சதிச்சிதையில் பலவந்தமாக வைத்து எரிக்கப்பட்டாள்.

ரூப்கன்வாரை எரித்து ஏற்றிய தீவட்டியைத்தான் பாரதீய ஜனதா, ஆர்.எஸ்.எஸ். இந்துத்துவ வெறிக்கும்பல் இன்று நாடு முழுக்க ஏந்தித் திரிகிறது; வலம் வருகிறது; தேர்தலில் நிற்கிறது; ஆட்சிக்கு வந்தால் 'பாரதீயப் பெண்' (பாரதீய நாரி) என்ற இலக்கணத்துக்கு ஏற்ப குடும்பப் பெண்ணை நடத்துவோம் என்று வாய் கிழிக்கிறது.

பாரதீய நாரி எப்படிபட்டவள்? கணவனை முன்னே நடக்கவிட்டு ஈரடி பின்னே நடப்பவள்; கணவனுக்குப் பின்னே தூங்கி முன் எழுபவள்; கணவனே கண்கண்ட தெய்வமாக, அவன் போட்ட தாலியைப் புனிதச் சிலுவையாகச் சுமப்பவள்; பெண் தனக்கிட்ட கடமையை மட்டும் செய்பவள் - ஆண் கிழித்த கோட்டைத் தாண்டாதவள்; தாண்டினால் மாரீசமான்கள் அவள் மனதைக் கலைத்து இராவணர்களிடம் பலவந்தமாய்த் தள்ளிவிடும்.

ஆனால் இவர்கள் சொல்லும் பாரதப் பெண் யார்? நாலு சுவருக்குள் அடைக்கப்படும் கூண்டுக்கிளி. பெண்ணை சமூகத்தின் அங்கமாக, சமூக இயக்கத்தில் உயிரோட்டமான அங்கம் வகிக்கும் உறுப்பினராக அடையாளம் காணாமல் ஒதுங்கி வாழும் மனநோயாளியாக்கி விடுவது அவர்களின் சித்தாந்தம். இது பெண்ணின் உடல், மனம் இரண்டின் மீதும் உரிமை கோரும் அத்துமீறல்.

அண்மைக்காலத்தில் நடந்த ஒரு சம்பவம் இந்துத்துவ வக்கிரத்துக்கு எடுத்துக் காட்டு. டிசம்பர் 1992-ல் சூரத்தில் இந்து மத வெறித்தீ மூண்டபோது, கும்பல் கும்பலாக முசுலீம் பெண்கள் கற்பழிக்கப்பட்டனர்; வெறியாட்டத்தை வீடியோப் படமெடுத்தது இந்துத்துவக் கும்பல். இதே விபச்சாரக் கூட்டம்தான் பாரதப் பெண்களுக்கு ஒழுக்கத்தைப் போதிக்கிறது. இதுயாரும் அங்கீகரிக்காமலேயே இந்துப் பெண்களின் வாழ்வில் அத்துமீறி நுழைந்து இலக்கணம் போடுவதுதானே? சதியை அங்கீகரிக்கும், பெண்கள் வேதம் சொல்லக் கூடாது என்று கூறி பெண்களுக்குக் கல்வி தேவையில்லை என்று சொல்லும் அறிவுக்குருடனான பூரி சங்கர மடத்துச் சாமிக்கு அனைத்து மக்கள் சார்பாகப் பேசும் உரிமையை யாரும் கொடுக்கவில்லையே!

● ●

பெண் கருவிலேயே கொல்லப்படுகிறாள்; தப்பி வெளியே வந்தாலும் எத்தனை எத்தனை முறை கொல்லப்படுகிறாள்? எல்லா மத நடைமுறைகளின் படி 'வழிமுறை' 'நம்பிக்கை' என்ற போர்வையில் சிறு வயதிலேயே திருமணம் நடத்தப்படுவது தொடருகின்றது; சாதிச் சங்கங்கள் மறு அவதாரம் எடுத்த பிறகு பழைய பிற்போக்கு மணமுறைகள் வேகமாகத் திணிக்கப்பட்டு வருகின்றன; வளர்ந்த பெண் இச்சமூகத்தில் ஒதுக்கப்படுவதும் தொடருகிறது. வேலை வாய்ப்புகளில் பாரபட்சம் காட்டப்படுகிறது. சமூக மதிப்பில் இன்னமும் பெண் தான் ஆணுக்குச் சமமான குடிமகள் என்ற சிந்தனையோடு இயங்க முடியவில்லை - ஏனெனில் அவள் இரண்டாம் படியில்தான் வைக்கப்படுகிறாள். ஒரு பெண் தனக்கு மேல் நிலையில் நிர்வாகத்தில் இருந்து கீழே தாங்கள் இயங்குவதை வெறுக்கும் ஆண் மேதாவிகள் - அறிவுஜீவிகள் - விஞ்ஞானிகள் இங்கு அதிகம்.

இத்தனைக்கும் காரணம் என்ன? இப்போதுள்ள நிலப்பிரபுத்துவச் சமூகக் கட்டமைப்பிலேயே இதற்கான காரணம், கோளாறு இருக்கிறது. இங்கேதான் டெல்லியின் சுசீலா, உ.பி. பாக்பட்டின் மாயாதியாகி, தமிழகத்தின் பத்மினி கேட்ட கேள்விகள் சாட்டையடியாய் விழுகின்றன. ''பெண்ணாய்ப் பிறப்பதே குற்றமா? பெண்ணாய்ப் பிறந்தவளுக்கு நீதியே கிடைக்காதா!''

பெண்ணாய்ப் பிறந்தவளுக்கு இந்துத்துவம் காட்டுவது தீர்வா? நீதியா? விடுதலைக்கு வழி, பிணைத்த சங்கிலியிலிருந்து வெளியேற வழி பழைய துருப்பிடித்த தடையை வலுவாகப் பூட்டிக் கொள்வதல்ல; இந்துத்துவம் தீர்வே அல்ல.

இருக்கின்ற சட்டங்களைச் சரி செய்து கூடுதல் பாதுகாப்பு கொண்ட சட்டங்களை நிறைவேற்றினால் போதும் என்கிறார்கள் பெண் உரிமை கோரும் சீர்திருத்த இயக்கங்கள். சொல்லும்போதே அவர்கள் குரலில் தெம்பில்லாமல் இருக்கிறது. பழைய சட்டங்கள் எந்த அளவு நடைமுறைப்படுத்தப்பட்டன என்ற வரலாறு அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

தேசிய பெண்கள் கமிஷன் போடச் சொன்னார்கள் - போட்டது அரசு; 'கற்பழிப்பு' பற்றிய சட்டத்தில் திருத்தம் கோரினார்கள் - ஏற்றுக் கொண்டது அரசு. இவை வெற்றிகளா? அல்ல. எத்தனையோ கமிஷன்கள் போல இது ஒன்று - காகிதச் சட்டம்; நடைமுறைப்படுத்தும் உரிமை யாரிடம் இருக்கிறது? பத்மினி, மாயாதியாகியைக் கற்பழித்த போலீஸ் நாய்களிடம்; சட்டம் மீறப்பட்டால் தண்டனை தரும் உரிமை யாரிடம் இருக்கிறது? வாதச் சொற்சிலம்பங்களில் திறமை காட்டி ஈரைப் பேனாக்கி, பேனைப் பெருமாளாக்கும் வழக்குத் தொழில் வியாபாரிகளிடம் இருக்கிறது. வேறு சட்ட ஓட்டைகளைப் பயன்படுத்தி சட்டப்படி உள்ள தண்டனைகளையும் குறைத்துவிடும் உரிமை நீதிபதிகளிடம் இருக்கிறது. காகிதச் சட்டங்கள் எதற்கு? வாயில் வழித்துக் கொள்ளத்தானே?

இதை நிரூபிப்பதற்கு 'கற்பழிப்பு' குற்றங்கள், சட்டங்கள், தீர்ப்புகள் ஆகியவற்றைச் சற்று கூர்ந்து நோக்கினால் போதும். கற்பழிக்கும் நோக்கம், கற்பழிக்க முயற்சி, கற்பழித்த சம்பவம் மூன்றுமே 'கற்பழித்தல்' என்ற ஒரே விஷயத்தில் அடங்கிவிடும். பொதுப்புத்தியுள்ளவன் எவனும் இதைச் சொல்லிவிடுவான். ஆனால் நம் நாட்டுச் சட்டமோ இதையே பிரிவு 354, பிரிவு 511, பிரிவு 375 என்று மூன்றாகப் பிரித்துள்ளது. முதலாவது - ஆண் உறுப்பைச் செலுத்தியதற்குச் சாட்சியம் தேவை; இரண்டாவது - பெண்ணின் நல்ல குணத்திற்கு - நல்ல இயல்புக்கு - நல்ல நடத்தைக்கு களங்கம் உண்டாக்குவது; இது தெளிவில்லாத பிரிவு; இது நிரூபிக்க முடியாதது; அதாவது ஆண் தனது உறுப்பைச் செலுத்துவதற்கான சூழ்நிலையை உருவாக்கிட்டதாகப் பெண் நிரூபிக்க வேண்டும். இது முட்டாள் தனத்தின் எல்லை.



படிப்பகம்

www.padippakam.com

இந்தப் பிரிவுகளில் புகுந்து வந்து கற்பழிப்பு நிருபிக்கப்பட்டாலும், நீதிமன்ற வியாக்கியானங்கள் தண்டனையைக் குறைத்து விடுகின்றன. கர்நாடகாவில் 1978-ல் பேருந்து பயணத்தின்போது ஒரு நர்ஸ் இரு இளைஞர்களால் கற்பழிக்கப்பட்டாள். செசன்ஸ் கோர்ட்டு 21 வயது ராஜாவை விடுதலை செய்தது; கிருஷ்ணா (வயது 24) என்ற இன்னொருவனுக்கு ''கோர்ட்டு முடியும் வரை சிறைவாசம்'' மட்டுமே விதித்தது. காரணம், நீதிபதியின் பார்வையில் இருவரும் இளைஞர்கள். நர்ஸ் முறையிட்டதன் பேரில் உயர்நீதி மன்றம் விசாரித்து இருவருக்கும் 7 ஆண்டுகள் தண்டனை விதித்தது. அதற்கும்மேல் உச்சநீதி மன்றத்துக்கு இளைஞர்கள் இருவரும் போனார்கள். 11 ஆண்டுகள் கழித்து உச்ச நீதி மன்றம் தண்டனைக் காலத்தைக் குறைத்துவிட்டது. காரணம் இந்த இளைஞர்கள் மனவேதனை, அவமானத்துக்கு ஆளாகி விட்டார்களாம்.

அந்த உச்சநீதி மன்ற நீதிபதிக்கு இன்னொரு தரப்பு கண்ணில் படவேயில்லை. அந்த நர்ஸ் ஒரு பெண்; அவளுக்கும் அப்போது வயது 21 மட்டுமே; வன்முறையை ஒருமுறை சந்தித்துவிட்டு, சட்டத்துறை விவகாரங்களினால் ஏராளமான அவமானத்தாலும், மனத்துன்பத்தாலும் அவளும் சித்திரவதைப் பட்டுவிட்டாள். இருந்தால் என்ன? நீதியின் கண்கள் வசதியாகக் குருடாகிவிட்டன.

ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதி என்பதே நர்ஸ் வழக்கில் நிருபணமாயிற்று. அதை விடுங்கள். இவன் சட்டத்தை இவனே மதித்தானா? 80 ஆம் ஆண்டுகளில்தானே கற்பழிப்புக்குப் பத்தாண்டுகால நெடிய தண்டனை வந்தது. அதுவும் நீதி மன்றங்களின் வக்கற்ற மேதாவிலாசத்தை மக்கள் கேள்விக்குள்ளாக்கிய பிறகுதான் தண்டனையே வந்தது. இதன்படி கர்நாடகா நர்ஸுக்கு சரியான நீதி வழங்கியிருக்க வேண்டும் அல்லவா?

கற்பழிப்பு வழக்குகளில் திருப்பத்தைக் கொண்டு வந்தது மதுரா என்ற 16 வயது பழங்குடிச் சிறுமியின் வழக்கு. காவல் நிலையத்திலேயே இரண்டு போலீஸ் ரவுடிகளால் கற்பழிக்கப்பட்டாள் மதுரா. மாவட்ட நீதிமன்றம் ''மதுரா காதலனோடு ஓடி போனவள்; உடலுறவு அவளுக்குப் பழகிப்போன ஒன்று. ஆகவே அவள் கற்பழிக்கப்படவில்லை. மேலும் உடலுறவிற்கும், கற்பழிப்பிற்கும் பெருத்த வேறுபாடு உள்ளது.'' என்று தீர்ப்பளித்தது. உயர் நீதிமன்றம் அதை மறுபரிசீலித்து ஓரளவு சரியான தீர்ப்பு கொடுத்தது. ''அச்சத்தின் அல்லது அச்சுறுத்தல் காரணமாக அப்பெண் பணிந்திருக்கலாம். அதற்காக அப்பெண்ணின் சம்மதத்தோடு அந்நிகழ்ச்சி நடைபெற்றது என பொருள் கொள்ளக் கூடாது.'' அதன்படி காவலர்கள் தண்டிக்கப்பட்டார்கள். ஆனால் உச்சநீதி மன்றம் வன்முறையின்போது அவள் கூக்குரல் எழுப்பாததால் கற்பழிக்கப்பட்டாள் என்ற குற்றச்சாட்டே பொய் என்று வழக்கைத் தள்ளிவிட்டது.

இந்த மோசடி, பித்தலாட்டத் தீர்ப்புக்குப் பிறகு நாடெங்கும் பெண் உரிமைப் போராட்டங்கள் எழுந்தன. முதலாவது - குற்றத்தை பெண் ஏன் நிருபிக்க வேண்டும்? இரண்டாவது - கற்பழிக்கப்பட்டவளின் கடந்த கால வரலாறு ஏன், எதற்காகப் பரிசீலிக்கப்படுகிறது? காதலனோடு ஓடிப் போனால் கெட்டவளா? ஆதிவாசி என்றால் கேவலமானவளா? இதற்குப் பிறகு தான் கற்பழிப்புக்குத் தண்டனை என்ற விஷயமே சட்டத்தில் இடம் பிடித்தது.

ஆனால் இந்த பிரிவு தான் கர்நாடக நர்ஸ் விஷயத்தில் தூக்கி எறியப்பட்டது. புதிய புதிய சட்டங்கள் வந்த பிறகும், பழைய சட்டங்களின் படி வாதிட்டு தண்டனை குறைக்கப்படும் என்றால் புதிய சட்டப்படியான பெரிய தண்டனை பம்மாத்து தானே? அதேபோல், சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய அங்கமான போலீசே கற்பழிப்பைச் செய்யும்போது, குற்றம் பயங்கரவாத வன்முறையாக எடுக்கப்பட்டு தூக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும். இது என்றாவது நடந்துள்ளதா?

எனவே, நடைமுறைக்கு வராத காகிதச் சட்டங்கள் வாயில் வழிக்கத்தான். இதை நாம் சொல்லவில்லை. 1980-ல் கிருஷ்ணலால் X அரியானா அரசாங்கம் வழக்கில் நீதிபதி பின்வருமாறு குறிப்பிட்டார்: ''கற்பழிப்புக்கு எதிராக நீண்ட சட்ட விதிகள் அல்லது அனைத்துப் பாதுகாப்புகளையும் கொண்ட ஒரு சிக்கலான சட்டப்பிரிவைக் காட்டிலும் சமூக உணர்வு கொண்ட ஒரு நீதிபதியே சட்டரீதியான பாதுகாப்பாக இருக்க முடியும்.'' சிக்கலான காகிதச் சட்டங்கள் பலன் தராது என்று சொன்ன இது போன்ற சமூக உணர்வு கொண்ட நீதிபதிகளை எண்ணிவிடாலம் - அது அரிது.

பெண் மீது எதுவும் நடக்கலாம்; கேட்பதற்கு யார் இருக்கிறார்கள்? சட்டசபை இருக்கிறதென்று ஓட்டுக்கட்சிகள் சொல்கின்றன. சட்டத்தை நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிக்கும் உரிமைகூட எம்.எல்.ஏ., எம்.பி.க்கு இல்லை. அவர் நல்லவராக இருந்தால் கொஞ்சம் மரியாதையான இடத்தில் இருந்து வேடிக்கை பார்க்கலாம், அவ்வளவுதான். 1992-ல் ஒரிசா அமைச்சர் தாமோதர் ரவுட் என்பவன் பஞ்சாயத்துச் சமிதி தலைவர் திருமதி. வசந்தி பாராவை மானபங்கப் படுத்தினான். ஆர்ப்பாட்டங்கள் அவனைப் பதவிவிட்டுக் கீழிறக்கக் கோரின. அவன் மமதையோடு சொன்னான்: ''சட்டம் கற்பழிக்கக் கூடாதென்றோ, மானபங்கப்படுத்தக் கூடாதென்றோ சொல்லவில்லை. அப்படிச் செய்பவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள் என்றே சொல்கிறது; தடுக்கப்பட வேண்டும் என்று சொல்லவில்லை.''

நாளும் ஓட்டு அரசியல் ரவுடித்தனம் பெருகும் இந்நாட்டில் ரவுடியே எம்.எல்.ஏவாக, ரவுடியே ராமனுக்குக் கோயில் எழுப்பும் வீரனாக வலம் வரும் இந்நாட்டில் தாமோதரர் ரவுட்களே 99 சதம் இருக்கிறார்கள். ரவுடித்தனமும், மதவெறியும் சுலபமான அரசியல் மூலாதாரங்கள்; புதிய அரசியல் ஜோடி.

பெண் மீது எதுவும் நடக்கலாம்; பெண் எப்படியும் நடத்தப்படலாம்; புதுப்புதுக் கமிஷன்கள் வந்து புதுச்சட்டங்கள் வரலாம்; ஆனால் அவை தவறான முறையில் பெண் உரிமைகள் இருப்பதுபோன்ற பாவனைகளை மட்டுமே தர முடியும். பாசாங்கு மட்டுமே செய்ய முடியும்.

பெண் மீது வன்முறை என்பது இன்னமும் ஏராளம். வரதட்சணை, அதையொட்டி சித்திரவதை, கொலை - தீ வைப்பு, கணவன் மற்றும் அவன் உறவினரின் அன்றாட சித்திரவதைகள், இன்றைய வியாபார ஏடுகளில் வரும் பெண்களை ஆபாசமாகச் சித்திரப்பதன் மூலம் கேவலப்படுவது, சினிமாவில் வரும் இரட்டை அர்த்த வசனங்கள் மூலம் கேவலப்படுவது - இவ்வாறு பலவிதங்களில் அவள் மூலைக்கு மூலை விரட்டப்படுகிறாள். இதற்கெல்லாம் எதிராக அரசோ, அதன் சட்டங்களோ இல்லை; அவற்றுக்கு ஏதோ ஒருவகையில் துணை போகின்றன.

கமிஷன்கள் இவ்வளவு பிரச்சனைகளையும் அலசாதா என்று தோன்றலாம். கமிஷனுக்குக் கொடுக்கப்படும் வழக்கு விவரங்கள் வைத்து மட்டுமே அது விவாதிக்கும். அவலமான ஓர் வேடிக்கை தெரியுமா? உ.பி.யில் 20,000 சம்பவங்கள் நடந்தும் ஏழே ஏழு வழக்குகள் பற்றிய விவரங்களே கிடைத்ததாம் கமிஷனுக்கு. கமிஷன் என்பது தேடி ஆய்வு நடத்தி தீர்வு காணும் இயக்கம் அல்ல; அது திண்ணைமடம். ஏதோ இப்போது சமூக இயக்கங்களின் நிர்ப்பந்தங்களினால் 'கற்பழிப்பு' என்பதை 'பாலியல் வன்முறை' என்று மாற்றியிருக்கிறது. பெண்கள் மீது கற்பழிப்பு நோக்கம் கொண்ட தாக்குதல்கள் நடந்தாலும் அதையும் இது சேர்ப்பதால் அந்த அளவில் ஏற்கக் கூடியதே. அதற்கு மேல் இதுவரை மகளிர் இயக்கங்கள் முன்வைத்த போலீஸ் துறை சீர்திருத்தங்கள் பற்றி கமிஷன் ஏதும் அக்கறை காட்டவில்லை.

எனவே வெறும் சட்டங்களை வைத்து பெண்களின் மானத்தை, கௌரவத்தைக் காப்பாற்ற முடியாது; அவற்றை வைத்து மீட்கவும் முடியாது. நீதி அளிக்கவும் முடியாது. இவற்றைய கட்டத்தில், பெண்களின் உரிமையை முழு அக்கறை கொண்ட சமூக அரசியல் இயக்கமே சாதிக்க முடியும். அதில் பெண்கள் ஆண்களோடு பங்கேற்க வேண்டும். மகளிர் உண்மையான அரசியல் அதிகாரத்தை - (ஓட்டுக்கட்சி அதிகாரம் அல்ல) நடைமுறைப்படுத்தவதையும் கண்காணிப்பதையும் - மக்களே வைத்திருக்கும் அரசியல் அமைப்பில் மட்டும்தான் எழுதிய சட்டம் நடைமுறைக்கு வரும்; பெண்களுக்கு நீதி கிடைக்கும் - பெண் ஆணின் உடம்பில் பாதியாயிருக்க வேண்டாம் - முழு உடம்போடு ஆணோடு ஒத்த சமஉரிமையோடு வாழலாம்; தங்கள் மீது செலுத்தப்படும் வன்முறையை யாரோ வந்து தடுக்க வேண்டும் என்று ஏங்கிக் காத்திராமல் தாங்களே நேருக்கு நேர் சந்தித்து முறியடிக்கலாம்.

O புதூர் இராசவேல்



படிப்பகம்

www.padippakam.com

# ஜெயாவின் அரசாங்கக் கட்டில்

பெண்கள் விண்வெளிக்குச் செல்கிறார்கள் என்று பெருமை பாராட்டுகிறது அறிவியல். ஆனால், தமிழ்நாட்டில் பெண்கள் வீதியில் ஒரு காவல் நிலையத்தைக் கடந்து செல்ல முடியாதபடிக்கு நாறிக்கிடக்கிறது பண்பாடு!.

''பெண், குழந்தைப்பருவத்தில் தந்தைக்கும், இளம் வயதில் கணவனுக்கும், கணவன் இறந்த பின்பு மகனுக்கும் கீழ்ப்பட்டு வாழவேண்டும்'' என்கிறது மனுதர்மம். அதையே இன்னும் ஆழப் படுத்தி ''பெண் எல்லா நிலையிலும் எங்களுக்குக் கீழ்ப்பட்டு ஆக வேண்டும்'' என அப்பாவிகளின் இரத்தத்தில் எழுதிக்காட்டுகிறது போலீசு.

ஆற்றாது அழுத கண்ணீரோடு அரசவை புகுந்த கண்ணகியைப் பார்த்து ''என்ன இக்கோலம்?!'' என அதிர்ச்சியடைந்தானாம் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன். அன்றாடம் போலீசின் பாலியல் வன்முறைக்கு பலியாகும் பெண்களின் பிணக்கோலம் கண்டும் அமைதியாக பட்ஜெட் உரையில் ''நமது காவல்துறை செயல்திறனுடனும் மனிதாபிமானத்துடனும் செயல்படுகிறது'', என்று அருவெறுப்புரையாற்றுகிறார் ஜெ.-யின் பாதம் தாங்கி நெடுஞ்செழியன். நாவலர் அப்படிதான் பேசமுடியும். அதுவோ கற்பனைச் சுதந்திரம் மிக்க சிலப்பதிகாரம். இதுவோ கட்டளைகள் நிரம்பிய 'ஜெயா அதிகாரம்'.

ஜெயாவும் அதன் பரிவாரங்களும் காவல்துறையைப் பற்றி என்னதான் புகழ்மணக்க புளுகித்தள்ளினாலும், எதார்த்தமோ காவல் நிலையம் என்றாலே இரத்தக்கவுலடிக்கிறது. பேருந்து நிலையங்களிலும், பொது இடங்களிலும் ''நான் உங்களுக்கு உதவுகிறேன்'' (மே ஐ ஹெல்ப் யூ) என்று பெயர்ப் பலகை வைத்து போலீசு அழைக்கிறது. மக்கள் ஆபத்தின் விளிம்பிற்கு வந்தவர்கள் மாதிரி ஒரு அடி தள்ளியே போகிறார்கள்.

''இதுபோன்ற சம்பவங்களில் சில பெண்கள் நஷ்டஈடு பெறுவதற்காகவே போலீசு கற்பழித்ததாகப் பொய் சொல்கிறார்கள்'' - ஆபாச அரசியலின் நாயகி 'ஜெ'ன் வாய்க் கொழுப்பு.



கொலை, கொள்ளை, பாலியல் வன்முறை போன்றவைகள் காவல் துறையின் கைத்தொழில்கள் என்பது நாடறிந்த செய்தி. தற்பொழுது நாளொரு கொலையும், பொழுதொரு கற்பழிப்புமாய் காவல் துறையை விரிவாக்கம் செய்திருக்கிறது ஜெ. அரசு. கொடூரமான கொலைகள் வக்கிரமான சித்ரவதைகள் மூலம் தன்னை ஒரு தொழில் முறை கிரிமினல் என்பதையே பறைசாற்றுகின்றன காக்கிச்சட்டைகள். ஆளுநரோ ''கண்டிப்பான விழிப்புப்பணி, கடுமையான நடவடிக்கை மூலம் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நிலைமை சிறப்பாக இருக்கிறது'' என்று மலத்தொட்டிக்கு மலர்கிரீடம் சூட்டியுள்ளார். வேண்டுமானால் ஆளுநர் சொல்வதை நடைமுறையில் இப்படித்தான் பொருத்த முடியும். 'கண்டிப்பான விழிப்புணி' மூலம் பெண்களை விசாரணை என்ற பெயரில் கடத்திச் செல்வது, இணங்க மறுக்கும் பெண்களின் மேல் 'கடுமையான நடவடிக்கை' எடுத்துக் கதையை முடிப்பது என்பதுதான் நடப்பு உண்மை.

சொறிநாயின் உடம்பில் புழுத்துநாறும் புண்ணையும், சீழையும் பார்த்து, இப்பொழுதுதான் உன்மீது தேன்வடிகிறது என்று நாயும், நாயும் நக்கிக் கொண்ட கதையாய் அரசு எந்திரத்தை விட்டுக்கொடுக்காமல் தட்டிக்கொடுத்திருக்கிறது ஆளுநர் உரை.

சட்ட சபையிலே ஒரு பெண் என்றும் பாராமல் என்னைத் தாக்கினார்கள் முந்தானையை பிடித்து இழுத்தார்கள் மக்களே தீர்ப்பளியுங்கள் என்று ஊளையிட்டு ஆட்சிக் கட்டிலேறிய ஜெயாவின் போலீசுத்துறையால் தமிழகமெங்கும் உருவப்பட்ட சேலைகளும் உருக்குலைந்த பெண்களும் எத்தனை எத்தனை? தளி, வாச்சாத்தி, சிதம்பரம், அண்ணாமலைநகர், ஒரத்தநாடு, மூத்தாண்டிக்குப்பம் இவையெல்லாம் காவல்துறையின் கனத்த இரும்புக்கம்பிகளுக்கு வெளியே தப்பி வந்த ஒரு சில உண்மைகள். மூடி மறைக்கப்பட்ட அப்பாவிகளின் அலறல்கள் கணக்கிலடங்கா.

பாஞ்சாலியின் கூந்தல் கவுரவர்களை காவு கேட்டது. ஜெயலலிதாவின் சேலையோ தமிழகத்தையே காவு கேட்கிறது. நந்தகோபாலைப் படுகொலைசெய்து, பத்மினியை தனது பாலியல் வெறிக்கு சிதம்பரம் அண்ணாமலை நகர் போலீசு மிருகங்கள் இரையாக்கியபோது ஆவேசப்பட்ட மக்களை திசை திருப்ப ''சட்டம் தனது கடமையைச் செய்யும். தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் தண்டிப்போம். இதுபோன்ற விரும்பத்தகாத சம்பவங்கள் இனி நடக்காது'' என்று அமைதிகாக்கச் சொன்னார் ஜெயலலிதா. இப்போது ஒரத்தநாடு ரெங்கம்மாள், மூத்தாண்டிக்குப்பம் வசந்தா ஆகியோரை போலீசு மிருகங்கள் தனது காமவெறிக்குக் கறியாக்கி இருக்கிறது. திரும்பவும் சினிமா பாணியில் அதே வசனத்தை உச்சரித்துக் கொண்டிருக்கிறார் ஜெயா.

போலீசு செய்யறதுக்கு, ஜெயலலிதா என்ன செய்யும் என்பவர்களின் மோகம் தீர ஆபாச அரசியலின் கதாநாயகிக்கே உரிய கர்வத்தோடு ''இதுபோன்ற சம்பவங்களில் சிலபெண்கள் நஷ்டஈடு பெறுவதற்காகவே போலீசு கற்பழித்ததாகப் பொய் சொல்கிறார்கள்'' என்று தனது வாரிசுகளுக்கு வக்காலத்து வாங்கிப் பேசுகிறார்.

என்னவொரு திமிர்? காவல் துறையின் எச்சில்புத்தியால் அவமானத்தோடு கூனிக்குறுகி நடக்கும் நம் சகோதரிகளைப் பார்த்து, விபச்சாரவிடுதி நடத்துபவள் தயங்கும் பெண்களைப் பார்த்து ''இப்ப என்னத்த பெரிசா ஆயிடுச்சு போடி'' என்பது போல இவ்வளவு எளிதாகக் கேட்க முடிகிறது என்றால், 'காவல் தெய்வத்தின் ஆட்சியில் இளைப்பாறும் போலீசு மிருகங்களோ - மசாலா சினிமா இயக்குநரின் மூளைக்கும் எட்டாத அளவுக்கு ஆபாச, வக்கிர சிந்தனைகளோடு அலைகிறது.

''என்னை இவ்வளவு தூரம் கெடுத்து நாஸ்தி பண்ணிட்டீங்க. குடிக்க ஒரு டம்ளர் தண்ணி கொடுங்க'',

''தண்ணி வேணும்னா என்ன அப்படியே கட்டிப்பிடிச்சு உதட்டில் ஒரு முத்தம் கொடு''

— இது ஏதோ திரைப்படத்தில் வந்த வசனக்காட்சியல்ல. சிதம்பரம் அண்ணாமலை நகர் போலீசு நாய்களால் குதறப்பட்ட பத்மினியின் வாக்குமூலம். கேட்பவர்களுக்கு, படிப்பவர்களுக்கு நெஞ்சம் பதைக்கிறது. ''அவனுகளை கண்டம் கண்டமா வெட்டணும்'' என்று மக்கள் குமுறுகிறார்கள். ஜெயலலிதாவிற்கும் பதைபதைக்கிறது. ஆத்திரப்பட்ட மக்களால் போலீசு புண்ணாகி விடக்கூடாதே என்று அவசரமாகப் பணிநீக்கம் அல்லது இடமாற்றம் செய்ய உத்தரவிடுகிறார் - இதுதான் காவல் தெய்வத்தின் அணுகுமுறை.

ஜனநாயக உரிமை கோரும் மாற்றுக்கட்சிகள் மீதும் தன்னை விமர்சிக்கும் தனிநபர்கள் மீதும் ராஜதுரோக வழக்கு, தடா என கறுப்புச்சட்டங்களை ஏவும் ஜெயாவோ இருட்டறையில் சட்டத்தை பிணமாக்கும் கயவர்களுக்கோ பணிநீக்கம், இடமாற்றம் என 'பஞ்சணை' போடுகிறார். தன்னை நோக்கி கடுமையான குற்றச்சாட்டுகள், விமர்சனங்கள் எழும்போதெல்லாம் தான் ஒரு பெண் என்பதாலேயே இப்படிப்பட்ட இழிவுகளைச் சுமக்க வேண்டியிருக்கிறது

படிப்பகம்

www.padippakam.com

என்று மக்களிடம் கழிவிரக்கம் தேட சோக காட்சியை அமைத்துக் கொள்ளும் ஜெயலலிதாவுக்கு ஒரு பெண் காக்கிச்சட்டைகளால் சிதைக்கப்படும்போது அது வெறும் சம்பவமாகவே படுகிறது. தவறி உடைத்துவிட்ட சட்டி, பானைகளுக்கு விலை போடுவது போல எவ்வளவு நஷ்டஈடு என்று ஏகத்தாளமாக விசாரிக்கத் தயாராகிறது ஜெ. அரசு.

அரசு உரிமம் பெற்ற வெறிநாய்களாய் திரியும் போலீசை அதிகபட்சமாக தண்டிக்காமல் 'தாயுள்ளம் கொண்ட' ஜெயா கொஞ்சமும் கூச்சமின்றி ''சினிமாவில் போலீசை கேவலமாக சித்தரிக்காதீர்கள். காவல்துறையை உயர்த்திக்காட்டும்படி மக்கள் விரும்பும்படி படம் எடுங்கள்'' என்று வேண்டுகோள் விடுக்கிறார். போலீசோ முன்னைவிடவும் கிரிமினலாய் தனது அட்டூழியங்களை மூடி மறைக்கிறது என்பதே தொடரும் உதாரணங்கள். தனது பாதையில் குறுக்கிடுபவர்களை மட்டுமல்ல, தானுண்டு வேலையுண்டு என கதவைச் சாத்திக் கொண்டிருப்பவர்களையும் விட்டுவைப்பதில்லை போலீசு. அதுவும் பொருளாதார சமுதாய செல்வாக்கில்லாத அடிப்படை உழைக்கும் வர்க்கம் என்றால் அது யோசிப்பதே இல்லை.

அண்ணாமலைநகர் பத்மினியும் ஒரத்தநாடு ரெங்கம்மாளும் தானுண்டு, வேலையுண்டு என்று வீட்டில் இருந்தவர்கள்தான். சட்டம்-ஒழுங்கு சரியாய் இருக்கிறது கவலை வேண்டாம் என்கிறது ஜெ. யின் போலீஸ் தர்மம்.

**அப்பாவிப் பெண்ணை காக்கிச் சட்டைகளின் காமவெறிக்குப் பலியாக்க 'அரசாங்க கட்டில்' திட்டம். அனாதைக் குழந்தைகளைப் பாதுகாக்க 'அரசாங்க தொட்டில்' திட்டம். இதுவே ஜெயின் சாதனை!**

காவல் துறையின் சேவையைப் பாராட்டி ஜெயா பதக்கங்களை மாறி, மாறி குத்தினாலும். அது தன் உடுப்புகளையும் அவிழ்த்து எறிந்துவிட்டு, 'நான் மக்களுக்கு எதிரி' என்று அம்மணப்பட்டு நிற்கிறது. பெண்கள் மீதான பாலியல் வன்முறை மட்டுமின்றி லாக்-அப்பில் படுகொலை செய்வது, தந்திரமாக மூடிமறைப்பது என்பதை வாடிக்கையாகக் கொண்டுள்ளது. ஒசூரில் ராஜா என்ற சிறுவனை சாதாரண குற்றத்திற்காகத் தண்டிப்பது என்ற சாக்கில் சிறைக்குள்ளேயே பிணமாக்கியது. ஆனால் பொழுதுக்கும் கிரிமினலாகச் செயல்படும் போலீசை யார் தண்டிப்பது? விருதுநகரில் மனைவி பாண்டியம்மாளைக் காணவில்லை என புகார் தந்த கணவனையே குற்றவாளியாக்கி சிறையிலடைத்து சித்ரவதை செய்தது. பாண்டியம்மாள் உயிரோடு நீதிமன்றத்திற்கு வர விழிபிதுங்கி தனது பொய்வழக்கால் அம்பலப்பட்டுப் போனது. ஆனால் அதன் மனிதத்தன்மை அற்ற தடித்த தோலுக்கு இது எம்மாத்திரம்? அது மேலும் மேலும், பத்மினி, ரெங்கம்மாள், புதுவை விஜயா, முத்தாண்டிகுப்பம் வசந்தா... இன்னம் தமிழகமெங்கும் மூர்க்கவெறியோடு முன்னேறிக் கொண்டிருக்கிறது.

ஜெயலலிதாவோ சாமர்த்தியமாக பெண்களுக்கு சமஉரிமை என்று லத்திக்குச்சியை கைமாற்றிக் கொடுக்கிறார். தமிழகமெங்கும் மகளிர் காவல் நிலையங்களை திறப்பதே ஜெயாவின் இப்போதைய சாதனை. கழுதைவிட்டையில் முன்விட்டை என்ன பின்விட்டை என்ன என்ற கதையாய் அங்கும் அதிகாரமுறைக்கேடால் நாறிக்கிடக்கிறது. ஜெயாவால் திறந்து வைக்கப்பட்ட பர்கூர் மகளிர் காவல் நிலையத்தில் முனியப்பன் என்பவரின் குடும்பத் தகராறை தீர்த்து வைப்பதாய்க் கூறிக் கொண்டு அந்தவீட்டிலிருந்த சென்னியம்மாள் மற்றும் அவரது உறவுக்காரப் பெண்ணை சந்தேகத்தின் பெயரில் அடித்து உதைத்து படுகாயப்படுத்தி இருக்கிறது பெண் போலீசு. அதிகாரத்தில் ஆண்பால், பெண்பால் தேடிப் பார்க்கிறார்கள் அறிவாளிகள். ஆனால் நாங்கள் அனைத்திற்கும் அப்பால் என்பதை ஆணாகவும் பெண்ணாகவும் நிரூபித்துக் காட்டுகிறது போலீசுத்துறை.

பெண்களைப் பிய்த்து எறிவதையே பொழுதுபோக்காகக் கொண்டிருக்கும் போலீசுத்துறையின் தலைவி ஜெயாவோ சர்வதேசப் பெண்கள் தினம் கொண்டாடி வரலாறு பேசுகிறார். ''சங்ககாலத்தில் பெண்கள் கவுரமாக வாழ்ந்தார்கள்'' என்று வாயாறப் பேசுகிறார். மன்னராட்சி பெண்களை தேவதாசி என பொட்டுகட்டி உரிமை கோரியது. மகாராணி ஜெ. ஆட்சியோ போகிற வருகிறவர்களுக்கெல்லாம் பொட்டு கட்டப் பார்க்கிறது. மன்னனைப் பாடியவர்களுக்கு மரியாதை நிமித்தமாய்ப் பரிசுகள் இடைத்தன. இன்றோ மானம் போனவர்களுக்கு நஷ்ட ஈடு. பாசிஸ்டுகளின் வரலாற்றில் ஜெயா முன்னேறிக் கொண்டிருக்கிறார்.

சட்டத்திற்கும் - ஒழுங்கிற்கும் சம்பந்தமே இல்லை என்பது தான் மக்களின் அனுபவம், சென்னை மெரீனா கடற்கரை துப்பாகிச் சூடுமுதல் தருமபுரியில் புரட்சியாளர்களை வேட்டையாடுதல் என இளைஞர்களை படுகொலை செய்தது வரை சட்டத்தை தன் மயிரளவுக்கும் கூட மதிக்கத் தயாராய் இல்லாத போலீசு அதிகாரி தேவாரம் விபத்துக்குள்ளானதும் ஜெயாவும், பெரிய மனிதர்களும் ஓடோடி வந்து அக்கறையோடு நலம் விசாரிக்கிறார்கள். தனது நம்பகமான நாயைப் பராமரிக்கும் எஜமானைப் போல ஜெயலலிதா தனது விசுவாச நாயை விசாரிக்கிறார். உடலும், மனமும் சிதைந்த நமது சகோதரிகள் மீது இந்த அக்கறையும், கரிசனமும் வராதது ஏன்? அங்கு ஏன் போய் விசாரிக்கவில்லை?



ஜெயாவையும் தாண்டி பெண் போலீஸ் அதிகாரி திலகவதியோ தேவாரம் குணமாக தேர் இழுக்கிறாராம். ஆனால் காவல்துறையால் கடித்துக் குதறப்பட்ட நமது சகோதரிகளுக்காக, சீர்கெட்டுப்போன இந்தச் சட்டம் - ஒழுங்கை ஒரு மயிரளவும் இழுத்து எறிய இவர்கள் வருவார்களா? வரமாட்டார்கள். ஏனெனில் இவர்கள் ஒரே ரகம்.

முற்றிலும் சிதைக்கப்பட்டு, வாழ்க்கையில் நம்பிக்கை இழந்து, பழிசொல்லுக்கு அஞ்சி காக்கிச்சட்டையின் மிருகவெறிக்கு சாட்சியாய் நடந்து கொண்டிருக்கிறார்கள் பத்மினியும், ரெங்கம்மாளும். சமூகநலத் துறை அமைச்சர் இந்திரகுமாரியோ ''இந்தியாவிலேயே பெண்களின் மேல் அக்கறையோடு, பல்வேறு மகளிர் மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றுவது புரட்சித்தலைவிதான்'' என்று தன் பங்குக்குப் புளுகுகிறார். அவர் மொழியில் கூறுவதானால் அப்பாவிப் பெண்களை காக்கிச்சட்டைகளின் காமவெறிக்குப் பலியாக்க 'அரசாங்க கட்டில்' திட்டம். அனாதைக் குழந்தைகளைப் பாதுகாக்க அரசாங்க தொட்டில் திட்டம். இதுதான் 'ஜெ' யின் சாதனை. உலகத்தின் ஒரே பெண் என்கிறார் புலவர் இந்திர குமாரி. சமுதாயநீதிகாத்த வீராங்கனை என்கிறார் வீரமணி.

தன்மானத்தை விலைபேசத் தயங்காதவர்கள், பிறர் மானம் போவது பற்றி கவலைப்படுவதில்லை. இதோ ஒரத்தநாடு ரெங்கம்மாவின் கதறல்: ''என்னை யாராவது காப்பாத்துங்க...!'' சமூகநீதி காத்த வீராங்கனையையும், சட்டம் ஒழுங்கையும் காப்பாற்ற புறப்பட்டு விட்டார்கள் மரத்துப்போன தளபதிகள். நமது சகோதரிகள் வாழ்வுக்காக, போராடும் உரிமைக்காக நாமும் நமது படையைக் கட்டுவது ஒன்றே போலீசு மற்றும் அதிகாரவர்க்க அட்டூழியங்களுக்கு எதிரான சமூக நீதியாகும்.

● சித்தன்

## அறிவிப்பு

அகர காலம், இருண்ட காலம் ஆகிய ம க இக -வின் ஒலிப் பேழைகள் மற்றும் வெளியீடுகள் தேவைப்படுவோர் இனி கீழ்க்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

தமிழ் மணி,
உதயசூரியன் தேநீர் விடுதி, காந்தி புரம்,
தில்லை நகர், 5-வது குறுக்குத் தெரு, திருச்சி-18

டிராப்டுகள் மற்றும் மணி ஆர்டர்களையும் தமிழ்மணி என்ற பெயருக்கே அனுப்பவும். புதிய கலாச்சாரம் மற்றும் ம க இக தலைமை அமைப்புடன் தொடர்பு கொள்ள மட்டும் சென்னை முகவரிக்கு எழுதவும்.

-ம க இ க, தமிழ்நாடு.



படிப்பகம்

www.padippakam.com

# கிணற்றில்

கிராமப்புற சாதிவேலைகளைச் செய்வதில் எத்தனையோ அபாயங்கள் உண்டு. அவை எனக்கு நன்றாகத் தெரியும். மகர்சாதியாகிய எங்கள் சமூகத்தில் எப்போதும் தொங்கிக் கொண்டிருக்கும் தூக்குக் கயிறு அது. கிராம வேலை செய்து செய்தே என் அப்பா அழிந்து போனார். அவருடைய அனுபவத்தில் இதுவும் ஒன்று - மரணத்தைத் தொட்டுத் தொட்டுத் திரும்பவேண்டிய வேலை ஒன்றும் அப்பாவுக்கு உண்டு. அதை இப்போது நினைத்தாலும் நடுங்கி விடுவேன்.

எங்கள் கிராமம் காமத். அந்த கிராமத்தில் குலத்தொழில் செய்ய எங்கள் முறை வந்தது. காமத் கிராமத்தில் எங்களுக்கு ஒரு வீடு இருந்தது. அது கோடைக்காலம். எனக்குப்பள்ளி விடுமுறையானதால் ஊருக்குத் திரும்பியிருந்தேன்.

ஒரு நாள் - கிராமத்துக்கு அருகிலே உள்ள பாழடைந்த கிணற்றில் ஒரு பிணம் ஊதிப் போய் மிதந்து கொண்டிருந்ததாகச் சேதி வந்தது. கிராமத் தலைவர் பாட்டீல பகலிலேயே இந்தச் சேதியைத் தெரிந்திருந்தார். அப்பாவும், கூட ஒரு ராமோசியும் சேர்ந்து அந்தப் பிணம் உள்ள இடத்தைப் பற்றி முறையாக கிராமத்தலைவரிடம் தெரிவித்துவிட்டு கிணற்றின் அருகில் நின்று இரவு முழுதும் பிணத்தைப் பாதுகாத்தார்கள்.

அடுத்த நாள் - விடிந்தது. ஹெட் கான்ஸ்டபிளும் ஒரு கான்ஸ்டபிளும் அக்கிராமக் காவல் நிலையத்திலிருந்து வந்து பிணத்தைப் பற்றி விசாரிக்கவேண்டிய வழக்கமான நேரம் கூடக் கடந்து கொண்டிருந்தது. அதுவரை பிணத்தைக் காப்பாற்ற வேண்டியது மகர், ராமோசியின் பொறுப்புத்தான். இது இப்படித்தான் நடக்கும் என்று என் அம்மாவுக்கு நன்றாகவே தெரியும். இன்றோ நேரம் போய்க் கொண்டே இருந்தது; அப்பா வீடு திரும்பவே இல்லை; அம்மா புளிக்காத மாவினால் ரொட்டி சுட்டு துணியில் பொதிந்து அப்பாவுக்குக் கொடுக்க என்னை அனுப்பினாள்.

கிணற்றடிக்கு நான் ஓடினேன். அப்பா வாடி வதங்கி உட்கார்ந்திருந்தார். ''என்னப்பா ராத்திரி கூட வூட்டுக்கு வரலே அம்மா காத்துக்கிட்டிருக்காங்க. எப்ப வருவீங்க?'' - ஓடிய வேகத்தில் மூச்சிரைக்க புகார் செய்தேன். அப்பா சாவகாசமாக கிணற்றை நோட்டம் போட்டுவிட்டு மெலிந்த குரலில் முனகுவது போல் பேசினார் ''கான்ஸ்டபிள் வரணும்பா. அவுங்க வந்து விசாரணை தொடங்கனும். அதுக்குப் பிறகுதாண்டா மகராப் பொறந்தவனுக்கு ஓய்வு. நான் திரும்ப நேரமாகும்னு போயி சொல்லுடா, என்னா?''

அப்பா பையிலிருந்து ஒரு குழாயை எடுத்தார். அதில் புகையிலையை நிரப்பிக் கொண்டார். கல்லைத் தட்டிப் பற்ற வைத்துக் கொண்டு புகைக்கத் தொடங்கினார். அவர் பசியைப் புகையால் ஆற்றிக் கொள்வதாகத் தோன்றியது. அப்போது தான் எனக்கு அம்மா கொடுத்த ரொட்டி நினைவு வந்தது. ''அப்பா, அப்பா, அம்மா ரொட்டி கொடுத்துவிட்டாங்க'' - துணியை எடுத்து நீட்டினேன்.

''டேய், இந்தப் பொனத்தைப் பத்தின எல்லா விவரங்களும் முடிஞ்ச பெறகுதான் என்னால சோறு திங்க முடியும். அதுவரைக்கும் பட்டினிதா கெடக்கனும் — அப்பா பெருமூச்சு விட்டார். ''இதெல்லாம் எப்பதான் முடியும்?'' — நான் பொறுக்க முடியாமல் குறுக்கிட்டேன்.

''கொஞ்ச நேர முன்னாடி தலைவரு வந்தாரு. அதா இருக்காரு. அவுங்க வீட்டுல தான் கான்ஸ்டபிளுங்க சாப்பிட்டுக்கிட்டு இருக்காங்களாம். குடிச்சு சாப்பிட்டுத் தான் அவுங்க வருவாங்க. பொனத்த எடுத்து வெளில போட்ட பின்னாடி விசாரணை நடக்கும். அதுக்குப் பொறவு ஏதும் நமக்கு வேலை இல்ல''

அப்பா காட்டிய திசையில், தொலைவில் பெரிய ஆலமரத்தடியில் தலைவர் ஆட்களோடு உட்கார்ந்திருந்தார். இப்போதுதான் அவரை நான் பார்த்தேன். ''அப்பா கான்ஸ்டபிளுங்க சாப்பிட்டுத்தான் வருவாங்க. தலைவரும் வயித்த ரொப்பிக்கிட்டு வந்துட்டாரு. நீங்க ஏன் ரொட்டிய சாப்பிட மாட்டிறீங்க? நீங்க மட்டும் பசியா இருக்கணுமா?''

''அய்யய்யோ, டே, அவுங்கல்லாம் ஆபீசருங்க. அவுங்களால சாப்புடாம எப்படிப்பா வேலை செய்ய முடியும்?''

''நீங்க மட்டும் எதுக்கு பசி வயித்தோட வேலை செய்யறீங்க? நாமளும் மனுசங்கதானே?'' எனக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

அப்பா வறட்டுச் சிரிப்போடு பதில் கொடுத்தார் ''அதாண்டா மகனே கிராம சேவை. மகர்சாதில பொறந்தமுன்னா நாம சாவுறமா வாளுறமான்னு யாருக்குடா கவல?''

நான் யோசித்தேன்; எனக்கு ஒரு வழி தோன்றியது. ''சரிப்பா, நீங்க ரொட்டியைச் சாப்பிடுங்க. அதுவரைக்கும் ராமோசிகூட நின்னு நா(ன்) காவல் பாக்கிறேன்''.

அப்பா தீயை மிதித்தவர் போல குதித்தார். ''வேண்டாமடா வேண்டாம். கிராம வேலை உனக்கு வேண்டவே வேண்டாம். இதுவரை நாங்க சகிச்சிக்கிட்டது போதாதா? ஒரே ஒரு நா(ள்) நீ கிராம வேலை செஞ்சசேன்னா அப்புறமா வாழ்நா பூரா நீ இந்த வேலையத்தான் செஞ்சாகனும். அதுதான் நம்ம மரபுடா மகனே. இது நம்ம தல எழுத்து. நீ வீட்டுக்குப் போ, நா நேரம் கெடச்சா சாப்டுக்கறேன்!'' - அப்பாவின் குரலில் குடும் கடுமையும் கலந்து தெரிந்தது.

நான் அப்பாவோடு பேசிக் கொண்டிருந்த போதே தொலைவில் கான்ஸ்டபிள்கள் குதிரையில் வரும் குளம்பொலிச் சத்தம் கேட்டது. குதிரைகள் இரைக்க இரைக்க ஓடி வந்தன. கிணற்றை நெருங்கிய அவர்கள் கீழே குதித்தனர். நெருங்கியிருந்த கிராமத்து மக்கள் பயத்தோடும், மரியாதையோடும் விலகி வழி விட்டனர். தூரத்திலிருந்தே



மரியாதை செலுத்தினார் ராமோசி. கிராமத் தலைவர் எழுந்து நின்று வணக்கம் சொன்னார். அப்பா மட்டும் நன்றாக உடம்பைக் குறுக்கி குனிந்து வணக்கம் செலுத்தினார். ராமோசி குதிரையை அருகிலிருந்த அரச மரத்தில் கட்டினார். ஓடைக்கு அருகில்



படிப்பகம்

www.padippakam.com

# ரு பிணம்



ள்ள வயலில் மற்றொரு கிணறு உண்டு. திலிருந்து அப்பா ஒரு குடம் தண்ணீர் காண்டு வந்தார்; குதிரைக்கு முன்னால் ரு நீண்ட இரும்புத் தொட்டிவைத்து தில் நீரைக் குளிர நிரப்பினார். மகரும், மோசியும் குதிரைக்காக எல்லா முன் ஏற்பாடுகளையும் செய்து வைத்திருந்தார்கள் — பச்சை நிற சோளத் தட்டைகளைக் குவித்து வைத்திருந்தார்கள்; குதிரை ஆசையோடு அதை இழுத்து அசைபோட ஆரம்பித்தது.

ஹெட்கான்ஸ்டபிள் லத்தியைச் சுழற்றியபடியே கிணற்றைச் சுற்றி வந்தார். அப்படியே கிணற்றில் ஒரு பார்வை பார்த்துக் கொண்டார். மீண்டும் கிணற்றைச் சுற்றி வந்தார். மறுமுறை கிணற்றை எட்டிப் பார்த்தார். படிக்கட்டுகளை நோக்கி நடந்தார்.

கிணற்றின் மேல் படிக்கட்டுகள் மண்ணில் புதைந்து மறைந்து கிடந்தன. சில கீழ்ப் படிக்கட்டுகள் தண்ணீருக்குள் விழுந்துவிட்டன. சில தொற்றிக்கொண்டு நின்றன. அது ஒரு பாழடைந்த கிணறு; அதனுடைய கட்டமைப்பு மிகப் பழசு. கிணற்றின் மேல் பாகத்தை எப்போதோ வந்த வெள்ளம் உடைத்து அடித்துச் சென்று விட்டது. கிணற்றுத்தண்ணீர் பயன்படுத்தப்படாமல் பாசி படர்ந்து கிடந்தது. அருகிருந்த மரங்களிலிருந்து சருகுகள் விழுந்து அழுகி நாறியது.

கிணறு ஆழம் அதிகம். இவ்வளவு அருவெறுப்பூட்டும் கிணற்றிலிருந்து பிணத்தை எப்படி அகற்றுவது? ஹெட்கான்ஸ்டபிள் விசனமாக இருந்தார். கான்ஸ்டபிள் திடீரென கிராமத் தலைவரின் காதுகளில் எதையோ முணுமுணுத்தார். ஹெட்கான்ஸ்டபிள், உடனிருந்த கான்ஸ்டபிள், கிராமத்தலைவர் மூவரும் பிணத்தை எப்படி அகற்றுவது என்று ஏதோ ரகசியமாக விவாதித்தனர்.

அவர்கள் விவாதித்து முடித்த பின் கான்ஸ்டபிள் அப்பாவிடம் வந்து உரக்கக் கத்தி கட்டளை போட்டார்: ''டேய் மகர், எதுக்காவடா காத்துக்கிட்டிருக்கே. கிணத்துல குதி. எவ்வளவு நேரம்டா ஆபீசர் நின்னுகிட்டிருப்பாரு?''

அப்பா பட்டென்னு பதில் சொன்னார். அவரது துணிச்சல் எனக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. ''ஐயா, மகரின் வேலை பிணத்திற்குக் காவல் காப்பது மட்டும்தான். நாங்க எப்படி அதைத் தொட முடியும்? பிணத்தோட சொந்தக்காரங்கள்லாம் என்ன சொல்லுவாங்க? என்னய சும்மா வுடுவாங்களா?''

ஹெட்கான்ஸ்டபிள் வெட்டிப் பேசினார்: ''என்னாடா சொல்வாங்க?''

''அவுங்க சொந்தக்காரங்க எல்லாம், எங்களுடைய ரத்த உறவுக்காரரு பிணத்தை நீ தொட்டுத் தூக்கிட்டியான்னு எங்க சாதியயே குரோதத்தோட ஒதுக்கி வச்சிருவாங்க''

''டேய் நான் உத்தரவு போடுறேண்டா, ஒனக்கேன்டா அதைப்பத்தி கவல?''

''நீங்க இங்க இருந்து போயிடுவீங்க. எங்க சாதிக்காரங்கள அம்போன்னு விட்டிட்டுப் போயிடுவீங்க. நாங்க இந்த கிராமத்துலயே வாழ விரும்புறோமுங்க'' — அப்பா தவிப்போடு புலம்பினார்.

அப்பாவுக்கும் ஹெட்கான்ஸ்டபிளுக்கும் நடந்த விவாதங்களை நான் கவனமாகக் கேட்டேன். இதைப் பார்க்கவும் கேட்கவும் எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. அவர்கள் சாபமிட்டார்கள்; பயமுறுத்தினார்கள்; சத்தம் போட்டார்கள் — எல்லாவற்றையும் நான் கேட்டேன். எது எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டுமே — யாருடைய பிணம் இது? யாருடைய கிணறு இது? அவர்களுக்காக என் அப்பா ஏன் பயமுறுத்தப்பட வேண்டும்? சாபமிடப்படவேண்டும்?

அப்பா எந்தத் தவறும் செய்யவில்லை. ஆனால் அவருக்கு ஏன் அநீதி இழைக்கப்படுகிறது? — கோபமும் வெறுப்பும் சேர்ந்து கொள்ள நானும் வாதாடினேன்.

''எங்க அப்பாவை எதுக்காகத் திட்டறீங்க? பொணத்தோட உறவுக்காரங்க வரட்டும். பிணத்தை அப்புறப்படுத்தட்டும். அப்படியில்லையா, அது அரசாங்கத்தோட கடமைன்னு நீங்க நெனைச்சா, நீங்களே செய்யுங்க. அப்பா ஒரு சாதாரண மகர்ங்கிறதால தானே எல்லாரும் பயமுறுத்தறீங்க?'' — நான் ஒரே மூச்சில் வார்த்தைகளை அள்ளி வீசினேன்.

உடனே, ஹெட்கான்ஸ்டபிள் வெறிபிடித்தவனைப்போல அலறினான். ''யார்ரா இந்த அற்பப்புழு?'' ''இவனைப் புடிங்கடா, இந்தத் தேவடியா மவனைச் செம்மையா சாத்துங்கடா''

கான்ஸ்டபிள் என்னைத்தாக்க ஓடி வந்தான். இரண்டு அடி பின்னால் போய் நான் என் அப்பாவுக்கருகில் நின்று கொண்டேன். அப்பா என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அதட்டுகிற தோரணையில் தேற்றினார்.

''டேய், பேசாம இருடா, இதெயல்லாம் புரிஞ்சிக்கிட ஒனக்கு வயசு பத்தாது. எது வந்தாலும் நாம தாங்கிக்கிட்டாகணும்டா....''

அப்பாவின் பேச்சிலிருந்து வேறு வழி எதுவும் இல்லை என்பது தெரிந்தது. ஒவ்வொருவரும் அப்பாவுக்கு எதிராகப் பேசி அவரை ஒரு முடிவெடுக்கத் தள்ளினார்கள். அப்பா எழுந்தார். தன் உடைகளைக் களைந்து ஒரு பக்கமாய் வைத்தார். கிணற்றின் வலுவான பக்கம் சென்று எட்டிப் பார்த்தார். கிணற்றின் ஒரு பக்கம் மொட்டையாக நின்ற தூணில் ஒரு பக்கக் கயிற்றைக் கட்டி மறு முனையைத் தண்ணீருக்குள் வீசினார். பிறகு கயிற்றைப் பிடித்துக்கொண்டு வெகு வேகமாக நழுவி கீழே இறங்கினார்.

கிணற்றில் பாதி தூரம் கடந்திருப்பார். நான் கிணறு முழுவதையும் நோட்டமிட்டவாறு அப்பா கீழே போவதைப் பார்த்தேன். திடீரென்று ஒரு நீண்ட பாம்பை ஒரு ஓரத்தில் பார்த்தேன். ''அப்பா! கீழே பாரு பாம்பு... பாம்பு...'' — நான் அலறினேன். நான் சத்தம் போட்டதைக் கேட்டவுடன் அப்பா நகருவதை நிறுத்திவிட்டு கயிற்றில் தொங்கியபடியே கீழே பார்த்தார். நான் பயந்து போய் கத்தினேன்: ''அப்பா,



படிப்பகம்

www.padippakam.com

அந்தப் பாம்பு பொணத்துகிட்ட வருது பாருங்க. பாறைக்கு அடியில இருந்து வருதுப்பா. மேல வாங்கப்பா நீங்க ....இல்லன்னா நானும் அங்கே வருவேன்''

நான் தொடர்ச்சியாக கத்துவதைக் கேட்டு மிரண்ட அந்தப் பாம்பு தண்ணீரில் பாதி தூரம் வந்து நின்று வந்த வழியே திரும்பி விட்டது. வளையின் அருகில் சென்று பிணத்தையே பார்த்துக் கொண்டிருந்தது. அப்பா இன்னமும் தொங்கிக் கொண்டிருந்தார். என் சத்தம் கேட்டு அருகிலிருந்தவர்கள் ஓடி வந்து கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தார்கள்.

பாம்பைப் பார்த்துக் கொண்டே உரத்த குரலில் கிராமத் தலைவர் ''டேராமா, அது வெஷமில்லாத பாம்புடா, கடிக்காது'' என்றார்.

அவருடைய புத்திசாலித்தனம் எரிச்சல் ஊட்டியது. ''அப்ப நீ ஏன் கெணத்துல எறங்கல? கெணத்துல நீ எறங்கியிருந்தீன்னா அது என்னன்னு உனக்குத் தெரிஞ்சிருக்கும்.'' - நான் பதில் கொடுத்தேன்.

தலைமைக்காவலர் என்னை எரித்துக் கொல்வதுபோல பார்த்தார். ''டேய் அதிகப்பிரசங்கி வாயை மூடுடா'' அப்பாவிடம் உத்தரவும் போட்டார் ''டே மகர், எறங்குடா கீழே எறங்கு, எனக்கு நேரமாவுது''

நான் ரகசியமாக கிசுகிசுப்பான குரலில் அவனைத் திட்டினேன்: ''இந்தப் போலீஸ் ஒளிஞ்சி போவட்டும்... இவன் மனுசனா பிறந்தானா? மிருகமாப் பொறந்தானா? எவனுக்குப் பொறந்தவனுகளோ?...''

அப்பாவைப் பார்த்தேன். அவரது முகம் உணர்ச்சிக் கொந்தளிப்பாக இருந்தது. அவரைப் பார்த்துக் கூடிய மட்டும் கத்தினேன்: ''யப்பா, கீழே போவாதீங்க. மேலே வாங்க. இல்லேன்னா நான் ஒரே நிமிசத்துல கீழே எறங்கிடுவேன். எது நடந்தாலும் அது எனக்கும் நடக்கட்டும். நீங்க இல்லேன்னா குடும்பமே அனாதை ஆயிடும்பா.''

அப்பா என்னைப் பார்த்தார். நம்பிக் கையிழந்த நிலையில் கோபம் கலந்து அவர் பேசினார். ''மவனே, எது நடந்தாலும் எனக்கு மட்டும் நடக்கட்டும்டா. இந்தக் கிராமம் அப்போதுதான் ராமன் பாம்பு கடிச்சி செத்தான்னு தெரிஞ்சிக்கும்டா. கிராம சேவ செஞ்சப்ப, பாழடைஞ்ச கெணத்துல இருந்து பொணத்த எடுக்குறப்ப பாம்பு கடிச்சி செத்துட்டான்னு கிராமத்துக்கே தெரியட்டும். அரசாங்கத்துக்கு, உலகம் பூராவுக்கும் தெரியட்டும்''

அதற்கு மேல் அப்பா தாமதிக்கவில்லை. உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு பிணம் உள்ள பக்கமாகச் சென்றார். பிறகு மேலேயிருந்து வீசப்பட்ட கயிற்றைப் பிடித்துக்கொண்டு பிணத்தின் கால்களையும், தலையையும் கட்டினார்; இறுக்கமாக முடிச்சுப் போட்டார். ''இழுங்க, இப்ப இழுவுங்க'' வேகமாக வேலையை நகர்த்துவதற்காகக் குரல் கொடுத்தார்.

அப்பாவைப் போலவே எங்க சாதியைச் சேர்ந்த மத்த மகர்கள் பிணத்தை வெளியே இழுத்துப் போட்டார்கள். கிணற்றின் உள்ளே அப்பா பாம்பின் மீது ஒரு கண் வைத்துக் கொண்டே இருந்தார். அது தன்னைச் சுற்றி வட்டமிட்டுப் பாய்ந்து கடித்துக் கொன்று விடுமோ என்று பயந்தார். பாம்பு சுறு சுறுப்பாகத் தலையை ஆட்டிக் கொண்டேயிருந்தது. அப்பா கயிற்றைப் பிடித்துக் கொண்டு மேலே ஏறினார். அந்தப்பாம்பு பொந்திலிருந்து வெளியே வந்து படிக்கட்டை நோக்கி தண்ணீரில் சர்ரென்று நீந்தி வந்தது. அந்த வேகம், அதன் மேனி மினுமினுப்பு, அது சாதாரண பாம்பல்ல என்று காட்டியது

அப்பாவிற்கு வந்த ஆபத்து போய் விட்டது. என் பீதி குறைந்து விட்டது. கண்ணீர் ததும்பி வழிந்தது. அப்பா என்னை அருகில் அழைத்துக் கொண்டார்; அவர் கண்களிலும் வெப்பம் ஏறியிருக்க வேண்டும்; உணர்ச்சி வடியாமல் முகத்தை இறுக்கிக் கொண்டு என் கண்ணீரைத் துடைத்தார்.

அந்தப் பிணம் ஊதிப் போயிருந்தது; பார்க்க கோரமாக, அருவெறுப்பாக இருந்தது; துர்நாற்றம் குடலைப் புரட்டி எடுத்தது; எல்லோரும் மூக்கை மூடி சரேலென்று ஒதுங்கினார்கள்.

முதல்கட்ட விசாரணை அங்கேயே நடந்தது. பண்ணையிலிருந்து வந்த மாட்டு வண்டியில் மகர்கள் பிணத்தைத் தூக்கி வைத்தனர். பிணத்தின் மேல் வேப்பிலை பரப்பப்பட்டது.

பிறகு அவர்கள் வண்டிச் சோடையில் கிளம்பினார்கள். பிணம் டாக்டர்கள் பரிசோதனைக்காகப் போகிறது என்று குசுகுசுவென்று பேசிக் கொண்டார்கள். டாக்டர் வீடு எட்டு மைலுக்கு அப்பால் இருக்கிறதாம்.

கிராம மகரான அப்பா, இன்னொரு மகர், இரண்டு ராமோசிகள், ஒரு கான்ஸ்டபிள் எல்லோரும் அந்தப் பிணத்துடன் சென்றனர். அப்பா, அவருக்காக நான் எடுத்துவந்த ரொட்டியை வாங்கி வேட்டியின் ஒரு மூலையில் முடிச்சுப்போட்டுக் கட்டினார்.

''எலேய், நீ வீட்டுக்குப்போ, பிணத்தோட ஆசுபத்திரிக்கு போயிருக்கேன்னு அம்மாட்ட போயிச் சொல்லு...''

அப்பா போய் விட்டார். வண்டிச்சோடையின் அந்தக் கோடியில் வண்டியும், தலைகளும் புள்ளியாய்க் கரைந்து விட்டன.

வெகுநேரம் அங்கேயே நின்று கொண்டிருந்து விட்டுப் பிறகுதான் வீட்டுக்குப் போனேன் — எல்லாம் மரத்துப் போய் விட்டது.

● சங்கர்ராவ் காரட்
மராத்திய தலித் எழுத்தாளர்
ஆங்கிலம் வழியாக தமிழாக்கம்: மணி

## தோழர் அருண் சன்யமாத்துக்கு சிவப்பஞ்சலி

அனைத்திந்திய புரட்சிகர பண்பாட்டுக் கழகத்தின் இணைச்செயலர் தோழர் அருண் சன்யமாத், கடந்த மார்ச் 20-ம் தேதியன்று இதயநோய் காரணமாக இயற்கை எய்தினார். கிழக்கு வங்காளத்தில் (இன்றைய வங்காள தேசம்) பிறந்த தோழர் சன்யமாத், கல்கத்தாவில்தான் படித்தார், வளர்ந்தார், உயர்கல்வி கற்றிருந்த போதும் ஒரு ஆலைத் தொழிலாளியாக தன் வாழ்க்கையைத் துவங்கினார்.

பொதுவுடைமைக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, தன் இளம் வயது முதலே ஒன்றுபட்ட பொதுவுடைமைக் கட்சியில் இணைந்து செயல்பட்டு வந்தார். நக்சல்பாரி எழுச்சியைத் தொடர்ந்து புரட்சிகர பொதுவுடைமை இயக்கத்துடன் தன்னை இணைத்துக் கொண்டு செயலாற்றினார். புரட்சிகர எழுத்தாளர்கள், கலைஞர்கள் மற்றும் அறிவுத்துறையினர் சங்கத்தினை (RWAIA) மேற்கு வங்கத்தில் தோற்றுவித்து, 1985 முதல் கடந்த 10 ஆண்டுகளாக அதன் செயலாளராகவும், அ.இ.பு.ப. கழகத்தின் இணைச் செயலராகவும் செயல்பட்டு வந்தார்.

புரட்சிகரக் கவிஞராகவும், இலக்கிய விமரிசகராகவும், நாடக ஆசிரியராகவும் வங்காளத்தில் அறியப்பட்டிருக்கும் தோழர் சன்யமாத், RWAIA இன் இலக்கிய ஏடான 'சங்கதி' யின் ஆசிரியராகவும் செயல்பட்டு வந்தார். நக்சல்பாரி எழுச்சியின் 25-வது ஆண்டு நிறைவையொட்டி தோழர் சன்யமாத் எழுதிய 'மீண்டும் நக்சல்பாரி' என்ற கவிதை 'புதிய கலாச்சாரத்'தில் வெளிவந்துள்ளது.

தோழர் அருண் சன்யமாத்தின் மரணம் புரட்சிகர இயக்கத்திற்கும், புரட்சிகரப் பண்பாட்டு இயக்கத்திற்கும் ஓர் பேரிழப்பு. தோழர் அருண் சன்யமாத்திற்கு நம் செவ்வணக்கம்!

மக்கள் கலை இலக்கியக் கழகம்

''புதிய கலாச்சாரம்''
பற்றிய அறிக்கை
4-வது பாரம் (8-ம் பிரிவுப்படி)

| | | |
|---|---|---|
| 1. | வெளியிடும் இடம் | - சென்னை |
| 2. | வெளியிடும் காலம் | - மாதம் ஒரு முறை |
| 3. | அச்சிடுபவர் | - எம் கே.சாமி |
| | தேசிய இனம் | - தமிழர் |
| | முகவரி | - பிரேம் பிரஸ், 107 ஏ, பெரியார் பாதை, (மேற்கு) சென்னை - 600 094 |
| 4. | வெளியிடுபவர் | - வி. வல்லபேசன் |
| | தேசிய இனம் | - தமிழர் |
| | முகவரி | - 22, சாமியார் தோட்டம் ஆலந்தூர் சாலை, சைதாப்பேட்டை, சென்னை-15. |
| 5. | ஆசிரியர் | - வி. வல்லபேசன் |
| | தேசிய இனம் | - தமிழர் |
| | முகவரி | - 22, சாமியார் தோட்டம், ஆலந்தூர் சாலை, சைதாப்பேட்டை, சென்னை-15 |
| 6. | உரிமையாளர் | - வி. வல்லபேசன் |
| | தேசிய இனம் | - தமிழர் |
| | முகவரி | - 22, சாமியார் தோட்டம், ஆலந்தூர் சாலை, சைதாப்பேட்டை, சென்னை-15. |

வி. வல்லபேசனாகிய நான் மேற்கூறிய தகவல்கள் அனைத்தும் உண்மையே என இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.
1.5.1994 (ஒப்பம்) வி. வல்லபேசன்,
வெளியிடுபவர்.

படிப்பகம்

www.padippakam.com

# போலி மார்க்சிஸ்டுகளின் வேத உபதேசம்

இதுவரை ''புதிய கலாச்சாரம்'' வாசகர்களுக்கு ''அறிவுச் சோதனைப் போட்டி'' எதையும் நாம் நடத்தியதில்லை. இப்போது ஒரு சிறு ஆவல்! அதையும் செய்து பார்த்து விடுவோமே! கீழே தரப்படும் மேற்கோள்கள் யாருடையது என்று வாசகர்களால் கண்டுபிடிக்க முடிகிறதா பார்ப்போம்!

''பல்வேறு மன்னர்கள் ஆட்சி நடத்திய நாடுகளாகத்தான் இந்திய உபகண்டம் இருந்தது. ஆனால், இந்த உபகண்டத்தில் வாழ்ந்த மக்களுக்கிடையே ஏதோ ஒரு விதமான இணைப்பும் - பிணைப்பும் நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிறது. இந்திய மக்களின் மொழிகளுக்கிடையிலான தொடர்புகள், இலக்கியங்கள் - இதிகாசங்கள் மூலமாக ஏற்பட்டுள்ள ஆன்மீகப் பிணைப்புகள், ஆச்சாரங்கள் அனுஷ்டானங்களில் காணப்படுகிற ஒருமைப்பாடுகள், மத நம்பிக்கையினாலும் - கடவுள் வழிபாட்டினாலும் ஏற்பட்டுள்ள ஒற்றுமை உறவுகள் - இவைகளினால் ஏற்பட்ட இந்தியா என்ற இந்தியர் என்ற உணர்வு ஆழமாகவே வேரூன்றியுள்ளது''.

''வேதங்கள், உபநிடதங்கள் இந்திய உபகண்டத்தில் சில ஆயிரம் ஆண்டுகள் கோடிக்கணக்கான மக்களின் உணர்வைப் பற்றிக் கொண்டிருந்த தத்துவங்கள்''

''இந்தியா வேதங்களின் நாடு என்றும் இந்தியாவின் ஆரம்பகால கலாச்சாரம் வேத கலாச்சாரம் என்றும் தான் உலகில் அறியப்படுகிறது. வேதங்களையும் வேதகலாச்சாரத்தையும் உருவாக்கியதில் ஆரியர்கள் தான் பிரதான பங்குவகித்தனர் என்பதும் வரலாற்று உண்மையாகும். இதனை ஆரியர் கலாச்சாரம் என்றும் கூறுவர்''.

நால்வருண முறையும் சாதீய முறையும் நிலவிய காலத்தில் தான், ''இந்திய நாடு, இந்திய மக்கள், இந்தியச் சமுதாயம் என்று உருவாகியது. அது ஆரம்பத்தில் பாரத தேசம் என்று அறியப்பட்டது. பிற்காலத்தில் இந்தியா என்று ஆகியது. வேதங்களும் இதிகாசங்களும் இதில் பெரும் பங்காற்றின''.

''சமூக விஞ்ஞானிகள், வரலாற்றாசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் இந்தியாவை அறியும் தாகத்தால் இந்திய வேதங்களையும் இதிகாசங்களையும் ஆழ்ந்து ஆராய்கின்றனர். அயல் நாடுகளில் தங்கள் மொழியில் இவைகளை வெளியிடுகின்றனர். இந்தியாவின் பண்டைக்கால கலாச்சாரத்தைப் போற்றுகின்றனர். இந்தியர்களான, நாமெல்லாம் பெருமைப்படக்கூடிய இந்தக் கலாச்சாரத்தை உருவாக்கியவர்கள் 'ஆரியர்கள்' என்ற பேரில் வரலாற்றில் அறியப்படுகிறார்கள். அதன் காரணமாக பண்டைக்கால இந்தியக் கலாச்சாரத்தை 'ஆரியக் கலாச்சாரம்' என்றும் அந்தக் கலாச்சாரத்தின் தோற்றுவாய் வேதங்களாக இருந்ததினால் வேதக்கலாச்சாரம் என்றும் அறிஞர்கள் அழைக்கின்றனர்''.

''இந்தியக் கலாச்சாரத்தில் ஆரியர்களால் இயற்றப்பட்ட வேதங்களும் இதிகாசங்களும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை இந்தக் கலாச்சாரம் தான் இந்திய மக்களின் கலாச்சாரமாக நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிறது''.

''வேதங்கள், உபநிஷத்துகள், பல்வேறு விஞ்ஞானத் துறைகள் குறித்து எழுதப்பட்ட நூல்கள், புராண இதிகாசங்கள், காவிய நாடக இலக்கிய நூல்கள் - இவைகள் மூலமாக மனித சமுதாயத்தின் கலாச்சார வளர்ச்சிக்கு விலை மதிக்க முடியாத பங்கு செலுத்த ஆரிய சமூகத்தினால் முடிந்தது''.

''ஒட்டுமொத்தமாக ஆரியர்களுக்கும் வேதங்களுக்கும் தென்னிந்தியா உட்பட இந்திய சமுதாயத்தையும் கலாச்சாரத்தையும் உருவாக்கியதில் மிகப் பெரிய பங்குண்டு என்பதுதான் வரலாற்று ரீதியான உண்மை''.

''பொதுவாக இந்தியக் கலாச்சாரத்தில் மட்டுமின்றி தமிழ் கலாச்சாரத்தை உருவாக்கியதிலும் வேதங்களுக்கும் ஆரியர்களுக்கும் பங்குண்டு என்பது தானே உண்மை''.

இவையெல்லாம் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்களது ஆய்வு நூல்களில் இருந்து எடுக்கப்பட்டவை என்று நீங்கள் கருதினால் அது தவறாகும். இவை ''இந்தியக் கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி'' என்ற பெயரில் இயங்கிவரும் சங்கரன் நம்பூதிரிகள் மற்றும் அவரது சீடர்களின் ஆய்வு முடிவுகள். ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள் எதை ''இந்துத்துவம்'' என்று கூறுகிறார்களோ அதையே தமது மார்க்சிய வரலாற்று ஆய்வுகளின் கண்டுபிடிப்புகள் என்று இந்தப் போலிக் கம்யூனிஸ்டுகள் பெருமையோடு பீற்றிக் கொள்கிறார்கள். ஆனால் இவர்கள் ''மார்க்சியம்'' என்று எதைக் கூறிக் கொள்கிறார்கள் தெரியுமா?





படிப்பகம்

www.padippakam.com

''வேதங்கள், உபநிஷதங்கள் முதலிய பாரதீய கலாச்சாரப் பொக்கிஷங்களும் மார்க்சிய - லெனியத்தின் புரட்சிகரத் தத்துவமும் இணைந்ததுதான் நான் உயர்த்திப்பிடிக்கின்ற இந்திய மார்க்சியம்''. ''நான் பிரதிநிதித்துவப்படுத்துகிற மார்க்சியம் - லெனினியம் தான் உண்மையான பாரதீயத்தத்துவம் என்று கூட உரிமை பாராட்டுவேன்'' என்கிறார் சங்கரன் நம்பூதிரி. இதை அவரது சீடர்கள் நியாயப்படுத்தி உரையும் எழுதுகிறார்கள். ஆகவே, அவர்களின் தத்துவப்படியான ஆய்வு முடிவுகள் ''இந்துத்துவத்''தோடு இசைந்து நிற்பதில் வியப்பில்லை.

உண்மையில் இந்த சங்கரன் நம்பூதிரி, அதே கேரளத்தின் ஆதிசங்கரனின் இன்னொரு அவதாரமாக தன்னை அடையாளங் காட்டிக் கொள்கிறார். சாங்கியம், சார்வாகம், பௌத்தம் ஆகிய பொருள்முதல் வாதத் தத்துவங்களால் தாக்கப்பட்டு மரணப் படுக்கையில் வீழ்த்தப்பட்டது, வருணாசிரம - சாதிய அடிப்படையிலான பார்ப்பன சனாதன மதம், அதை மீண்டும் உயிர்ப்பிப்பதில் முக்கியப் பங்காற்றியவனே ஆதிசங்கரன். எப்படி? பல்வேறு தத்துவத் திருட்டு - தத்துவப் புரட்டு பித்தலாட்டம் - மோசடி, சூழ்ச்சி - சதி உருட்டல் மிரட்டல், ஆதிக்க சக்திகளின் துணையோடு அராஜக வன்முறை ஆகியவற்றைப் பயன்படுத்தி!

இப்போது, அதே வேலையை பகிரங்கமான வகுப்புவாத, பாசிசமுறைகளைக் கொண்டு செய்து முடிக்க ஒருபுறம் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள் முயலுகிறார்கள். மறுபுறம் சங்கரன் நம்பூதிரியும் அவரது சீடர்களும் கம்யூனிசத்தின் பேரால் பாட்டாளி வர்க்க இயக்கத்துக்குள் புகுந்து கொண்டு நயவஞ்சகம் - துரோகம், தத்துவ - வரலாற்றுப் புரட்டு ஆகிய மறைமுக வழிகளில் பார்ப்பன சனாதன மதத்துக்கு வக்காலத்து வாங்குகிறார்கள்; பார்ப்பன நலன் காக்கப் பாடுபடுகிறார்கள். தமிழ்நாட்டில் இத்திருப்பணிக்கு தலைமையேற்றிருப்பவர் திருவாளர் பி.ஆர். பரமேசுவரன். இதற்காகவே அவரது பொறுப்பில் ''மார்க்சிஸ்ட்'' என்ற ஒரு தத்துவ மாத இதழே நடத்தப்படுகிறது. இவர்களின் தத்துவ - வரலாற்றுப் புரட்டுகளைப் புரிந்து கொள்வதற்கான ஆதாரங்களை நாம் வேறெங்கும் போய்த் தேடத்தேவை இல்லை. சங்கரன் நம்பூதிரியின் பார்ப்பனீய ஆராய்ச்சிக் கட்டுரைகள் - சொற்பொழிவுகளின் மொழி பெயர்ப்புகளையும், அவற்றுக்கு பரமேசுவரன் தரும் பொழிப்புரைகளையும் மட்டுமே பெரும்பாலும் தாங்கி வரும் அந்த ''மார்க்சிஸ்ட்'' மாதப்பத்திரிக்கையைத் தொடர்ந்து படித்து வந்தாலே போதும். முன்னுக்குப் பின் முரணாகவும் சந்தர்ப்பவாதமாகவும், யாவரும் அறிந்த உண்மைகளையே மூடி மறைத்துப் பொய்களையே எழுதுவதையும் எளிதில் புரிந்து கொள்ள முடியும். இங்கே சில சான்றுகளைப் பாருங்கள்.

நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு அமைப்பில் பார்ப்பனர்கள் வகித்து வரும் ஆதிக்கம் ஆதார பூர்வமாக நிரூபிக்கப்பட்டு விட்ட பட்டவர்த்தனமான உண்மை. நாட்டின் பிரதமர், குடியரசுத்தலைவர், சமீபகாலம் வரை துணைத் தலைவர், இராணுவத் தளபதிகள், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிகள், உளவுத்துறை இயக்குநர்கள், தேர்தல் கமிசன் தலைவர், மத்திய - மாநில அமைச்சரக தலைமைச் செயலர்கள், காங்கிரசின் கீழ் பெரும்பாலான மாநில ஆளுநர்கள், முதல்வர்கள், மத்திய - மாநில அமைச்சர்கள் - பார்ப்பனர்களே! மத்திய ரிசர்வ் வங்கி உட்பட பெரும்பாலான அரசுடமை வங்கிகள், பங்குச் சந்தை உட்பட அனைத்து அரசு நிதி நிறுவனக் கட்டுப்பாடு அமைப்புகளின் தலைவர்கள், உலகவங்கி - ஐ.எம்.எஃப் போன்ற



''ஒட்டு மொத்தமாக ஆரியர்களுக்கும் வேதங்களுக்கும் தென்னிந்தியா உட்பட இந்திய சமுதாயத்தையும் கலாச்சாரத்தையும் உருவாக்கியதில் மிகப் பெரிய பங்குண்டு என்பது தான் வரலாற்றுரீதியான உண்மை''

ஏகாதிபத்திய உலக நிதிநிறுவனங்கள், பல தேசங்கடந்த - பன்னாட்டுத் தொழில் - வங்கிக் கழகங்கள், இந்திய அரசு - தனியார் துறை தரகு அதிகார முதலாளிகளது நிறுவனங்கள் ஆகியவற்றில் முக்கியப் பொறுப்புகளை வகிப்பவர்கள் - பார்ப்பனர்கள். அரசியல், பொருளாதாரத் துறையில் முக்கியப் பொறுப்பு வகிக்கும் நபர்கள் காலில் விழுந்து வணங்கவும், அவர்களுக்கு சகல வித ஆலோசனைகள் வழங்கவும் தகுதி பெற்றவர்களாக விளங்கும் சங்கராச்சாரிகள், ஜீயர்கள் உட்பட மடாதிபதிகளாகவும், சாதுக்கள் சன்னியாசிகளாகவும் இருந்து வருபவர்கள் உட்பட சமூக அமைப்பில் உயர்நிலை வகிப்பவர்கள் - பார்ப்பனர்கள். வானொளி, வானொலி, பத்திரிக்கை மற்றும் கல்வி - கலாச்சாரத்துறையின் முக்கியப் பொறுப்புகளில் உள்ளவர்கள் - பார்ப்பனர்கள். நாட்டின் மக்கள் தொகையில் 3 சதவீதமே உள்ள பார்ப்பனர்கள் சாதி ஆதிக்கமின்றி இந்த நிலைக்கு எப்படி வந்திருக்க முடியும்? இத்தனையும் தெரிந்திருந்தும் பி.ஆர். பரமேசுவரன் கேட்கிறார்:

''பிராமணர்கள் அல்லது பார்ப்பனர்கள் இன்று வைத்துக் கொண்டுள்ள எந்த வித ஆதிக்கத்திற்கு எதிராகப் போராட்டம் நடத்துவது? அவர்களுக்கு எதிராக என்ன கோரிக்கை வைப்பது? பார்ப்பன எதிர்ப்பு என்ற சாதி வெறிப் பிரச்சாரம் ஒன்றுதான் செய்யமுடியும். இதனால் யாருக்கு என்ன பலன் கிடைக்கும்'' ('மார்க்சிஸ்ட்' மே, '93 பக் : 63)

இப்படிக் கேள்விகள் கேட்கும் இதே நபர்தான் இதற்கு இரண்டு மாதத்திற்கு முன்பு ''சி.பி. (எம்) பிராமண ஆதிக்கத்தை மட்டுமின்றி எல்லாவிதமான மேல்சாதி ஆதிக்கத்தையும் உறுதியாக எதிர்த்து வரும் கட்சி'' (மார்க்சிஸ்ட் மார்ச், '93 பக் 63). என்று பிரகடனம் செய்தார். ஆனால் இந்தப் பிரகடனம் வெறும் பித்தலாட்டமே என்பதை அடுத்து வரும் வரிகளில் இந்த நபர் காட்டிவிட்டார். அதாவது ''பார்ப்பனீய எதிர்ப்புக்'' கொள்கையைத் தனது கட்சி ஏன் ஏற்க முடியாது என்பதற்கு பின்வரும் காரணத்தை எழுதுகிறார்.

''சி.பி.ஐ. (எம்) பிராமண ஆதிக்கத்தை மட்டுமின்றி எல்லாவிதமான மேல் சாதி ஆதிக்கத்தையும் உறுதியாக எதிர்த்து வரும் கட்சி; பார்ப்பனீயத்தை எதிர்ப்பவர்கள் பார்ப்பனரல்லாத மேல் சாதியினர் அவர்களுக்குக் கீழே உள்ள கீழ் சாதியினரை கேவலமாக நடத்துவதைப் பற்றி மௌனமாக இருக்கிறார்கள். பார்ப்பனீயத்தை எதிர்ப்பதாகக் கூறுபவர்கள் ஒட்டு மொத்த சாதீய முறையை எதிர்ப்பதில்லை. அதற்கு அடிப்படையாக உள்ள நிலப்பிரபுத்துவத்தையும் எதிர்ப்பதில்லை. இந்திய நாட்டில் சாதீய முறைக்கு முக்கிய காரணம் நிலப்பிரபுத்துவ முறை என்ற உண்மையையும் அவர்கள் அங்கீகரிப்பதில்லை. பார்ப்பனரல்லாத மேல் சாதியினர்தான் பார்ப்பன எதிர்ப்பு பேசி வருகின்றனர். இந்திய நாட்டின் சாதீய முறை என்பது ஒரு சாதிக்கு மேல் ஒரு சாதி; அதே போல் ஒவ்வொரு சாதிக்கும் கீழ் இன்னொரு சாதி என்பது தான். இது ஒட்டு மொத்தமாக மாற்றப்பட வேண்டியது. இது நிலப்பிரபுத்துவ ஒழிப்போடு இரண்டற இணைந்தது. அதனால் சி.பி.ஐ. (எம்) சாதீய முறையையும் நிலப்பிரபுத்துவ முறையையும் எதிர்த்து போராட்டத்தை ஒன்றிணைத்து நடத்தி வருகிறது.

''பார்ப்பனீய எதிர்ப்பு என்பது நடைமுறையில் பார்ப்பன எதிர்ப்பாகவே இருந்துள்ளது என்பதுதான் தமிழ் நாட்டின் அண்மைக்கால வரலாறு. தத்துவத்தை நடைமுறையில் இருந்து பிரிக்கமுடியாது. பார்ப்பனீய எதிர்ப்பு என்ற ஒரு தத்துவத்தை ஒரு கட்சி முன்வைத்தால் அதன் நடைமுறை பார்ப்பன எதிர்ப்பாகவே அமையும். ஒரு சாதியினருக்கெதிரான வெறுப்புணர்வைத் தூண்டுவதாகவே அமைகிறது. இது சாதி ஆதிக்க எதிர்ப்புக்கு எந்த வகையிலும் பயன்படாது. ஆகவே சி.பி.ஐ. (எம்) பார்ப்பனீய எதிர்ப்பு என்பதையும் ஒரு கொள்கையாக ஏற்பது சரியாக இருக்கமுடியாது. சாதி ஒடுக்கு முறை எப்பகுதியில் இருந்து வந்தாலும் அதனை எதிர்ப்பது தான் சி.பி.ஐ (எம்) நிலைப்பாடு. ('மார்க்சிஸ்ட் மார்ச், '93 பக் 63)

இங்கே பார்ப்பனீய எதிர்ப்பாளர்களைப் பற்றியும், தமது கட்சி நடைமுறை பற்றியும் பரமேசுவரன் கூறுவது பச்சைப் பொய்தான். பார்ப்பனீய எதிர்ப்பில் வீர


படிப்பகம்

www.padippakam.com

மணி போன்ற சில திராவிட இனவாதிக ளின் அணுகுமுறையையே அனைத்து அமைப்புகளுக்குமானதென பரமேசுவரன் புளுகுகிறார். வேறு சில பெரியாரிய, அம் பேத்காரிய அமைப்புகளும், மார்க்சிய - லெனினிய அமைப்புகளும் பார்ப்பனீய எதிர்ப்புக் கொள்கை உடையனவாக உள் ளன. இவை பார்ப்பனரல்லாத மேல்சாதி அமைப்புகள் அல்ல; இவை நிலப்பிரபுத்து வத்துக்கும் சாதீய முறைக்கும் உள்ள உறவை அங்கீகரித்தும், இரண்டையும் எதிர்த்துப் போராடும் கொள்கை உடைய வைதாம். அதேசமயம் சி.பி.ஐ. (எம்) சாதிய முறை, நிலப்பிரபுத்துவம் ஆகிய இரண்டையும் எதிர்த்துப் போராடுவதாகக் கூறுவது அண்டப் புளுகுதான். அதன் சாதி எதிர்ப்புக்குச் சான்றாகக் கூறுவதெல்லாம் 1946-50 காலகட்ட தஞ்சை விவசாய சங்க இயக்கம் மட்டும்தான். நிலப்பிரபுத்துவ எதிர்ப்புக்கு ஆதாரமாகக் கூறுவதெல்லாம் கேரளாவிலும், மேற்கு வங்கத்திலும் கொண்டு வந்த நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் தாம். கீழ்வெண்மணியில் 42 தாழ்த்தப் பட்ட மக்களை உயிரோடு கொளுத்திய நிலப்பிரபு கோபாலகிருஷ்ணநாயுடு, பார்ப் பனன் அல்லாதவன். ஆனால் அவனைத் தண்டிக்க சி.பி.ஐ. (எம்) என்ன செய்தது?

சரி! பிற அமைப்புகளின் பார்ப்பனீய எதிர்ப்புக் கொள்கைதான் பார்ப்பன எதிர்ப்பு சாதி வெறியாகிவிட்டது. அதற் காக பார்ப்பனீய எதிர்ப்பு "தத்துவமே" தவறாகிவிடுமா? பார்ப்பனீயத்தை எதிர்க் காமல், "பிராமண ஆதிக்கத்தை" எப்படி எதிர்த்துப் போராட முடியும். பார்ப்பனீய எதிர்ப்பு என்ற தத்துவத்தை பார்ப்பன எதிர்ப்பு என்ற நடைமுறையில் இருந்து பிரிக்க முடியாது என்கிறார் பரமேசுவரன். "இந்துத்துவ" எதிர்ப்பும் கூட இந்துமதத்தி னர் அனைவருக்கும் எதிராகி விடாதா? அதோடு "இந்துத்துவம்" என்பதே பார்ப் பன - பனியா தத்துவம் என்று மேற் சொன்ன அமைப்புகள் மட்டுமல்ல சி.பி.ஐ (எம்) ஏற்றுக் கொண்ட சோவியத் ஆய்வா ளர்களே கூறுகிறார்களே! இதனால் "இந் துத்துவ" தத்துவத்தை எதிர்க்கும் கொள் கையை சி.பி.ஐ (எம்) ஏற்காதா?

உண்மை என்னவென்றால், பார்ப்பன ஆதிக்கத்தையும் அதன் அடிப்படையான பார்ப்பனீயத்தையும் காப்பதுதான் சி.பி.ஐ (எம்) கட்சியின் நோக்கம். அதனால் தான் பார்ப்பனீயம், பார்ப்பன ஆதிக்கம் என்று எதுவுமே கிடையாது என்றும், அவற்றை எதிர்ப்பவர்கள் சாதிவெறியைத் தூண்டுப வர்கள் என்றும் சாதிக்கிறார் பரமேசுவரன்.

"ஆரிய எதிர்ப்பைப் போலவே 'பார்ப்பன' எதிர்ப்பும் தமிழ்நாட்டில் இன்று எடுபடக் கூடியதாக இல்லை. சமுதாயத்தில் பிராமணர்களின் ஆதிக்கம் என்பது அர்த்த மற்றதாகிவிட்டது. அந்தஸ்தும் இறங்கிவிட் டது. இந்த நூற்றாண்டு ஆரம்பத்தில் இருந்த நிலை இப்போது இல்லை. அன்று பொரு ளாதாரத்திலும் உயர் உத்தியோகத்திலும் ஆதிக்கம் செலுத்துவோராய் இருந்தனர். அதுதான் அன்று பிராமண எதிர்ப்பின் அடிப்படையாக இருந்தது. அந்நிலை மாறி விட்டது" ('மார்க்சிஸ்ட்' அக். '93 பக்: 58)

"அன்றைய நான்கு வருணமுறையும் சிதைந்து விட்டது. இன்று பிராமணர்கள் புரோகிதர்களாக மட்டும் இல்லை. அன் றைய ஆதிக்க நிலையிலும் இல்லை. இன்று அவர்களும், பல்வேறு வர்க்கத்தினராகப் பிரிந்துள்ளனர். அவர்களில் முதலாளிக ளும், தொழிலாளிகளும் உள்ளனர். கோடீஸ்வரர்களும் பிச்சைக்காரர்களும் உள்ளனர். இப்போது அவர்களை ஒரு சாதி என்ற முறையில் ஆதிக்கம் செலுத்துவோர்



**நாட்டின் மக்கள் தொகையில் 3 சதவீ தமே உள்ள பார்ப்பனர்கள் சாதி ஆதிக்கமின்றி சமூகத்தில் உயர்நி லைக்கு எப்படி வந்திருக்க முடியும்?**

என்று கூறுவது இன்றைய எதார்த்தநிலை அல்ல. 'பார்ப்பனீயம், பார்ப்பனீய ஆதிக் கம் என்று கூறி வெறுப்புணர்வைத் தூண்டு வது உழைப்பாளிகளிடையில் சாதி உணர்வை, வெறியைத் தூண்டி பிளவுபடுத் துவதாகவே உள்ளது. இது முதலாளித்து வத்திற்குச் சாதகமானது." (மார்க்சிஸ்ட் மே '93 பக்: 63).

"சமுதாய வாழ்க்கையில் ஏற்பட்டுவ ரும் இந்த மாறுதல்களை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், ஆரிய திராவிட இனவாதத்தை இப்போதும் பேசிவருவதும் உழைத்து வாழும் வர்க்கமாக மாறிவிட்ட பிராமண சாதியினரை சமுதாயத்தில் ஆதிக் கம் செலுத்தும் சாதியாக - இனமாகப் பார்ப் பதும் சமூக மாறுதல், வளர்ச்சி பற்றிய விஞ் ஞானப் பார்வைக்குப் பொருந்தாதது. அதன் காரணமாக பகுத்தறிவிற்கும் மாறு பட்டது இந்தப் பார்வை. இன்றைய சமுதா யத்தின் சுரண்டும் வர்க்க ஆதிக்கத்திற்கு எதிராக சாதி, மத இன பேதமின்றி உழைக் கும் வர்க்கம் ஒன்றுபடுவதைத் தடுக்கக் கூடி யது. மக்களின் ஒற்றுமையை சீர்குலைக்கக் கூடியது". ('மார்க்சிஸ்ட்' ஜூன், '93 பக்: 63).

மீண்டும் நினைவுபடுத்துகிறோம். இந்த நாட்டின் மக்கள் தொகையில் 3 சதவீ தம் பேரே பார்ப்பன சாதியினர். சி.பி.ஐ (எம்) வாதப்படியே அவர்களில் உழைக் கும் மக்களாகவும், பிச்சைக்காரர்களாகவும் மாறிவிட்டவர்கள் எவ்வளவு பேர்? ஒரு வாதத்திற்குக் கேட்கிறோம்! நமது பார்ப்ப னீய எதிர்ப்பு இந்த ஒரு சிறு பிரிவினரோடு சாதி, மத, இனபேதமின்றி உழைக்கும் வர்க் கம் ஒன்றுபடுவதைத் தடுத்து விடும்; அத னால் மக்களின் ஒற்றுமை சீர்குலைந்து விடும் அப்படித்தானே? வெறுப்புணர் வைத் தூண்டி உழைப்பாளிகளிடையில் சாதி உணர்வை, வெறியைத் தூண்டி பிளவு படுத்தி, முதலாளித்துவத்துக்குச் சாதகமாகி விடும். அப்படித்தானே! உழைப்பாளிகளா கவும் பிச்சைக்காரர்களாகவும் மாறிவிட்ட இந்தச் சிறுபிரிவினரான பார்ப்பனர்களே கூட பார்ப்பனீயம், பார்ப்பனீய ஆதிக்கம் போன்ற அரசியல், சமூக, பண்பாட்டு அநீதி - கொடுமைகளுக்கு எதிராக பிற உழைக்கும் மக்களோடு ஒன்றுபட வேண் டும்; அப்படி இல்லாமல் தமக்குக் கூலி உயர்வு போன்ற பொருளாதார நலன்க ளைப் பெறுவதற்காக மட்டும் முதலாளி களை எதிர்த்து பிற உழைக்கும் மக்களோடு ஒன்றுபட்டு என்ன பலன்?

பொருளியல் - வாழ்வியல் நிர்பந்தங் களுக்காக உழைப்பாளிகளாகவும், பிச் சைக்காரர்களாகவும் மாறிவிட்டாலும், அர சியல், சமூக, கலாச்சார ரீதியில் மாறாதவர் கள் இந்தச் சிறுபிரிவினர்; இவர்கள் தாம் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பன பாசிச "இந்துத்து வம்", மற்றும் சங்கரன் நம்பூதிரி — போலிப் பொதுவுடமைத் தத்துவம் ஆகிய இரண்டுக்குமே சமூக அடிப்படையாக, ஆதரவாக உள்ளவர்கள். எனவேதான் பார்ப்பனீய எதிர்ப்புக் கொள்கையை ஏற்க மறுக்கிறது சி.பி.ஐ. (எம்). அதற்குப் பதி லாக "சி.பி.ஐ. (எம்) சாதீய முறையையும் நிலப்பிரபுத்துவ முறையும் எதிர்த்த போராட்டத்தை ஒன்றிணைத்து நடத்தி வரு கிறது" என்று புளுகுகிறார் பரமேசுவரன்.

இப்படி எழுதிய இரண்டே மாதத்தில் அந்தப் பரமேசுவரனே பின்வருமாறு எழு துகிறார், "நீண்ட காலத்திற்கு முன்னால் தோன்றிய சாதிமுறை மக்களின் சமூக வாழ்க்கையில் பெரும் அளவு மாறிவருகி றது. ஆனால் பல காரணங்களால் சாதீய உணர்வு இன்னும் ஆழமாக உள்ளது. ஒரு கருத்து தோன்றிய சமூகச் சூழ்நிலை மாறி னாலும், அக்கருத்து மேலும் சில காலம் வரை நீடித்திருக்கும் என்று மார்க்சீய விஞ் ஞானம் போதிப்பது சரியானது என்பதை இது நிரூபிக்கிறது. பல சாதிகளாக இருந்த மக்கள் இன்று உழைத்து வாழும் வர்க்கமாக மாறி வருகிறது. உழைக்கும் வர்க்கம் என்ற உணர்வு வளர்ந்து வருகிறது. இந்த உணர்வை வளர்ப்பதுதான் சாதீயப் பாகு பாடுகளையும், உணர்வுகளையும் முற்றாக ஒழிக்க முடியும். இதுதான் மார்க்சிஸ்டுக ளின் வர்க்க நிலைப்பாட்டின் அடிப்படை". ('மார்க்சிஸ்ட்' ஜூன், '93 பக்: 64).

பார்த்தீர்களா இந்த போலிகளின் பித்த லாட்டத்தை. முன்பு "சாதீய முறையையும் நிலப்பிரபுத்துவமுறையையும் எதிர்த்த போராட்டத்தை ஒன்றிணைத்து நடத்தி வரு வதாகக் கூறினார் பரமேசுவரன். இரண்டே

படிப்பகம்

www.padippakam.com

மாதங்களில் சாதிமுறை மக்களின் சமூக வாழ்க்கையில் பெரும் அளவு மாறுவதாக வும் இப்போது சாதிமுறை போய் சாதி உணர்வு தான் நீடித்திருப்பதாகவும் எழுது கிறார். எனவே சாதி, நிலப்பிரபுத்துவ முறைகளை எதிர்த்த போராட்டம் பற்றி மூச் சுவிடவில்லை. உழைக்கும் வர்க்கம் என்று வளர்ந்து வரும் உணர்வை வளர்ப்பதுதான் சாதிபாகுபாடுகளையும், சாதி உணர்வை யும் முற்றாக ஒழிக்க ஒரே வழி என்கிறார். எப்படி! பத்திரிக்கையில் எழுதியே இரண்டே மாதத்தில் சாதி முறையை மாற்றி விடுகிறார்கள் பாருங்கள்! இதே பரமேசுவ ரன் அடுத்த பத்தாவது மாதம் எழுதுகிறார். "வர்க்க ரீதியாக மக்களை ஒன்றுபடுத்துவ துதான் சாதீய ஏற்ற தாழ்வுகளை ஒழிக்க வழி. இன்றைய சமுதாய அமைப்பினை மாற்றாமல் சாதிப்பாகுபாடுகளை முழுமை யாக ஒழிக்க முடியாது. அதற்கு வர்க்கப் போராட்டமும் வர்க்கப் புரட்சியும் தான் ஒரே வழி. வேறு ஏதாவது வழி இருந்தால் சொல்லுங்கள்" ('மார்க்சிஸ்ட்' மார்ச், '94 பக்: 46)

சாதி முறைக்கு எதிரான போராட்டம், சாதி உணர்வை அகற்ற உழைக்கும் வர்க் கம் என்ற உணர்வை வளர்ப்பது, சாதி பேத மின்றி உழைக்கும் மக்களை ஒன்றுபடுத்து வது - இவை தான் சி.பி.ஐ. (எம்) மின் நடைமுறை என்று பீற்றிக் கொள்கிறார்கள். இதை அக்கட்சியினர் எப்படிச் செய்கிறார் கள் என்பதற்கு அதே பரமேசுவரனின் வாக்கு மூலத்தைப் பாருங்கள்!

மே. வங்கத்தில் சி.பி.ஐ. (எம்) கட்சி நடத்தும் வங்காளி நாளிதழ் 'கணசக்தி'. அதில் லாட்டரி, பங்குச் சந்தை, மணமகள் தேவை விளம்பரங்கள் வெளியிடுகின்ற னர். சாதிக்கேற்ற மணமக்கள் தேவை விளம்பரம் வெளியிட்டு வருவதோடு, அக் கட்சித் தலைவர் ஒருவரின் மகனுக்கு அதே சாதி மணமகள் தேவை என்றும் விளம்பரம் வந்தது. இதை "புதிய ஜனநாயகம்" ஏடு அம்பலப்படுத்தியதையும் சாதி விவகாரத் தையும் குறிப்பிடாமல் கேட்கப்பட்ட கேள் விக்கு அது செய்திப் பத்திரிக்கை, அதிகமக் கள் படிக்கவும், மக்கள் தேவைக்கும் அப் படி விளம்பரங்கள் வெளியிடுவதாக கூறி சமாளித்தார் பரமேசுவரன். மீண்டும் ஒரு வாசகி, "சாதி, மதம், இனம் சம்பந்தமான விளம்பரம் நமது இதழில் வருவது சரியா னதா?" என்று கேட்டார்.

அதற்கு, "கணசக்தியில் வெளியிடப் படுகிற விளம்பரங்கள் சாதி, மதத்தைப் பற் றிய விளம்பரம் அல்ல. மணமக்கள் தேவை பற்றிய விளம்பரங்கள் தான். அதில் வரும் வார்த்தைகளும் கருத்துக்களும் விளம்பர தாரரின் கருத்துக்கள்தான். பத்திரிக்கையின் கருத்து அல்ல. இந்நிலை மாற சமுதாயத் தில் பெரும்மாறுதல் ஏற்பட வேண்டும். இத் தகைய விளம்பரங்களை வெளியிடாமல் இருப்பதனாலேயே அந்த மாறுதல் ஏற்ப டாது. இத்தகைய விளம்பரங்கள் மக்கள் உள்ளிட்ட சமுதாயத்தின் பெரும்பான்மை யான மக்களை ஒன்றுதிரட்டித் தான் அந்த மாறுதலை ஏற்படுத்த முடியும்."

"இத்தகைய விளம்பரங்கள் இடம் பெறும் கணசக்தி நாளிதழில் சாதி, மத, மூட நம்பிக்கைகளுக்கெதிரான தத்துவ விளக் கக் கட்டுரைகளும் வெளிவந்து கொண்டி ருக்கின்றன. இதுதான் கணசக்தி ஆற்றிவ ரும் பிரதான பணியாகும்" ('மார்க்சிஸ்ட்' டிசம். '93 பக்: 62).

ஆக, நடைமுறை வாழ்க்கையில் சாதி அமைப்பைக் காப்பதோடு, அதற்கு ஆதர வும் அளிப்பார்கள். அதே சமயம் காகிதத் தில் சாதி, மத, மூட நம்பிக்கைகளுக்கு எதி ராகத் தத்துவ விளக்கங்கள் தருவார்கள். இதுதான் சங்கரன் நம்பூதிரியும் அவரது சீடர்களும் ஆற்றிவரும் சமூகப்பணி! இப் படி இவர்கள் சாதிமுறை எதிர்ப்பு நாடகமா டுவதே பார்ப்பனியத்தையும், பார்ப்பன ஆதிக்கத்தையும் காப்பதற்காகத்தான். இவர்கள் நன்கு அறிந்தே இந்தப் பித்தலாட் டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

**பார்ப்பன ஆதிக்கத்தையும் அதன் அடிப்படையான பார்ப்பனீயத்தை யும் காப்பதுதான் சி.பி.ஐ.(எம்) கட்சி யின் நோக்கம். அதனால்தான் பார்ப் பனீயம், பார்ப்பன ஆதிக்கம் என்று எதுவுமே கிடையரது என்றும், அவற்றை எதிர்ப்பவர்கள் சாதிவெறி யைத் தூண்டுபவர்கள் என்றும் சாதிக்கிறார்கள்.**

இன்றைய சமுதாயத்தில் பார்ப்பன ஆதிக்கமே கிடையாது; பார்ப்பன எதிர்ப் புக்கு அடிப்படையே இல்லாமல் போய் விட்டது; பார்ப்பனீய, பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பு என்பது சாதிவெறியைத் தூண்டி உழைக்கும் மக்களைப் பிளவுபடுத்தக் கூடி யதாக உள்ளது; பார்ப்பனர்களின் எந்தவித ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடுவது? அவர்களுக்கு எதிராக என்ன கோரிக்கை வைப்பது? - இப்படி முடிவுகளும் கேள்வி களும் வைக்கிறார் சி.பி.ஐ. (எம்) கட்சியின் குட்டிச் சித்தாந்தத் தலைவர் பரமேசுவரன்.

ஆனால் இதே நபர், அதே 'மார்க் சிஸ்ட்' பத்திரிக்கையில்" ஆர். எஸ். எஸ். - தத்துவமும் வரலாறும்" என்றொரு ஆராய்ச்சிக் கட்டுரை எழுதியுள்ளார். அதில் ஆர்.எஸ்.எஸ். மற்றும் அதன் பரிவா ரங்கள் குறித்து பின்வரும் முடிவுகளை பர மேசுவரன் வைக்கிறார். ● ஆர்.எஸ்.எஸ். காரர்கள் ஆரிய இனவாதத்தின் பிரதிநிதி கள். ஆரிய இனவாதம் பேசிய ஜெர்மா னிய இனவெறியன் பாசிஸ்ட் இட்லரைப் போற்றுபவர்கள். ● இந்தியாவை இந்து நாடு என்று அவர்கள் கூறுவதன் பொருள் ஆரிய நாடு என்பது தான். ஆரியர்கள் தான் இந்துக்கள் என்பதே அவர்களின் தத் துவம் ● இந்து மதவெறியர்கள் ஆரிய இன வெறியர்களாகவும் உள்ளனர். ● "நாகரீக உலகம் முழுவதும் வெறுத்து ஒதுக்கும் சாதீய முறையை ஆர்.எஸ்.எஸ்.சும் அவர் களின் கூட்டாளிகளும் தூக்கிப்பிடிக்கின்ற னர். இந்து மதத்தோடு இணைந்தது சாதீய முறை. இந்து மதத்தின் பழையவாதங்களை உயர்த்திப் பிடிப்போர் சாதிய முறையை மட்டும் விட்டுவிடுவார்களா? ஆர்.எஸ். எஸ். மற்றும் இந்துமதவாத அமைப்புகள் இந்திய நாட்டில் நிறுவ முயற்சிப்பது இந்து மத ஆதிக்கம் அல்ல. ஆர்.எஸ்.எஸ்.சில் இன்று ஆதிக்கம் செலுத்துகின்ற மேல் ஜாதி ஆதிக்கத்தை நாட்டின் மீது திணிப்பதே அவர்களின் நோக்கம். சிதைந்து வரும் சாதீ யத்திற்கு புத்துயிரூட்டுவதும், வருணாசிர மமுறையை புனரமைப்பதும் தான் அவர்க ளின் லட்சியம்" ● இந்தியாவின் பொது மொழி இப்போதைக்கு இந்தி, பின்னர் சமஸ்கிருதம் தான் ஆட்சி மொழி என்பது இவர்களின் . கொள்கை; அதற்காக அனைத்து மாநில மொழிகளும் சமஸ்கிருத எழுத்துக்களில் எழுத வேண்டும் என்பவர் கள் ● இவர்கள் நவீன உலகிலும், இந்தியா விலும் வாழும் மனிதர்களாகத் தெரிய வில்லை. பிராமண ஆதிக்கம் நிலவிய உப நிடதங்களின் காலத்தில் வாழும் பிராமணர் களாகவே தங்களைக் கருதிக் கொள்கின்ற னர்.

ஆக, சி.பி.ஐ. (எம்)மின் கணிப்பின் படியே ஆர்.எஸ்.எஸ்.சும் அதன் பரிவாரங் களும் இந்துமத வெறி பார்ப்பன பாசிச சக்திகள்தாம்; அதன் இந்து மத வெறி என் பது ஆரிய இன, மொழி வெறி. பார்ப்பன சனாதன வருணாசிரம சாதீய முறையை மீட்பதுதான் அவர்களது இலட்சியம். இந் தச் சக்தி நாட்டின் இரண்டாவது பெரிய அரசியல் சக்தியாக வளர்ந்துள்ளது. இதன் நேரடிக் கூட்டுச் சக்திகளாக ஜெயலலிதா கட்சியும், சிவசேனாவும், இதன் மறைமுக கூட்டாளியாக - துணைபோகும் சக்தியாக ஆளும் காங்கிரசும் உள்ளன. சி.பி.ஐ. (எம்) தலைமையின் கூற்றுப்படியே இதற்கு ஏகாதிபத்தியத் தூண்டுதலும் ஆதரவும் உள்ளது. இந்து ராஷ்டிரம், இந்துத்துவம் என்பது பார்ப்பனீயம், பார்ப்பன ஆதிக்கம் தான் என்பதையும், இவற்றுக்கு எதிரான போராட்டம் அவசியமானது என்பதையும் இவை காட்டவில்லையா?

ஆனால், இந்து ராஷ்டிரம் - இந்துத்த வமும், பார்ப்பனீயம் - பார்ப்பன ஆதிக்க மும் வேறுவேறானவை என்று சித்தரிக் றது சி.பி.ஐ. (எம்) தலைமை. பார்ப்பன யம், பார்ப்பன ஆதிக்கம் என்பவை அர்த் மற்றவை; அவற்றுக்கு எதிரான போராட டம் அடிப்படை அற்றவை என்று கூறு அதே சமயம் இந்து ராஷ்டிரம் - இந்துத் வத்தை எதிர்த்துக் கடுமையாகப் போரா வருவதாகப் பீற்றிக் கொள்கிறது.

இப்படி இரட்டை வேடம் போட் கபட நாடகமாடுவதன் மூலம் ஒருபுறம் த னைப் புரட்சிகரமான தலைமையாக கா டிக் கொள்கிறது; மறுபுறம் பார்ப்பனீயம் - பார்ப்பன நலன் காக்கும் பணியையும் செ கிறது. ஆகவே, பார்ப்பன சனாதன — இ துமதவெறிப் பாசிசத்தை நேரடியாகப் பிர நிதித்துவப்படுத்தும் ஆர்.எஸ்.எஸ். பார் பனர்களைவிட உண்மையில் இந்த போ மார்க்சிஸ்டுகள்தான் மிகவும் அபாயகர னவர்கள்.

— தொடரு

படிப்பகம்

www.padippakam.com

# மீண்டும் மீண்டும் இந்தித் திணிப்பு

தமிழகம் இந்தித் திணிப்பிற்கும், இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கும் பாரம்பரிய வரலாறு கொண்ட மாநிலம். 1954, 65 ஆகிய வருடத்திய இந்தி எதிர்ப்பு இயக்கங்கள் குறிப்பிடத்தக்கவையாக இந்தியாவையே உலுக்கின. நேருவின் ''மொழிவாரி மாநில மக்கள் விரும்பாத வரை ஆங்கிலமே இணைப்பு மொழியாக இருக்கும்; இந்தி திணிக்கப்படமாட்டாது''. என்ற உறுதி மொழியை ஆளுங்கும்பல் அடிக்கடி கூறினாலும் நேரடியாகவோ கொல்லைப்புற வழியாகவோ இந்தியைத் திணிக்காமல் இருந்ததில்லை. ஒவ்வொரு முறையும் டெல்லி அரசின் இத்தகைய திணிப்பு முயற்சியின் போதும் தமிழகம் போன்ற மாநிலங்களில் கடுமையான எதிர்ப்புகளும் போராட்டங்களும் எழும். அண்மைக் காலமாக தமிழகத்தில் இவை தான் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

வானொலியில், குறிப்பாக, விவிதபாரதி ஒலிபரப்பில் தமிழ் நிகழ்ச்சிகள் குறைக்கப்பட்டு இந்திப் பாடல்கள், திரைப்பட ஒலிச்சித்திரம் என நிகழ்ச்சிகள் அதிகரிக்கப் பட்டுள்ளன. இருக்கும் குறைந்த தமிழ் ஒலிபரப்பு நேரத்திலும் ஆயுள் காப்பீட்டுக் கழகம், எய்ட்ஸ், குடும்பக்கட்டுப்பாடு, திரைப்படம், தனியார் நிறுவனங்களின் விளம்பர நிகழ்ச்சிகள் ஏராளமான இந்தி, ஆங்கில வார்த்தைகளோடு ஆக்கிரமித்துக் கொள்கின்றன. அரசு விளம்பரதாரர் நிகழ்ச்சிகள் மற்றும் தமிழ் செய்திகளில் ஜீவன் மித்ரா, ஜீவன் சாத்தி, பீமா சந்தேஷ், ஆஹாச வாணி, நமஸ்தே, ஜெய்ஹிந்த், ஏக்சோர், பாரத் முதலான இந்தி வார்த்தைகளும் போலியான 'தேசிய' ஒற்றுமைப் பிரச்சாரமும் கொடிகட்டிப் பறக்கின்றன.

தொலைக்காட்சியில் இந்தி ஆதிக்கம் எல்லைமீறி சகிக்க முடியாததாக உள்ளது. டில்லி ஒலி-ஒளிபரப்பில் விளையாட்டுக்கு, வர்த்தகத்திற்கு, கேளிக்கைக்கு என்றெல்லாம் தனித்தனி அலைவரிசைகளைத் தொடங்கினார்கள். இவை முழுவதும் இந்தி, ஆங்கில மொழி நிகழ்ச்சிகள் தான். முதல் அலைவரிசையில் ஊறுகாய் போல் பிராந்திய மொழி நிகழ்ச்சிகளுக்கு வாய்ப்பளித்துவிட்டு இந்தி, ஆங்கிலமே செல்வாக்கு செலுத்திவந்தன. இதிலும் ஆங்கிலத் திரைப் படம், பிராந்தியமொழி நிகழ்ச்சிகளைக் குறைத்து இந்தி திரைப்படத்தையும் நிகழ்ச்சிகளையும் அதிகரித்து விட்டார்கள்.

பிராந்திய மொழிகள் ஒலி-ஒளி பரப்பிற்கென்றே தொடங்கப்பட்ட இரண்டாவது அலைவரிசையிலும் இந்தி திணிக்கப் பட்டுள்ளது. முக்கியமாக மாலை நேரங்களில் இருந்த பிராந்திய மொழி நிகழ்ச்சிகளை எல்லாம் யாரும் பார்க்காத யாருக்கும் பயன்படாத பகல் நேரங்களில் ஒதுக்கிவிட்டு அவ்விடத்தை இந்தி நிகழ்ச்சிகள் ஆக்கிரமித்துக் கொண்டன. இதற்குப் பலத்த எதிர்ப்பு வந்துவிடக் கூடாது என்பதற்காக இந்தி நாடகங்களுக்கு தமிழில் பின்னணிக் குரல் கொடுத்தும் இந்திப் பாடல்களுக்கு தமிழில் இணைப்புரை கொடுத்தும் வருகிறார்கள். இதை வேண்டா வெறுப்புடன் பல்லைக் கடித்துக் கொண்டு உட்கார்ந்து பார்த்தாலும் பார்க்க முடிவதில்லை. இதன் தமிழ் உச்சரிப்பே தமிழின் இனிமையைக் கொன்றுவிடுவதற்குப் போதுமானது!

தொலைக்காட்சியில் இந்தி திணிக்கப் பட்டதற்கு இணையாக பத்திரிக்கைகளும் வரிந்து கட்டிக் கொண்டு இந்தி நிகழ்ச்சிகள், திரைப்படங்கள், பாடல்கள், நடிகர்-நடிகைகளை தமிழக மக்களுக்கு அறிமுகப் படுத்தி வருகின்றன. இந்தி நாடகங்களுக்கு தமிழ் பொழிப்புரையோடு இந்தி கற்றுக் கொள்ளுங்கள் என்றும் ஒரு முழுப்பக்கத்தையே ஒதுக்கி 'தினமலர்' இச்சேவையில் முன்னணியில் இருக்கிறது. ராமாயண, மகாபாரதத் தொடர் தொலைக் காட்சியில் ஒளிபரப்பப்பட்ட போது அதன் கதை வசனச் சுருக்கத்தை உடனுக்கு உடனே போட்டி போட்டு வெளியிட்டவை இரண்டு ஏடுகள் 'துக்ளக்'கும் 'தினமலரும்'. இரண்டுமே பார்ப்பன ஏடுகள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜெயகாந்தன், சோ, பாலகுமாரன் போன்ற கூலிப்பிரச்சாரர்கள் இந்திக்கு வக்காலத்து வாங்கி எழுதியும், பேட்டி கொடுத்தும் வருகிறார்கள். மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் அர்ஜுன் சிங் சென்னை - இந்தி பிரச்சார சபா விழாவில் ''விரைவில் ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தி இந்தியாவின் ஒரே இணைப்பு மொழியாக மாறும்'' எனப் பேசிவிட்டுச் செல்லுமளவிற்கு இந்திவெறி கும்பலுக்கு தைரியம் பிறந்திருக்கிறது.

அண்மையில் வந்த மத்திய அரசின் வங்கித்துறை தொடர்பான அறிக்கை ஒன்றும் தாய்மொழிப் பற்றுள்ளவர்களின் சினத்தைக் கிளறியது. வங்கி ஊழியர்கள் அனைவரும் கட்டாயம் இந்தி கற்றுக் கொள்ள வேண்டும் என்றும் இதற்கான தனிப்பயிற்சி வகுப்புகளை அரசே இலவசமாக நடத்துவதோடு படிப்பவர்களுக்கு ஊக்கத் தொகையும் வழங்கப்படும் என்றும் அறிவித்தது அந்த அறிக்கை. இது ஏற்கனவே ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் பணிபுரிபவர்கள் மீது திணிக்கப்பட்டு நடைமுறையில் இருக்கிறது; தற்போது வங்கித்துறைக்கும் விரிவுபடுத்தப்படுகிறது. வட மாநிலங்களிலிருந்து டிராட்டு போன்றவை எழுதி தென் மாநிலங்களுக்கு அனுப்பப்படும்போது இந்தி பயன் படுத்தப்படும் இடங்களில் அவசியம் ஆங்கில மொழிபெயர்ப்பும் சேர்த்து அனுப்பப்பட வேண்டும் என்பது (இந்தி எதிர்ப்பு இருந்த) பழைய காலத்து விதி. இப்போதெல்லாம் இந்திவெறியர்கள் ஆங்கில மொழிபெயர்ப்பு இல்லாமலேயே டிராஃப்டு மற்றும், கடிதங்களை திமிரோடு அனுப்புகிறார்கள். இதனால் தென் மாநில வங்கி ஊழியர்கள் திணறுகிறார்கள். இந்தித் திணிப்பின் பச்சையான வடிவம் இது. வங்கி ஊழியர்கள் மட்டுமல்ல மக்களும் இந்தி தெரிந்தால்தான் வங்கிக்குள் காலை வைக்க முடியும் என்ற நிலையை காலப் போக்கில் உருவாக்குவதே ஆட்சியாளர்களின் திட்டம்.

அனைத்து தேசிய இன மொழிகளுக்கும் ஆட்சி மொழித் தகுதி வழங்கப்பட வேண்டும்; அப்படிப்பட்ட ஆட்சியின் கீழ் இணைப்பு மொழி எம்மொழி அல்லது எம் மொழிகள் என்பதையும் மக்களின் முழு விருப்பத்தில், ஓட்டெடுப்பு நடத்தி முழு சம்மதத்தின் அடிப்படையில் தீர்மானிப்பதும்தான் மொழிச்சிக்கலை தீர்க்கவல்ல முறையாகும். ஆனால் இதை காங்கிரசு, பா.ஜ.க., ஜனதா தளம் முதலான தரகு முதலாளித்துவப் பின்னணி கொண்ட கட்சிகள் நடை முறைப்படுத்தாது. தரகுமுதலாளிகள் தமது சந்தையை எளிதாக - விரைவாக நாடுதழுவிய அளவில் விரிவுபடுத்த முடியாததற்கும் தனித்தனி மொழி கலாச்சாரத்திற்கேற்ப கூடுதல் விளம்பரங்கள், பல வகை உற்பத்திகளால் லாபம் கொள்ளை குறைவதற்கும் இந்திய மக்கள் பல மொழிகளாகப் பிரிந்து கிடப்பது காரணமாக உள்ளது. தமது மற்றும் அந்நிய பகாசுர முதலாளிகளின் நலனுக்காக இந்திய மக்களை ஆங்கிலேயன் செய்ததைக் காட்டிலும் ஒரே குடையின் கீழ் மேலும் கட்டிப் போடவே முயல்கிறது இக்கும்பல். தொடர்ந்து தேசிய இனப் போராட்டங்களை ஒடுக்கவும் ஒரே தேசியம், ஒரே மொழி, ஒரே கலாச்சாரம் -பண்பாடு என்பதைத் திணிக்கவும் செய்யும். இந்த தீவிரமான பிரச்சாரத்தோடு களத்தில் மூர்க்கமாக நிற்பது இந்து மதவெறி அமைப்பும், 'ஆர்.எஸ்.எஸ்.சும்.

இவற்றை எதிர்ப்பதாகக் கூறும் பிராந்தியக் கட்சிகள் இந்தி எதிர்ப்பை ஒட்டுப் பொறுக்கும் கவர்ச்சிப் பொருளாக்கி விட்டார்கள். தமிழகத்தின் மொழிப்போர் தியாகிகள் நாளான சனவரி 25-ஐ இம்முறை இந்தி எதிர்ப்பு நாளாக திராவிடக் கட்சிகளும் தமிழினவாத அமைப்புகளும் அறிவித்தன. பா. ம. க. உட்பட ஒவ்வொன்றும் தத்தம் நிலைப்பாட்டிலிருந்து ''ஒரு மொழிக் கொள்கை'', ''இரு மொழிக் கொள்கை'' என்று அணுகி இந்தி திணிப்பிற்குக் கண்டனம் தெரிவித்தன. ஆர்ப்பாட்டம், ஊர்வலம், தார்பூசி இந்தி எழுத்துக்களை அழித்தல், மாநாடு, கண்டனத் தீர்மானம் என பலவகைகளில் போராடின; போராடி வருகின்றன. எனினும் இக்கட்சி



படிப்பகம்

www.padippakam.com

கள் இதற்கான போராட்டத்தில் ஊன்றி நிற்க வும் முடியாது; 65-ஐப் போல் இனி ஒரு மொழிப் போர் எழுச்சியை இவர்களால் கட்டியமைக்கவும் முடியாது.

வடநாட்டுக்காரன் ஆதிக்கத்தை எதிர்த்து ஆங்கிலேயனின் ஆதிக்கத்தை ஏற்றுத் தொழுதது திராவிடக் கட்சியின் வரலாறு; அதன் நீட்டிப்பாக இந்தியை எதிர்ப்பதும், ஆங்கிலம் போய்விட்டால் இணைப்பு மொழியாக இந்தி வந்து விடும் என்ற வாதத்தை வைத்து ஆங்கில மோகத்தில் திளைப்பதும் அதே கட்சியின் வரலாறு. அண்ணாவிலிருந்து தம்பிகள் வரை ''தமிழ் தமிழ்'' என்று கத்திக் கொண்டே ''டாக்டர்'' என்ற ஆங்கிலப் பட்டத்தைச் சூட்டிக் கொள்வதற்காக நாக்கைத் தொங்கப் போட்டு இருந்தது இவர்களின் ஆங்கில மோகத்திற்குச் சான்று. ஆட்சியில்லாத போது தமிழுக்காக உயிரையும் கொடுப்பதாகக் கூச்சலிடும் இவர்கள் ஆட்சியிலிருக்கும் போது மயிரையும் கொடுக்கத் தயாரில்லை. தி.மு.க ஆட்சியின் போது மத்தியில் கூட்டாளி வி.பி.சிங் ஆட்சி இருந்தும் கருணாநிதி தமிழ் ஆட்சிமொழி பற்றி வாய் கூட திறக்கவில்லை. மாறாக கருணாநிதி, மழலையர் ஆங்கிலப் பள்ளிகளைப் புற்றீசல் போல் திறந்துவிட்டு ''மம்மி-டாடி'' கலாச்சாரத்தை வளர்த்தார்.

உருத்தெரியாமலும் வறுமையிலும் வாடும் மொழிப்போர் தியாகிகளுக்குத் தான் என்ன செய்து கிழித்துவிட்டார்? ஏன் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக வளர்ச்சிக்கு நிதியைக் கூட பார்ப்பன ஜெயலலிதா வந்து தந்தல்லவா பெயரைத் தட்டிச் சென்றார்?

தமிழ் மொழிக்கும் இனத்திற்கும் என்ன வகையான உரிமை, சலுகைகளைக் கோருகிறோமோ அதை பிற தேசிய இன மக்களும் கோருவதை - பெறுவதை அங்கீகரிப்பதுதான் ஜனநாயக பூர்வமான அணுகுமுறையாகும். இல்லையெனில் அது தேசிய வெறி அல்லது பிற்போக்கு - குருட்டு தேசியவாதமாகவே இருக்கும். திராவிட, தமிழினவாதக் கட்சிகள் இதைத்தான் முன்வைக்கின்றன.

கருணாநிதி ஆட்சியிலிருந்த போது உ. பி. யிலிருந்த முலயாம் சிங் தமது மாநிலத்தில் ஆங்கிலத்தை நீக்கிவிட்டு பதிலாக தாய்மொழி இந்தியிலேயே நிர்வாக அலுவலகத் தொடர்புகள் நடக்கும் என உத்தரவு பிறப்பித்தார். அப்பொழுது தி.மு.க. அரசு இதைக் கண்டித்ததோடு உ.பி. அரசு, தமிழக அரசுடன் இந்தியில் கடிதத் தொடர்பு கொள்ளுமானால் பதில் தர மாட்டோம் என அறிவித்தது. முலயாம்சிங்கின் அறிவிப்பை இந்தி திணிப்பிற்கு நிகராக வைத்துப் பார்த்தது குருட்டுப் பார்வையல்லாமல் வேறென்ன? (இதில் பிரச்சனைக்குரிய வேறு ஓர் அம்சம் உள்ளதை நாம் மறுக்கத் தேவையில்லை. தற்போதுள்ள மைய அரசு ஆட்சியின் கீழே, முலாயம் சிங் இந்தியிலேயே தொடர்பு கொள்வதானால் இந்தி பேசாத மாநிலங்களுக்கு அந்தந்த மாநில மொழியின் மொழிபெயர்ப் போடுதான் கடிதத் தொடர்பு வைக்க வேண்டும். இது தவிர்க்கக் கூடாத முன் நிபந்தனைதான்)



''இந்தி ஆட்சி மொழி என்பதை நடைமுறைப்படுத்துவதை இனியும் எவ்வளவு காலம்தான் தாமதப்படுத்துவது?'' — இந்திவெறியன் அர்ஜீன் சிங் சென்னை இந்திப் பிரச்சாரசபை தேசீய விழாவில் பேசியது.

தமிழகத்தில் தெலுங்கு, கன்னடம், மலையாளம், உருது பேசும் சிறுபான்மையினர் 15 சதவிகிதத்திற்கு மேல் வாழும் பகுதிகளில் அவர்களது மொழி அலுவல் மொழியாக இனி கையாளப்படும் என அண்மையில் தமிழக அரசு ஒரு உத்தரவு பிறப்பித்துள்ளது. இதை எதிர்ப்பதன் மூலமாக தமிழினவாத குழுக்களும் தமது குருட்டு தேசிய இன வாதத்தையோ, தேசிய இன வெறியையோ வெளிப்படுத்துகின்றன. நகைமுகன் தலைமையிலான குழு தெலுங்கர்களை வக்கிரமாகச் சாடி சிவசேனாவைப் போல் இனவெறியைக் கக்குகிறது. நெடுமாறன், சுப.வீரபாண்டியன், பெ.மணியரசன் முதலானவர்களின் தலைமையிலான குழுக்கள் இதை இந்தி திணிப்பிற்கு இணையாக உருவகப்படுத்தி எதிர்த்து தமது குருட்டுப் பார்வையை நிரூபிக்கிறார்கள்.

தமிழக அரசு குறிப்பிட்டுள்ள சதவிகிதத்தையோ பகுதிகளையோ நாம் இலக்கணமாக ஏற்கமுடியாது; ஏற்கக்கூடாது. ஆனால் குறிப்பிட்ட சதவிகிதத்திற்கு மே சிறுபான்மையினர் வாழும் பகுதிகளி அம்மக்களுக்கு நியாயமான உரிமைகளையும் சலுகைகளையும் அளிப்பதில் என்ன தவறு? இத்தகைய இன, மொழி பாதுகாப் உரிமை, சலுகைகளை தமிழர்கள் வாழு கர்நாடகா, கேரளா, ஆந்திரா, பம்பாய் ப திகளில் நாம் கோரவில்லையா? பொங்க தமிழ்வருடப்பிறப்பு போன்றவற்றிற்கு பி மாநில அரசுகள் அங்கு வாழும் தமிழர்களுக்கு விடுமுறை வழங்கவில்லை என்பத காக தமிழக அரசு தெலுங்கு வருடப்பிற புக்கு விடுமுறை விடுவதை எதிர்ப்ப தேசிய வெறியைக் குறிக்குமேயொழி தேசிய இன உரிமையைக் குறிக்காது. தம தேசிய இனப்பகுதியில் இருக்கும் சி பான்மை தேசிய இனமக்களின் நலன்களு காக வைக்கப்படும் கோரிக்கைக போராட்டங்களை தேசிய இனப் போரா டமாகவும் சித்தரிக்க முடியாது; அ கோரிக்கைகள் ஏற்றுக் கொண்டு நடை றையாக்குவதால் அதை இன, மொ ஆதிக்கமாகவும் சித்தரிக்க முடியாது. இ யைப் போல் இம்மொழிகளுக்கு ஆதிக் செலுத்த அரசியல், பொருளாதார, ச அடித்தளம் எதுவும் இல்லை.

திராவிடக்கட்சிகளும் தமிழினவா குழுக்களும் ஆங்கிலம் மற்றும் இ திணிப்பை வெறும் பேச்சாகவும், எழுத் வும், அரசு ஆணையாகவும் தான் பார் றார்களே ஒழிய அதன் பண்பாட்டு - க சார ஆக்கிரமிப்பையும் சேர்த்துப் பார் தில்லை. இப்பண்பாட்டு - கலாச்சார ஆ ரமிப்பு அம்மொழிகளின் திணிப்பிற்கு கமான அடித்தளத்தை உருவாக்கித் த தையும் உணர்வதில்லை. ''சார்'' எ வார்த்தையோடு ஆங்கிலேயரின் பழக் ழக்கங்கள், நடை, உடை, பாவனைகள், தனைகள் எத்தனை நம்மை ஆக்கிரமித் ளன? இன்றும் ஆங்கில மொழியே செயற்கைகோள் தொலைக்காட் மூலம் மேலைநாட்டு சீரழிவுக் குப்பை நமது கலாச்சார பாரம்பரிய முறைக அழித்து வருவதைத்தானே பார்க்கிறே அதேபோல் இந்தி திணிப்போடு அ கலாச்சார - பண்பாட்டு திணிப்பும் ந றது. வடக்கைச் சேர்ந்த பிள்ளை

படிப்பகம்

தமிழ்க்கடவுள் முருகனின் அண்ணனாக எப்படி இடம் பிடித்துக் கொண்டதோ அதே போல் ரக்ஷாபந்தன், ஹோலிபண்டிகையை தமிழர் விழாக்களாக ஆக்க பார்ப்பன - மார்வாடி கும்பல்கள் முயற்சித்து வருகின்றன. ''ஸ்வஸ்த்திக்'' போன்ற குறியீடுகள் மூலம் கண்ணுக்குத் தெரியாத முறைகளிலெல்லாம் பண்பாட்டு ஆக்கிரமிப்பு நடந்து கொண்டிருக்கிறது.

இங்கு ஒன்றைக் குறிப்பிட்டாக வேண்டும். ஆங்கிலம், இந்தி ஆக்கிரமிப்பை எதிர்க்கிறோம் என்பதால் மாறாக தாய் மொழியில் அவ்விடத்தில் பிற்போக்கு - நிலப் பிரபுத்துவ - சீரழிவுக் குப்பைகள் நிரப்பப்படுவதை அங்கீகரிக்கிறோம் என்று அர்த்தமில்லை. தேசிய இன அரசு என்பது நிலப்பிரபுத்துவத்தை அதன் சகல அரங்கிலும் தகர்த்துவிட்டு அமைவதாகும். தேசிய இன, மொழி, பண்பாட்டுக் கோரிக்கைகள் ஜனநாயகத்தன்மையுடையதாகவே இருக்க வேண்டும். இந்தி ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்தி விட்டு கருணாநிதி குடும்பத்தின் 'குங்குமம்' பத்திரிக்கைகளையும் 'சன் டி. வி' க்களையுமா கட்டிக் கொண்டு அழவேண்டும்? கருணாநிதிக்கு வேண்டுமானால் மகன் ஸ்டாலின் 'குறிஞ்சி மலர்' நாயகனாக மாறுவது தமிழ் வளர்ச்சிப் பணியாகத் தெரியலாம். மன்சூரலிகான், மணிவண்ணன் வகையறாக்கள் திரைப்படங்களில் பிற்போக்கு ஆபாச சீரழிவுகளையும் மாற்றுக் கலாச்சார குப்பைகளையும் கொட்டி அவற்றிற்கு தமிழ்ச் சாயம் பூசிக்காட்டுவது தி.க., பா.ம.க., தமிழினவாத குழுக்களுக்கு வேண்டுமானால் தமிழ்ப்பண்பாட்டிற்கு இலக்கணமாகத் தெரியலாம். மக்களின் முன்னேற்றத்திற்கு ஊறு இல்லாத விஞ்ஞான ரீதியான - மனமகிழ்ச்சி ரீதியான கலாச்சார, பண்பாடுகளை மட்டுமே மாற்றாக முன்னிறுத்துவதோடு அத்தகையவை பிற தேசிய இன மக்களிடமிருந்து தமிழ் மக்களாலேயே விரும்பி ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பின் அவற்றை அங்கீரிக்கவும் வேண்டும்.

எனவே, இந்தித் திணிப்பைத் தடுக்க தேசிய வெறியோ, குருட்டு தேசிய இனவாதமோ பயனளிக்காது. தமிழக ஓட்டுப் பொறுக்கி கட்சிகள் பிழைப்பு நடத்தவே பயனளிக்கும். இந்தித் திணிப்பு இங்கு பெருந்தேசிய இன ஆதிக்கமாகவும் இல்லாமல் இந்திய அரசு - அரசியல் பொருளாதாரத்துறையில் செல்வாக்கு செலுத்துகிற இந்தி பேசும் மாநிலங்களைச் சேர்ந்த பார்ப்பன - பனியா - மார்வாடி கும்பல் பிற மேல்சாதி - மேட்டுக்குடி கும்பலின் தார்மீக ஆதரவுடன் செலுத்துகிற ஆதிக்கமாகவே உள்ளது. காங்கிரசும், பா.ஜ.க. வும் இக்கும்பலின் கூடாரமாக இருப்பதோடு மத்தியில் இரண்டில் ஒன்றின் ஆட்சியே நிலவுகிற நிலைமை இருப்பதாலும் இந்தித் திணிப்பும் தேசிய இன ஒடுக்கு முறையும் தொடர்ந்து அதிகரிக்கவே செய்யும். ஆனால் தமிழக மக்கள் இன்னமும் இந்த திராவிட, தமிழினவாதக் கட்சிகளை நம்பி மோசம் போகப் போகிறார்களா என்பதுதான் கேள்வி?!

● இருளாண்டி

*தமிழ்மக்கள் இசைவிழா:*

# கர்நாடக இசைக்கு நீதிமன்றக் கவசம்

இந்தியாவின் தேசிய கீதம் - 'ஜன கண மன'. தேசிய இசை? சந்தேகமென்ன, கர்நாடக இசை தான் இன்னும் இதை மத்திய அரசு முறையாக அறிவிக்கவில்லையே தவிர சென்னை உயர்நீதிமன்றம் 'கிட்டத்தட்ட அப்படித்தான்' என்று அறிவித்து விட்டது.

சென்ற ஜனவரி -31 ம் தேதி திருவையாற்றில் நடைபெறுவதாக இருந்த ம.க.இ.க. வின் தமிழ் மக்கள் இசைவிழா, அங்கே அனுமதி மறுக்கப்பட்டதால் தஞ்சை திலகர் திடலில் நடத்தப்பட்டது. காலை முதல் இரவு வரை தொடர்ச்சியாக நடை பெற்ற கருத்தரங்கம் மற்றும் கலை நிகழ்ச்சிகளைக் காணவந்த மக்கள் கூட்டம் திடல் முழுவதும் நிரம்பி வழிந்தது. விழா குறித்த செய்திகள் ஏற்கனவே 'புதிய ஜனநாயகம்' இதழில் வெளிவந்துள்ளதால் மீண்டும் அவற்றை எழுதத் தேவையில்லை. எழுத வேண்டிய விசயம் வேறு இருக்கிறது.

ஜனவரி - 31 நிகழ்ச்சிக்கு சுமார் ஒரு மாதம் முன்பே அனுமதிக்கு விண்ணப்பித்தும் காவல்துறை மவுனம் சாதித்தது. பிறகு சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட்மனு தாக்கல் செய்தவுடன், ''ஏற்கனவே திருவையாற்றில் தியாகய்யர் விழா அதே தேதியில் நடைபெறுவதால் உங்களுக்கு அனுமதி தரவியலாது'' என்று பதிலளித்தது. தியாகய்யர் விழாவிற்கு இடையூறின்றி நகரின் வேறு பகுதியில் நடத்திக் கொள்கிறோம் என்று எமது விண்ணப்பத்தில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தும் அதற்குப் பதிலேதும் சொல்லாமல், தியாகய்யர் விழா நடப்பது ஏதோ நமக்குத் தெரியாத செய்தி என்பதைப் போல் அமைந்திருந்த இந்தப் பதில் — காவல் துறையின் வாடிக்கையான தந்திரம்.

போதுமான அளவு இழுத்தடிக்கப்பட்ட பின் ஜனவரி 28-ம் தேதி ரிட்மனு விசாரணைக்கு வந்தது. ''தியாகய்யர் விழாவன்று தமிழ் மக்கள் இசை விழாவா? அதுவும் திருவையாற்றிலா?'' 'தில்லைக்குப் போகிறேன்' என்று சொன்ன நந்தனை கேலிப் பார்வை பார்த்த பார்ப்பன ஆண்டையைப் போல புருவத்தை உயர்த்தியது உயர்நீதிமன்றம்.

பெரும் பொருட்செலவு செய்து ஏற்பாடு செய்திருந்த விழாவை ரத்து செய்யும் நிலை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதால் தஞ்சையில் நடத்திக் கொள்ள அனுமதி கோரினோம். தியாகய்யர் விழாவுக்குச் செல்லும் வித்துவான்களும், ரசிக மகா ஜனங்களும் தஞ்சாவூர் வழியாகத் தான் செல்வார்கள் என்பதாலும், வித்துவான்கள் தஞ்சையில்தான் தங்குவார்கள் என்பதாலும் தமிழ் மக்கள் இசைவிழாவைத் தஞ்சையில் அனுமதிக்கக் கூடாது என்று வாதாடி

தமிழ்மக்கள் இசைவிழா நிகழ்ச்சி



www.padippakam.com

னார் ஜெயலலிதா அரசின் வழக்கறிஞர். தஞ்சையில் தங்குகின்ற வித்துவான்களின் காதில் தமிழிசை புகுந்து விட்டால் அவர்களுக்கு நேரக்கூடிய ஆபத்து என்ன என்பதை அரசு தரப்பு வழக்கறிஞரால் விளக்கிச் சொல்ல இயலவில்லை, உடனே இசை விழாவிற்காக மகஇக வெளியிட்டிருந்த துண்டறிக்கையை எடுத்தார். ''பார்ப்பன ஆதிக்கத்துக்கு எதிராகப் படை சேருங்கள்'' என்ற வரியைப் படித்துக் காட்டி இதற்குப் பிறகுமா அனுமதிக்கப் போகிறீர்கள் என்று நீதிமன்றத்தை 'மிரட்டினார்'.

வந்தது வரலாறு காணாத தீர்ப்பு. தீர்ப்பின் முக்கியப் பகுதி வருமாறு:

''பொது மக்களுக்கோ, தியாகராஜர் ஆராதனை விழாவில் பங்கு கொள்வோருக்கோ எந்த விதமான இடையூறும் ஏற்படுத்தாமல், அமைதியான முறையில் விழாவை நடத்திக் கொள்ள மனுதாரர் (மகஇக) அனுமதிக்கப் படுகிறார். பேச்சாளர்கள் தமிழிசை, தமிழ்ப் பண்பாடு ஆகியவற்றைப் பற்றி மட்டுமே பேச வேண்டும்; எக்காரணத்தைக் கொண்டும் வேறு சமூகத்தினரையோ, கர்நாடக இசையையோ விமரிசிக்கக் கூடாது. மேற்கூறிய நிபந்தனைகளின் அடிப்படையில் தஞ்சை திலகர் திடலில் 31.1.94 அன்று தமிழிசை விழாவை நடத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனுமதிக்கலாம்''.

பறி கொடுத்த பொருளின் மேன்மையைப் பற்றிப் பேசலாம்; பறித்துக் கொண்டு போன திருடனைப் பற்றிப் பேசக்கூடாது. சுதந்திரத்தைப் பற்றிப் பேசலாம்; வெள்ளைக்காரனைப் பற்றிப் பேசக் கூடாது — இப்படி ஒரு தீர்ப்பு. தமிழிசையிலிருந்து களவாடிய இசைதான் கர்நாடக இசை; களவாடியது பார்ப்பனக் கும்பல். இந்த இரண்டையும் பேசுவதற்குக் கூட உரிமை இல்லாத நாட்டுக்குப் பெயர் தமிழ்நாடு.

கருத்துரிமைக்கு விதிக்கப்பட்ட இந்தத் தடை, அரசியல் சட்டம் குறிப்பிடுகின்ற 'அவசியமான, தவிர்க்கவியலாத கட்டுப்பாடு' என்றால், பெரியார் அம்பேத்கார் நூல்களனைத்துமே தமிழகத்தில் தடை செய்யப்பட வேண்டும். 'களவாடிய இசையே கர்நாடக இசை' என்பது ஒரு புறமிருக்கட்டும்; ஒரு இசை என்ற முறையில் கர்நாடக இசையின் குறைபாடுகளை விமரிசிப்பதற்கு கல்வியாளர்களுக்கும், இசையறிஞர்களுக்கும் கூட உரிமை கிடையாது என்றால்... இனி எஞ்சியிருப்பது ஒரே வழிதான். எதைப்பற்றியெல்லாம் பேசலாம், என்னென்ன கருத்துக்களைப் பேசலாம் என்ற ஒரு பட்டியலை சென்னை உயர்நீதிமன்றம் வெளியிடுமானால் அது அறிவுத்துறை உயர்வுக்கும், கருத்துச் சுதந்திர வளர்ச்சிக்கும் பெரிதும் உகந்ததாக இருக்கும்.

மகஇக-வின் இசைவிழா அறிவிப்பு வந்தவுடனேயே திருவையாற்றுக்கு மெட்டல் டிடெக்டர் வந்து விட்டது. தியாகய்யர் விழாவில் பாட வரும் வித்வான்களுக்கு அடையாள அட்டை. அட்டையுடன் வந்தால் மட்டுமே மேடைக்கு அனுமதிக்கப்படுவார்கள் என்ற இறுதி நேர அவசர அறிவிப்புகள் வானொலி, வானொளியில். இவ்வளவு அமர்க்களமும் எதற்கு? யாராவது மேடையில் உட்கார்ந்து தமிழில் பாடி விடுவார்களாம்; விழாவின் புனிதம் கெட்டுவிடுமாம். தமிழ்த்தீட்டு படாமல் பாதுகாக்கத்தான் இவ்வளவு ஏற்பாடுகள்.

இந்தப் புனிதமெல்லாம் வெறும் புளுகு என்பதை விழாக்குழுவின் செயலாளர் 'கோடை மழை', 'ஜெ.ஜெ.ராகம்' புகழ் குன்னக்குடி வைத்தியநாதன் நிரூபித்துக் காட்டிவிட்டார். தியாகய்யர் விழாவின் மிக மிக மிகப் புனிதமான, பஞ்ச ரத்தின கீர்த்தனைகள் பாடும் தருணத்தில், பாடகர் கூட்டத்தோடு நடிகை சுகன்யாவையும் உட்கார வைத்து, வாயசைக்க வைத்து படப்பிடிப்பும் நடத்தி முடித்து விட்டார். இதனால் புனிதம் கெட்டு விட்டதாக எழுந்த முணுமுணுப்பை ஒரு லட்சம் ரூபாயை வாயில் திணிதது (விழாவுக்கு நன்கொடை) அடக்கி விட்டு ஜுனியர் போஸ்ட் இதழுக்கு ஒரு விளக்கமும் கொடுத்திருக்கிறார்.



தமிழிசை ஆய்வாளர் ஆபிரகாம் பண்டிதர்

''புனிதம் பகவானிடம் உள்ளது. எல்லா புனிதத்தையும் கொடுக்கும் மாபெரும் சக்தி அவருக்கு இருக்கும் போது அதை யாரால் கெடுக்க முடியும்? அது சுப்ரீம் பவர். கங்கையில் குளித்தால் எல்லா அழுக்கும் போய்விடும். அந்தப் புனித கங்கையை யாராவது அசுத்தப்படுத்த முடியுமா? அதுபோலத்தான்! நான் தினமும் வணங்கும் அந்த தியாகபிரும்மத்தின் சக்தியைக் காட்டத்தான் 'பட்டிக்காட்டு பாட்டுக்காரி' என்ற இந்தப் படத்தையே எடுக்கிறேன். இதன் கதாநாயகி தாழ்த்தப்பட்ட வகுப்பில் பிறந்த ஏழைப் பெண். கர்னாடக இசையின் மீது அவளுக்கு ஆழ்ந்த பக்தி. நமது சாஸ்த்ரீய சங்கீதத்தின் பெருமையைப் புரிந்து கொண்டவள். எப்படியாவது அதைக் கற்றுக் கொண்டு தியாகபிரும்மத்தின் முன்னால் உட்கார்ந்து பாடிய பின்னரே தன் உயிர் போக வேண்டும் என்கிற அளவுக்கு அவளுக்கு ஒரு தணியாத தாகம்...ஒரு லட்சிய வெறி...! அந்த நாளும் வருகிறது. தன் லட்சியக் கனவு நிறைவேறிய அந்த ஆனந்தத்தில் 'இந்த ஒரு நாள் போதும். இனி நான் உலகப் பாடகியாகிவிடுவேன்' என்று உணர்ச்சிவயப்படுகிறாள்.....

... அதிலும் நிஜம் இருக்கட்டுமே என்றுதான் சந்நிதியில் ஆராதனையின் போது அந்தக் காட்சியை எடுத்தேன்''.

பகவானின் புனிதம் தமிழில் பாடினால் மட்டும் கெட்டு விடுமா? அப்படியானால் தமிழில் பாடிய தண்டபாணி தேசிகரை மேடையை விட்டு விரட்டி, மேடைக்குத் தீட்டுக் கழித்தது அஞ்ஞானமா, அகம்பாவமா?

யாரோ ஒரு தாழ்த்தப்பட்ட பெண்ணுக்கு நமது சாஸ்த்ரிய சங்கீதத்தின் மேல் பக்தியாம். நடிகை சுகன்யாதான் அந்த 'தாழ்த்தப்பட்ட' பெண்ணாம். தனது நாட்டுப்புற இசையின் மீது பற்று கொண்ட ஒரு ஒரிஜினல் தாழ்த்தப்பட்ட பெண்ணுக்கு, தியாகய்யர் விழாவில் உட்கார்ந்து (இல்லை ஆடிக்கொண்டு) ஒரு தமிழ்ப் பாட்டையாவது பாடி விட வேண்டும் என்று லட்சிய வெறி. தணியாத தாகம். அந்த பட்டிக்காட்டு பாட்டுக்காரியை அடுத்த ஆண்டு அழைத்துக் கொண்டு வரலாமா? படப்பிடிப்பெல்லாம் தேவையில்லை; நிஜமாகவே ஒரு பாட்டு பாட வேண்டும் அவ்வளவு தான்.

விழாக்கமிட்டி செயலாளர் குன்னக்குடி வைத்தியநாதனும், தலைவர் கருப்பையா மூப்பனாரும் பொறுமையாக ஆலோசித்து நல்ல முடிவாகத் தெரிவிக்க வேண்டும். ''புனிதமாவது வெங்காயமாவது — எடு துப்பாக்கியை'' என்று சுப்புடுவே சொல்லி விட்டார். இனி யோசிக்க என்ன இருக்கிறது? காவல் துறையும் உயர்நீதி மன்றமும் செய்வதைப் போல் கடைசி நேரம் வரை இழுத்தடிக்க வேண்டாம். ஏனெனில் அவமானச் சின்னங்களை அழிக்கும் பணியில் தாமதம் கூடாது. எல்லாம் 'ராம பக்தர்கள்' கற்றுத்தந்த பாடம் தான்.

● சூரியன்



படிப்பகம்

www.padippakam.com



மாதாகோயிலில் கற்பூரம் கொளுத்திய இந்துமத வெறியர்கள் பாபுசிங், விசுவலிங்கம்.

ஆனால் பிரச்சினை முடிந்து விடவில்லை. பாண்டிச்சேரியிலுள்ள பாகூர் சர்ச், காளாக்காலில் உள்ள இன்னொரு சர்ச், வேளாங்கன்னி மாதாகோயில், நாகூர் தர்கா ஆகியவை அனைத்தும் இடிக்கப்பட வேண்டும் என்று பட்டியலிடுகிறது இந்து முன்னணி.

ஆதாரம் இருக்கிறதா, இல்லையா என்பது பற்றியோ, வரலாற்றுப் பழிவாங்குதல் நாட்டை எந்த நிலைக்குக் கொண்டு செல்லும் என்பது பற்றியோ பார்ப்பன பாசிஸ்டுகளுக்குக் கவலையில்லை.

ஒவ்வொரு நகரத்திலும், வட்டாரத்திலும் உள்ள மக்களை இந்து, முஸ்லீம், கிறித்தவன் என்று மதரீதியில் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு சிந்திக்க முதலில் தூண்ட வேண்டும். மாதா கோயிலை இடிப்பதை 'இந்துக்கள்' இன்று ஆதரிக்கிறார்களா இல்லையா என்பதல்ல இந்து முன்னணியின் பிரச்சினை. ''200 வருசத்துக்கு முன்னே நம்ம கோயிலை அவுங்க இடிச்சிட்டாங்களாம்'' என்று சாதாரண மக்களைப் பேச வைப்பது அவர்களின் முதல் கட்ட வெற்றி.

இதற்குப் பின் நகரத்தில் அன்றாடம் நடக்கின்ற மதத்துடன் தொடர்பற்ற சம்பவங்களில் மதச் சாயம் பூசப்படும். கற்பழிப்பு, சாராயக் கும்பல்களின் மோதல், வர்த்தகப் போட்டி, வீட்டுமனைத் தகராறு ஆகிய எது கிடைத்தாலும் அதில் 'இந்துக்களின்' சார்பாக இந்து முன்னணி தலையிடும். தமிழகத்தின் பல்வேறு நகரங்களிலும் ''சமூகவிரோதிகள் மற்றும் பொறுக்கிகளின் (இந்து) முன்னணி' 'யை பார்ப்பன, மேல்சாதிக் கும்பல் இப்படித்தான் கட்டியமைத்து வருகிறது.

இந்து முன்னணி எனும் ஏவல் நாய்க்கு எலும்புத் துண்டு வீசும் வர்த்தகர்கள், தரகு முதலாளிகள், நிலப்பிரபுக்கள், அதிகார வர்க்கத்தினர் ஆகியோரை அம்பலப் படுத்துவதன் மூலமும், இந்து என்கிற கூடாரத்துக்குள் ஒளிந்து கொண்டிருக்கும் பார்ப்பன, உயர்சாதி ஆதிக்க வெறித்தனத்தை அம்பலப்படுத்துவதன் மூலமும்தான் இந்த மக்கள் விரோதிகளை முறியடிக்க முடியும்.

தீர்க்க வேண்டிய வரலாற்றுப் பழிகளுக்கான பட்டியல் நம்மிடமும் உண்டு; நம்முடைய வரலாற்று ஆதாரங்கள் எதிலும் குழப்பம் கிடையாது; எதிரிகளின் அங்க, மச்ச அடையாளங்களுடன் அவை மிகவும் தெளிவாகவே இருக்கின்றன.

● பாலன்

தகவல் உதவி : புரட்சித் தூயன்

# நாட்டை மீண்டும் காலனியாக்காதே! மதுரையில் கருத்தரங்கம், பொதுக்கூட்டம்

நாடு மீண்டும் காலனியாக்கப்படுவதையும் இந்துமதவெறி பாசிசத்தையும் எதிர்த்து புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி 28.3.94 அன்று மதுரை தமுக்கம் அரங்கில் கருத்தரங்கமும், மேலமாசி வீதி - வடக்குமாசி வீதி சந்திப்பில் பொதுக்கூட்டமும் நடத்தியது.

கருத்தரங்கில் தலைமையுரையாற்றிய தோழர் வீரபாண்டியன், டங்கல் திட்டம் மற்றும் காட் ஒப்பந்தம் பற்றி பல தரப்பு மக்களும் புரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் இக்கருத்தரங்கம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்று கூறினார். 'உயிர்வாழும் உரிமையைப் பறிக்கும் டங்கல்' என்ற தலைப்பில் பேசிய டாக்டர்.சிவசுப்பிரமணிய ஜெயசேகர் பயனற்ற மருந்துகளும், மனித உயிருக்கும் உடலுக்கும் தீங்கு விளைவிக்கும் மருந்துகளும் பன்னாட்டு நிறுவனங்களால் இந்தியாவில் விற்பனை செய்யப்படுவதையும், டங்கல் திட்டத்தின் விளைவாக ஏற்படவிருக்கும் கடும் மருந்து விலை உயர்வையும் கூறி எச்சரித்தார்.

புதிய பொருளாதாரக் கொள்கை, தொழிற்சங்க உரிமைகளுக்கும், தொழிலாளர் வேலை வாய்ப்பிற்கும் தோற்றுவித்திருக்கும் ஆபத்தை தோழர் சங்கையா விளக்கினார். IMF உலக வங்கியின் ஆணைக்கு உடன்பட்டு நாட்டைக் காட்டிக் கொடுக்கும் நரசிம்மராவ் அரசை தோழர் காளியப்பன் அம்பலப்படுத்தினார். தான் வர இயலாமையால் தனது உரையை அனுப்பி வைத்திருந்த முனைவர் கருணாகரன், டங்கலின் வரவால் நமது பயிர் வகைகளும் மூலிகைகளும் எப்படி அழிக்கப்படும் என்பதை அதில் விளக்கியிருந்தார். பார்ப்பன பாசிசத்தை எதிர்த்து உரையாற்றிய முனைவர் அருளி, தமிழ்ச்சொற்களை பார்ப்பனர்கள் எங்ஙனம் புரட்டிக் களவாடிக் கொண்டனர் என்பதை விளக்கினார். நாட்டை மறுகாலனியாக்க முயலும் மேல்நிலை வல்லரசுகளை முறியடிப்போம் என்ற தலைப்பில் தோழர் கதிரவனின் உரையுடன் கருத்தரங்கம் நிறைவு பெற்றது.

பேரணிக்கு காவல்துறை அனுமதி மறுத்துவிட்டது; மதுரை நகர பு.மா.இ.மு. செயலர் தோழர் ரவியின் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் வி.வி.மு. கம்பம் பகுதியைச் சேர்ந்த தோழர் மோகன், ரயில்வே தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த தோழர் முருகானந்தம் ஆகியோர் பேசினர். ம.க.இ.க.வின் மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் காளியப்பன் சிறப்புரையாற்றினார். தனியார் மயம், டங்கல் திட்டம், ஜெ-அரசின் ஊழல், இந்துமத வெறி பாசிசம் ஆகியவற்றைத் தோலுரிக்கும் பாடல்களுடன் ம.க.இ.க. கலைக்குழுவின் கலை நிகழ்ச்சி சிறப்புற அமைந்திருந்தது. தஞ்சை கலையகத்தைச் சேர்ந்த இளைஞர்கள் நடத்திய டங்கலுக்கு எதிரான மவுன நாடகம் மிக எளிய முறையில் மக்களுக்குச் செய்தியைச் சொல்வதாகவும், அவர்களது நடிப்பாற்றலுக்குச் சான்று பகர்வதாகவும் அமைந்தது. மிக விரிவாக மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டிய டங்கல் எதிர்ப்பு இயக்கத்தின் துவக்கமே மதுரை நிகழ்ச்சி.




ஆசிரியரும் வெளியீடுபவரும் வி. வல்லபேசன், 22, சாமியார் தோட்டம், ஆலந்தூர் சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
அச்சிடுபவர்: எம்.கே. சாமி, பிரேம் பிரஸ், 107-ஏ, பெரியார் பாதை, (மேற்கு) சென்னை - 600 094.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தின் உடைமைகளே!

www.padippakam.com



# கீழைக்காற்று

- நூல் வெளியீட்டகம்
- விற்பனையகம்

## துவக்க விழா

மூச்சுத் திணறச் செய்கிறது. மேற்கில் இருந்து வீசும் நச்சுக்காற்று அது,

உழைப்பை மட்டுமல்ல, மூளை உழைப்பையும் அருவெறுக்கத் தக்க தாக்கும் ஆபாச — ஆடம்பர கேளிக்கைக் களிவெறியாட்டக் கலாச்சாரத்தைப் பரப்புகிறது.

பொதுவுடைமைச் சித்தாந்தம் பொய்த்துப் போனது என்று பொய்யும் அவதூறும் பொழிகிறது. ஏகாதிபத்தியக் கொள்ளையையும் அதற்கான சமூக, பொருளாதார, கல்வி, அறிவியல் நியாய வாதங்களையும் பரப்புகிறது.

சர்வதேசியமயமாக்கப்படும் சந்தை இலாப வெறியால் நாட்டுணர்வும், மொழி—தேசியச் சிறப்புகளும் உரிமைகளும மிதித்து நசுக்கப்படுகின்றன.

இந்த மேலைக் காற்றின் கேடுகளை எதிர்த்து முறியடிக்கும் பணியின் அவசியம் கருதித் துவக்கப்படுகிறது. கீழைக்காற்று நூல் வெளியீட்டகம், விற்பனையகம்.

துவக்க நாள் 1. மே 1994,
ஞாயிற்றுக்கிழமை
நேரம் காலை 10 மணி முதல்
இரவு 8 மணி வரை
இடம்: 10, ஔலியா சாகிப் தெரு,
(நல்பந்தி மசூதி எதிரில்)
எல்லீசு சாலை
(தேவி திரையரங்கு பின்புறம்)
அண்ணாசாலை
அண்ணாசிலை நுழைவு)
சென்னை - 600 002.

பல்வேறு புரட்சிகர - முற்போக்கு நூல்கள், பிரசுரங்கள், வெளியீடுகள், பத்திரிகைகள், ஒலி, ஒளி நாடாக்கள் கிடைக்கும். வருகை புரிந்து பயன்பெறுவீர்! ஆதரவு தாரீர்!

# 'காட்' ஒப்பந்த எதிர்ப்பு தமிழகம் தழுவிய ரயில் மறியல்

ஏப்ரல் 15-ம் தேதியன்று நரசிம்மராவ் அரசு, டங்கல் திட்டத்தை உள்ளடக்கிய காட் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இந்தியாவின் விவசாயத்தையும், தொழில் துறையையும் இந்த ஒப்பந்தம் சீர்குலைக்கும். இந்திய மக்களின் கடுமையான எதிர்ப்பைக் கொஞ்சமும் மதியாது, நம் நாட்டை மீண்டும் காலனி - அடிமை நாடாக மாற்றிவிடும். அமெரிக்கா, ஐரோப்பிய சமூகம் ஜப்பான் போன்ற வல்லரசுகளின் முழு வேட்டைக்காடாக இந்தியாவை மாற்றுவதே இந்த ஒப்பந்தத்தின் நோக்கம். இதன் விளைவாகப் பன்மடங்கு பெருகும் விலைவாசி உயர்வு, வேலையில்லா திண்டாட்டம் ஆகியவற்றால் அடித்தட்டு மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்க நேரிடும்.

நாட்டு நலனுக்கும் மக்கள் நலனுக்கும் எதிரான இந்த ஒப்பந்தத்தில் நரசிம்மராவ் அரசு கையெழுத்திடுவதை எதிர்த்து (14-4-94) அன்று ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு. ஆகிய அமைப்புகள் தமிழகம் முழுவதும் ரயில் மறியல் போராட்டம் நடத்தியுள்ளன. ஏப்ரல் 14-ந் தேதி அன்று காலை 6.15 மணிக்கு ம.க.இ.க, மாநில செயலாளர் தோழர் - மருதையன் தலைமையில் பெண்கள், சிறுவர்கள் உட்பட 30 பேர் திருச்சி சந்திப்பில் பல்லவன் எக்ஸ்பிரஸ் ரயிலை மறித்தனர். இவர்கள் அனைவரும் போலீசாரால் கைது செய்யப்பட்டனர்.

திருவரங்கத்தில் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி நகர செயலாளர் வீரபாண்டியன் தலைமையில் பல்லவன் எக்ஸ்பிரஸ் ரயிலை மறித்தனர். இங்கு 30 பேர் மறியலில் கலந்து கொண்டனர்.

தஞ்சையில் ம.க.இ.க. மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் காளியப்பன், வி.வி.மு. சீர்காழி வட்டாரச் செயலாளர் அம்பிகாபதி தலைமையிலும்,

சென்னையில் ம.க.இ.க. மாநில பொருளாளர் சீனிவாசன் மற்றும் வேலூர் நகர செயலாளர் குமார் தலைமையிலும்,

மதுரையில் ம.க.இ.க. மாநில இணை செயலாளர் கதிரவன் மற்றும் வி.வி.மு. உசிலை வட்டாரச் செயலாளர் சிவகாமு தலைமையிலும்,

விழுப்புரத்தில் வி.வி.மு திருவெண்ணெய் நல்லூர் வட்டாரச் செயலாளர் நாராயணன் தலைமையிலும்,

ஜோலார் பேட்டையில் வி.வி.மு தருமபுரி மாவட்டச் செயலாளர் ஆம்பள்ளி முனிராஜ் தலைமையிலும்,

ஈரோட்டில் ம.க.இ.க. கோவை நகரச் செயலாளர் நசீம் மற்றும் பு.மா.இ.மு. பள்ளிப்பாளையம் நகர செயலாளர் தர்மராஜ் தலைமையிலும்,

திண்டுக்கல்லில் வி.வி.மு. உத்தமபாளையம் வட்டாரச் செயலாளர் மோகன் மற்றும் ஆண்டிப்பட்டி வட்டாரச் செயலாளர் செல்வராசு தலைமையிலும்,

தமிழகம் முழுவதும் நூற்றுக்கணக்கானோர் ரயில் மறியலில் ஈடுபட்டனர். அவர்கள் அனைவரும் கைதாகி, பிறகு விடுதலை செய்யப்பட்டனர்.

காட் ஒப்பந்தம் பற்றி தமிழக மக்களின் கவனத்தை ஈர்க்கவும், அரசுக்கு எதிர்ப்பை தெரிவிக்கவும் நடத்தப்பட்ட இப்போராட்டம் வெற்றிகரமாகவே நடந்தேறியது.

சென்னையில் ரயில் மறியல்

